www.padippakam.com

காலாண்டிதழ்

மே - ஜூலை 2002 இதழ்-1

பெரியாரை
சிந்தனையாளர்
என்று
சொல்ல முடியாது

– ரவிக்குமார்





# கேப்மாரிகள்

## இரு பதிவுகள்

படிப்பகம்

www.padippakam.com




உள்ளம் உறுதி பெற

எண்ணம் எழுச்சி பெற

வாருங்கள்... வரவேற்கிறோம்...

**புஸ்தக் மந்திர்**

**புத்தக விற்பனையகம்**

66, அரவிந்தர் வீதி, (காந்திவீதி அருகே) புதுச்சேரி-605 001.
தொலைபேசி : 348948

**S. PREMRAJ PUBLICITY**

**JAMES ADVERTISERS**

**HOARDING CONTRACTORS**

**PHONE : 0413-221041 CELL : 98423 - 47779**

82, RANGAPILLAI STREET, (OPP. HOTEL SURIYA INTENATIONAL), PONDICHERRY - 605 001.

www.padippakam.com


**2**

## தினமும் நடக்கும் தற்கொலைகள்



பிரபஞ்சன்

## கேப்மாரிகள் **5**

இரு பதிவுகள்



**11**

"பெரியாரை சிந்தனையாளர் என்று சொல்லமுடியாது"

- ரவிக்குமார்



### கவிதைகள்

- மொழி பெயர்ப்பு ....................10
- மு. பொன்னம்பலம் ....................19
- தய். கந்தசாமி....................19
- புதுவை இளவேனில் ....................32
- மகரந்தன்....................39
- சடகோபன்....................49

### கட்டுரை



கடந்த நூற்றாண்டில் ஈழத்தில் தமிழ்த் தேசிய இலக்கியம்............20

- சு. வில்வரத்தினம்



''நேற்றை'' வளைத்துப் பிடிக்கும் நிகழ்காலங்கள் ....................33

- முனைவர் க. பஞ்சாங்கம்

திரைப்படத் தமிழ் ....................40

- முனைவர் த. பரசுராமன்

### சிறுகதை



எகத்தாளம்....................37

- பாமா

### நூல் மதிப்புரை

பயணம்....................36

விதை நெல்....................41

### வாக்குமூலம்



ரீட்டா மேரி வழக்கின் முக்கிய சாட்சி ஏகாம்பரம்....................42



# வல்லினம்

காலாண்டிதழ்

இதழ் -1 மே - ஜூலை 2002

சிறப்பாசிரியர்
மகரந்தன்

பொறுப்பாசிரியர்
பாண்டியன்

ஆசிரியர், வெளியிடுபவர்:
G. புனிதா

அச்சிடுவோர் :
குளோபல் கிராபிக்ஸ், புதுவை - 13.
செல்: 98424 - 37503

தொடர்புகளுக்கு :
எண். 9, Y- பிளாக், அரசு குடியிருப்பு,
இலாசு பேட்டை, புதுவை - 605 008.
தொலைபேசி : (0413) 257151
மின்னஞ்சல் : vallinam@rediffmail.com

தனி இதழ் : ரூ. 20/- ஓராண்டு: ரூ.100/-
ஆயுள் : ரூ. 1000/- வெளிநாடு ஓராண்டு : $25

முன் அட்டை: கேப்மாரிகள் பூர்வீக வீடு, புகைப்படம் : மகரந்தன்
இதழ் வடிவமைப்பு : பாண்டியன், ஆர். சீனிவாசன்


படிப்பகம்

www.padippakam.com

# தினமும் நடக்கும் தற்கொலைகள்

❒ பிரபஞ்சன் ❒



நடிகை மோனல் தற்கொலை செய்து கொண்டு,தனக்கு முன் இது போன்ற முடிவைத் தேர்ந்தெடுத்த நடிகைகளின் வரிசையில் சேர்ந்திருக்கிறார். தமிழ் சினிமா ரசிகர்கள் வருந்தி இருப்பார்கள். மக்கள், செய்தியை வாசித்து சில கணமேனும் மனதில் வருத்தம் இழையோட, அவரைக் குறித்துச் சிந்தித்து இருப்பார்கள். தமிழ்ப் பத்திரிகை இச்செய்தியை விற்பனைக்குகந்த பொருளாக தம் வழக்கப்படி மாற்றியமைத்தன. இக்கொலைக்கு ,யாரோ காதலர் ஒருவரைக் காரணம் காட்டிய சில பத்திரிகைகள் காலம் நகர்ந்து, மக்கள் மனதில் வேறு பிரச்னைகள் இடம் பிடித்தன. மோனல், மறக்கப்பட்டு இருக்கிறார். வெகு சீக்கிரம் அவர் முற்றாக மறக்கப்பட்டு விடுவார். மறக்கடிக்கும் படியாக பல விஷயங்கள் இருக்கவே செய்கின்றன. சட்டசபை, வெளிநடப்பு, அவமரியாதை வார்த்தைகள், நடக்க இருக்கும் முன்னாள் அமைச்சர் கைது, தேர்தல் என்று பலப்பல வித்தைகள் தொடர்ந்து நடக்கின்றன. பாம்புக்கும் கீரிக்கும் நடக்க இருக்கிற சண்டை ( ஒரு போதும் இது நடப்பதில்லை என்றாலும்) குறித்த வெது வெதுப்பான சூட்டில் மக்கள் திசை திருப்பப்படுவார்கள்.

எனக்கு மோனலின் தற்கொலை மிகுந்த சங்கடத்தை ,வருத்தத்தை தருகிறது. நான் மோனலின் ரசிகன் அல்ல. அவர் முகமே என் மனதில் இடம் பெறவில்லை. அவர் எப்படிப்பட்ட நடிகை, எப்படிப்பட்ட மனிதர் என்பதும் தெரியாது. தேவையும் இல்லை. அவர் என்னுடன் வாழ்ந்த என் சம கால மனுஷி. இது எனக்குப்போதும். ஒரு மனுஷி, தற்கொலை செய்து கொள்வது என்பது தன்னை மட்டும் வெறுத்தல்ல அல்லது தன் மேலும் தன் பெற்றோர்,சகோதர சகோதரிகள், நட்பு, சுற்றம், தற்கால சமுதாயம் இவர்களோடு முரணியும் பகைக் கொண்டும், நம்பிக்கை இழந்தும் கோபம் கொண்டும் வெறுத்துமே தற்கொலை செய்து கொள்கிறார். என் முகம் தெரியாத,எனக்கும் முகப் பரிச்சயம் அற்ற ஒரு மனுஷி தான் பகைத்த அல்லது வெறுத்த சமூகத்தில் ஒருவனாகதான் நான் இருக்கிறேன். அந்த தற்கொலையில் எனக்கும் ஏதோ ஒரு வகையில் பங்கு இருக்கிறது. இந்த நினைவே என்னை மிகவும் கவலைக் கொள்ள செய்கிறது. என்னைத் தொந்தரவு செய்கிறது.

மோனல் நம் கால மீடியாக்களால் ஆசீர்வதிக்கப்பட்டப் பெண். மீடியாக்கள் "அழகான" மற்றும் "இளமையான" பெண்மணிகளையே ஆசீர்வதிக்கும். கறுப்பான கிராமத்து உடை, உடல் வாய்ந்த பெண்களை அவை தம் அன்புக்குரிய இடத்தில் வைப்பது இல்லை ஏன்? அவர்கள் குறித்துக் கவலைப் படுவதும் இல்லை. பத்திரிகைகளில் அட்டைப்படமாக இடம் பெறத் தக்கவர்கள் என் று சில பெண்களை அம்மீடியாக்கள் கண்டு பிடித்து வைத்திருக்கின்றன. அந்த பட்டியலில் மோனல் இருக்கிறார். ஆகவே அவர் மரணம் அவைகளால் பொருட்படுத்தப்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக சினிமா போன்ற கவர்ச்சி நிறைந்த துறையில் இருக்கிற பெண்களை நம் மீடியாக்கள் வழிபடும். அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் பெண்மணிகள் என்றால் அவர்கள் சம்பந்தப்பட்ட எல்லாமே அவைகளுக்கு செய்தியாகிவிடும்.

மோனல் தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்த அந்தக் கணம் அந்த நிமிஷம், தமிழகத்தின் ஆறு கோடி தமிழர்களில்,மூன்று கோடிப் பெண்களில் நிச்சயம் நூறு பெண்களாவது தற்கொலை பற்றிச் சிந்தித்து இருப்பார்கள். அவர்களில் ஐந்து பேர்களாவது தற்கொலை முயற்சியில் ஈடுப்பட்டிருப்பார்கள். மோனல் சிறந்த அந்து,முகம் தெரியாத யாரோ ஒரு கறுப்புப் பெண் ,யாரோ ஒருவனின் வேண்டாத மனைவி தன்னையும் முடித்துக் கொண்டிருப்பாள். அந்த மனுஷி பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பத்திரிகையில் இரண்டு வரிச் செய்தியில் அவள் வந்திருக்க கூடும். இதுவும் எனக்கு மனவேதனை தருகிறது, மனித வாழ்க்கையில் இவ்வளவு அற்பமானதா? அப்படி இருக்கலாமா? இருந்தால் மனித வாழ்க்கையின் அர்த்தமென்ன?

குடும்பம் என்கிற இந்த அமைப்பு, மனிதர்களின் சுதந்திர வாழ்க்கையின் எதிரியாக நினைக்கப் பல சான்றுகள் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. அல்லது குடும்பம் என்கிற இந்த அமைப்பு, மனித சுதந்திரத்துக்கு உத்தரவாதம் நல்குகிறதா என்றால் இல்லை. மனித வாழ்வின் ஆகச் சிறந்த "பேறு" சுதந்திரமே என்றால், அதைத் தராத குடும்பம் ஆகிய அமைப்பைச் சிதைத்தால் என்ன?

குடும்ப அமைப்பைச் சிலாகிக்கும் ஏனைய அமைப்புகள் எவை என்று யோசிக்கையில், ஆதரிக்கும் அமைப்புகள் அனைத்துமே போலியானவை மற்றும் வியாபாரத் தனமானவையாக இருக்கின்றன. நமது சங்க இலக்கியங்கள் இயற்கையோடு இணைந்தவை. இயற்கையோடு சிறந்த வாழ்வை சிலாகிப்பவை. எனினும் இவ்விலக்கியங்களின் மறுபக்கம், இவை, அரும்பி வந்த குடும்ப அமைப்பை சிபாரிசு செய்தவை. "வினை", ஆடவர்க்கு உயிர் என்று சொல்லும் சங்க இலக்கியம் பெண்ணுக்கு உயிர், ஆடவர் என்கிறது. இதன் மூலம் பெண்ணின் சார்பு வாழ்க்கையை அழுத்தியது. சங்க காலத்தை ஒட்டி தமிழ் நாட்டில் அரும்பிய சமண பௌத்த மதங்கள், வைதீக மதத்துக்கு எதிரான கருத்து



படிப்பகம்

www.padippakam.com

நிலைப்பாட்டை கொண்டதாயினும் பெண் என்கிற உயிர்ப் பொருளின் மேல் மரியாதை கொண்டவை அல்ல. பெண் பிறவிக்கு மோட்சம் இல்லை என்று பகிங்கிரமாக சொன்னது சமணம்.

சமூக வளர்ச்சி படிகளில் மருத நில வாழ்க்கை அமைப்பே, பெண் ஒடுக்கு முறையின் அடிமைத்தளமாக அமைந்தது. பெண்ணின் இயங்கு வெளி, வீடு என்று சுருங்கிற்று. விபசாரம், அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கை முறையாயிற்று. பரத்தையர்கள் என்று பெண்களின் பிரிவு ஆண்களின் போக்கிய வாழ்வுக்கு என்று அமைந்தது. சமூக அறங்களை விதித்த புலவர்கள், பரத்தையர் பிரிவைக் கடிந்தார்கள் என்பதற்காக சான்றுகள் குறைவாகவே கிடைக்கின்றன.

ஒருவனோடு மட்டும் உடலுறவு கொண்ட பெண் உயர்நிலைப் பெண்ணாக அங்கீகாரம் பெற்றாள். உடன் கட்டை ஏற்றம், மரியாதைக்குரிய வழக்கமாக்கப்பட்டது.

2000 வருஷத்துக்கு பிறகு வந்த மகா சுவேதா தேவி என்ற அருமையான எழுத்தாளர், ஞான பீட பரிசு பெற்ற பெண்ணைப் பற்றி, அவரது இலக்கிய முயற்சிகளைப் பாராட்டி 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' எழுதியது. தமிழில் தினத் தந்தியும் எழுதியது. மகாசுவேதா தேவியின் இலக்கிய முயற்சிகளை பாராட்டி 'எழுதிய 'தந்தி' கடைசியாக இககுறிப்பை மறக்காமல் எழுதியது.

"மகாசுவேதா தேவி இரண்டு முறை விவாகரத்துப் பெற்றவர்"

பெண்ணின் சகல உள்ளதல்களும், அவள் உழைப்பில், திறமையில், ஆர்வத்தில், தத்துவப் புரிதலில் இல்லை. ஒற்றை ஆண் புணர்ச்சியில் அவள் மகத்துவம் புதைந்துள்ளது என்கிற சமூக அடி மன நம்பிக்கையின் வெளிப்பாடே தந்தியின் அந்த கடைசி வரிகள்.

கற்பு என்றும் சொல்லும், அதன் அர்த்தங்களும், பெண்ணின் வெளியை, அவளிடம் இருந்து அபகரித்துக் கொண்ட இரண்டாவது எதிரியாகும்.

கற்பு என்பது பெண், ஆண் இருவருக்குமான மன ஒழுங்கு. இது விதிக்கப்படுவது அன்று. மாறாக



நடைமுறையில் அவளும் அவனும் தேர்ந்து கொண்ட அல்லது அமைத்துக் கொண்ட அன்பு நெறி. பெரியாரின் மொழியில் ஒப்பந்தம். இது இருவரும் மீறக்கூடியதும், உடைத்துக் கொள்ள கூடியதும் ஆன வாழ்க்கை முறை. இது, தெய்வீகமாக்கப்பட்டதும்மீறக்கூடாததுமான இரும்பு வழக்கமாக மாற்றப்பட்டது. பெண்ணுக்கு இழைக்கப்பட்ட பெரும் தீங்கு. ஆகக் கடைசியில் பெண், இதன் பெயரால் தான் விமர்சிக்கப்படுகிறாள். இது, பெண்ணின் அகத்தைச் சிதைக்கிறது. அவள் வாழ்க்கையை நொந்து கொள்ளும் இழி நிலையை இதுவே தருகிறது.

கற்புப் பூச்சாண்டியை உடம்போடு ஒடுக்கியது, பொருளாதாரக் காரணத்துக்கே ஆகும் என்பதே வரலாறு. பொருள், தனிமனிதனிடம் சுருங்கும்போது தன் வாரிசுகளுக்கே, தன் பொருள் போக வேண்டும் என்கிற ஆணின் அவஸ்தையே கற்பை நெருக்கச் செய்தது.

ஒரு படம். பாலியல் தொழிலாளியாக வாழ நேர்ந்த ஒரு பெண்ணை பட்டாளத்துக்காரன் மணக்க தயாராகிறான். திருமணமும் நடக்கிறது. எனினும் மனசாட்சித் தொந்தரவுக்கு ஆளான இயக்குனர்,

**மனித வாழ்வின் ஆகச் சிறந்த "பேறு" சுதந்திரமே என்றால் அதைத் தராத குடும்பம் ஆகிற அமைப்பைச் சிதைத்தால் என்ன?**

அந்த பெண்ணுக்குப் பைத்தியம் பிடிக்க வைக்கிறார்.

காதல் இயற்கை, நம் சூழலில் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. வாழ்வில் ஒரு முறைதான் காதல் வரும் என்கிற, மூட தனமான கருதுகோள், சமூகத்தின் நாபியில் சுற்றப்பட்டுவிட்டது. தவிர்க்க முடியாது. இரண்டும், இரண்டுக்கும் மேற்பட்ட காதல் படிவுகளைக் கொள்ள தேர்ந்த பெண், மனதளவில் இது "பாவம்", என்கிற உணர்ச்சிக் குள்ளாகி மருள்கிறாள். தன்னை சிதைத்துக் கொள்ள, பல அலகுகளில் முக்கியமாக இந்த மனக்குற்ற உணர்ச்சியும் அவளிடம் செயல்படுகிறது. நம் கதைகள், சினிமாக்கள், மத ஆசாரங்கள் இந்த விதமான மனநிலையை பெண்களிடம் தோற்றுவிக்கின்றன.

நம் ஹீரோக்களின் பட்டப் பெயர்களும், ஹீரோயின்களின் பட்டப் பெயர்களும் ஆராயப்பட தக்கவை. நடிகர்களில், சூப்பர் ஸ்டார், சுப்ரீம் ஸ்டார், ஆக்ஷன் கிங், கேப்டன், எவர்கிரீன் ஹீரோ போன்றவை நடிப்பை சார்ந்தும், நடிகர்களின் புகழ் சார்ந்தும் தரப்பட்ட பட்டங்கள். நடிகைகளின் பட்டங்கள்: கன்னடத்து கட்டழகி, கைப்படாத ரோஜா, ஐம்பது கிலோ தாஜ் மகால், செக்ஸ் குயீன், செக்ஸ் பாம், உருகாத ஐஸ் கிரீம் இவை எப்படியோ நேர்ந்தவை அல்ல. நம் சமூக ஆண்பார்வையின் அடிப்படையிலான செயல்பாடுகள். ஒரு நடிகையைப்பற்றிப் பத்திரிகைகள் எடுத்துக் கொள்ளும் சுதந்திரம் அயோக்கியத் தனமானவை. அவர்களின் அந்தரங்க வாழ்க்கையைச் சற்றும் கூச்சம் இன்றி எழுதுகின்ற பத்திரிகைகள் இந்த உரிமையை இந்த "கடையர்களுக்கு" கொடுத்தது எந்த சக்தி.

மனைவியின் மீது கணவனுக்கு இருப்பதாக நம்பப்படும் உரிமையின் மறுபக்கம் இது. அப்படி ஒரு உரிமை உண்மையில் இல்லை. இருக்குமாயின் ஆண் / பெண் இருவருக்குமே அது பொதுவானதாக இருக்கவேண்டும்.

இது இவர்களாக ஒரு மோசமான கணவனின் இடத்தை எடுத்துக் கொள்கிற நிலை. எந்த நடிகன், எந்த நடிகையுடன் உறவு கொள்கிறான்

www.padippakam.com

என்ற "பிம்ப்" மனோநிலையில் செயல்படும் பத்திரிகைகள் தமிழ் நாட்டில் மிக அதிகம்.

ஒரு கலைஞர் அவரது அந்தரங்க வாழ்க்கை பகிரங்கப்படுகையில் திடுக்கிடவோ, அவமானப்படவோ அவசியம் இல்லை. எல்லோருக்கும் அவரவர் நிலையில் அந்தரங்கங்கள் இருக்கவே செய்கின்றன.

ஒரு பெண்ணின் அந்தரங்கம் பற்றிய உண்மையோ, கற்பனையோ ஆன ஒரு செய்தியை வெளியிடுகின்ற பத்திரிகைகாரனை விடவும் கீழானவன் எவனும் இல்லை. ஒரு கேவலமானவன் எழுதுவது தமக்கு கேவலம் தரும் என்பது நம்புவது அறிவீனமல்லாமல் வேறு என்ன?

பெண், உடம்பல்ல. அவ்வாறு நினைப்பதில் இருந்தே பிற்போக்குத்தனம் தொடங்குறது. சோவியத் ரஷ்யா, உடையும் என்று ரஷ்யா, உடைபடும் முன்னரே தெரிந்தது. ரஷ்யாவில் அழகிப் போட்டி நடந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட அழகிகள் சர்வதேச அழகிப் போட்டிக்கு அனுப்பப்பட்டார்கள். லெனினோ, ஸ்டாலினோ இதை அனுமதித்திருக்கமாட்டார்கள். கம்யூனிஸ்டுகள், பெண்களை உடம்பாக 36-26-36 ஆக பார்க்க மாட்டார்கள். பார்ப்பவர்கள் கம்யூனிஸ்டாக இருக்க முடியாது. இந்தியர்கள், ஆங்கில இந்தியர்களாக தமிழர்களாக உருமாறியது போன்ற விபத்து இது. ரஷ்யர்கள், அமெரிக்க உளவாளிகளால் ,அமெரிக்க ரஷ்யர்களான பரிமாற்றம் இது.

சினிமா, சினிமாவின் காவியங்களை இங்கு செய்யவில்லை. அது ஒரு கலை ஊடகம். அல்லது அ- கலை ஊடகம். அது தொழில் நுட்பம் சரி. அது அரசியல் தலைவர்களை உருவாக்கும்போது பாமர ரசிகர்களை உருவாக்கும் போது சினிமாவாக செயல்படாமல் அ-சினிமாவாகிறது. அ- சினிமா, சினிமாவாக இருக்க முடியாததில் வியப்பில்லை.

சினிமா நடிகர்கள், நடிகைகள், மாமனிதர்கள் அல்லர். அவர்கள் மனிதர்கள் அவர்களுக்கும் மலஜல அவஸ்தைகள் உண்டு. அவர்களும் நாம் உண்பதையே உண்பவர்கள். அவர்களையும் கொசு கடிக்கும். அவர்கள் காய்கறிவாங்க வருவதில்லை. போஸ்ட் ஆபீசுக்கு,ரேஷன் கடைக்கு , மின் துறைக்கு கட்டணம் கட்ட வருவது இல்லை. வராமல் பண்ணிய சக்தி எது? முதலாளிகள். நடிகை, நடிகர்களின் உயர்ந்து நிற்கும் ஸ்திதியை முதலாளிகள், தங்கள் லாபப் பண வேட்டைக்கு உருவாக்கம் செய்தார்கள். இதை இந்த நட்சத்திரங்கள் அனுமதித்தார்கள். சாதாரண மனிதர்களோடு சாதாரணமாக பழகவே தவித்தார்கள். தங்களை இதன் மூலம் தனிமைப்படுத்திக் கொண்டார்கள். மக்கள் உறவும்,ஆதரவும், ரத்தமும், சதையுமாக நேரே பெறும் பாக்கியம் அற்றுப் போனார்கள்.

பணம் பிடுங்கி அம்மாக்கள், அப்பாக்கள்,உறவுகள், சகோதரிகள் என்கிற விஷ நட்புக்கு அப்பால் அவர்கள் உறவு நீளவில்லை. உலகத்து உண்மை மனிதர்கள் அவர்களுக்கு அன்னியம் ஆனார்கள்.

ஆகவே அவர்களுக்கு வாழ்வு கசந்தது.

மோனல் ஒரு பாவப்பட்ட உதாரணம் தான். பல கோடி மோனல்கள், மோனல்களின் நிலையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள், இந்த குடும்பப் புதைச் சேற்றில், ஆண் ஆதிக்க ஒடுக்குமுறைகள், மீடியாக்கள் விதைத்திருக்கும் விஷ வித்துக்கள், சமூகம் வெட்டி வைத்திருக்கும் மரணக் குழிக்கள். இவைகளில் இருந்து தப்பிப்பது எங்ஙனம்?

எவைகளை ஒழித்தால் பெண்கள் வாழ்வு சுகப்படுமோ, அவைகள் ஒழிக்கப்படவேண்டும். பெண்கள் சுதந்திரம் சாத்தியமாகாத வரை மானுடச் சுதந்திரம் சாத்தியம் இல்லை. தற்கொலை, எவர் செய்துகொண்ட போதிலும்,அதில் நமக்கு சம்மந்தம் இருக்கிறது என்பதை உணர்தல் வேண்டும். சட்டப்படிக்கு நாம்காரணம் இல்லையென்றாலும், மனித தர்மத்தின்படி சக மனிதர் அனைவரும் குற்றவாளிகளே ஆவர்.

GLOBAL GRAPHIC

Global
GRAPHIC

128,Second Floor, Thiruvalluvar Salai,
Pillaithottam, Pondicherry-13.
Cell : 98424 - 37503



படிப்பகம்

www.padippakam.com

# கேப்மாரிகள்

## இரு பதிவுகள்



பிரிட்டிஷ் காலனிய ஆட்சிக் காலத்தில் இந்தியா வெங்கும் பல்வேறு சமூகப் பிரிவினர் குற்றப் பரம்பரையினராக முத்திரைக்குத்தப்பட்டிருந்தனர். தீவிரக் கண்காணிப்பும், கட்டுப்பாடும், கடுமையான அடக்குமுறையும் இம்மக்கள் மீது செலுத்தப்பட்டன. சில பகுதிகளில் ஆதிக்க உயர்சாதியினரால் திருட்டு போன்றவற்றில் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இதில் பல பழங்குடியின சாதிகளும் அடங்கும். தமிழகத்திலும் கூட பல இடைநிலைச் சாதிகள் குற்றப் பரம்பரையினராக நடத்தப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. வடமாவட்டங் களில் இதனை எதிர்த்துப் போராட்டங்களும், அவற்றின் அடிப்படையில் அரசியல் மாற்றங்களும் கூட நிகழந்துள்ளன.

இன்றைக்கும் குற்றப் பழி சுமக்கும் பிரிவினராக உள்ளவர்கள் தான் இந்த கேப்மாரிகள். புதுச்சேரி அருகேயுள்ள கூனிச்சம்பட்டு என்ற கிராமத்தில் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த ஊரில் வசிக்கும் மக்கள் வெளியூர்களுக்குச் சென்றால் தங்கள் ஊரின் பெயரைச் சொல்லமாட்டார்களாம். கூனிச்சம்பட்டு என்று சொன்னாலே கேப்மாரிகள் என்று கருதி கைது செய்து விடுவார்களாம் காவல்துறையினர். இப்படி சொல்லமுடியாத வேதனையுடன் வாழ்ந்து வரும் இம்மக்கள் பற்றிய பதிவு இது. இவர்களின் இந்த இழிவு நிலை ஒழிய வேண்டும் என்ற நோக்கத்திலேயே இதனை முன் வைக்கிறோம்.

### பதிவு ஒன்று

கூனிச்சம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த **முத்து கருப்பன்** *(வயது :65)* என்பவர் கூறியதிலிருந்து....

"...எனக்கு பத்து வயசு இருக்கும். அப்போ, 'அந்தத் தொழில்' செய்யக் கூடாதுன்னு ஊர் கட்டுமானம் பண்ணி இவங்க வீட்டையெல்லாம் இடிச்சி ஊரரார் பூந்து கொள்ளையடிச்சாங்க. அதுல சிலபேர் ஊர்ல சப்போர்ட் பண்ணி, பிரஞ்சுகாரன் ஆட்சியிலேயே ஊரரார் எல்லாரையும் கொண்டும் போய் உள்ளே வச்சாங்க. அதன் பிறகு இவங்க எங்க போனாலும் போட்டோ பாஸ் ஒன்னு கொடுத்தாங்க, பிரஞ்சுகாரன் இருக்க பாத்து, இவங்க எங்கன்னா போவணும்னா அதை எடுத்துக்கினு தான் போவணும். இந்த சுதந்திரம் வாங்கனாங்க இல்ல, அதன் பிறகு இது ரத்து பண்ணிட்டாங்க. எங்க போவாங்களோ என்னவோ, பம்பாய், டில்லின்னு வட நாட்டுக்குப் போயி, பேங்க், போஸ்ட் ஆபிஸ் அப்படீன்னு அடிச்சிக்கினு வருவாங்க. திருவிழாவுல பொம்பளைங்க செய்வாங்க. அதே தொழில் தான் இன்ன வரைக்கும்.

அப்போ இந்தத் தெருவுல எல்லாம் வசதியாத் தான் இருந்தாங்க. அப்போ இந்த ஊர் ஒத்துமையில நாங்க எல்லாம் நெருக்கடி செஞ்சோம். அப்போ சில பேர் வெளிய கௌம்பிட்டாங்க. அவங்க தங்களை மொதலியார்ன்னு தான் சொல்லுவாங்க. ஊர்ல கேப்மாரின்னு சொல்வாங்க. இங்க அஞ்சி ஊடுதான் இருக்குது இப்ப. இதோ இந்த ஊடெல்லாம் எல்லாம் காலியாகிப் போச்சி (என்று எதிரிலே இருந்த வீட்டைக் காட்டுகிறார்). சிலபேர் போயிட்டாங்க. இந்தத் தொழில் செய்யச் செய்ய அப்படியே நகர்ந்து போயிட்டாங்க. அப்படியே இருந்துக்கினு அந்தத் தொழில் தான் செய்துகினு இருக்காங்க. திருவிழான்னா, திருப்பதி, பழநி, மருவத்தூர் போவாங்க. இந்த ஐத்தாலம்மன் கோயில் தெருவுல நாலு குடும்பம் தான் இப்போ இருக்கு. அந்தத் தெருவுல நாலு, ஐந்து குடும்பம் இருக்கு.

பொம்பளைங்களும் இந்தத் தொழிலுக்குப் போவாங்க. ஆண்களை மயக்கி திருடறது எல்லாம் கிடையாதாம். சொல் கேள்வியா நான் சொல்றேனே... திருவிழாக்களில், பொம்பளைங்க அவங்க நகைகளை அவுத்து பணத்தையெல்லாம் முடிஞ்சிகினு படுத்துக்கு வாங்க. இவங்களும் அதே மாதிரி போய் படுத்திருந்து, மயக்கம் கொடுத்திட்டு எடுத்துக் கிறாங்கன்னு சொல்லக் கேள்வி. பொம்பளைங்க பொம்பளைங்கக் கிட்டதான் எடுப்பாங்க. ஆம்பளக் கிட்ட கொண்டு வந்து கொடுப் பாங்க. எல்லா பொருளையும் எடுத்து கொடுத்திடுவாங்க. எங்கன்னா தனியா, யாருக்கும் தெரியாத மாதிரி இருந்துக்கினு வாங்கி வச்சிக்கினு இருக்கணும். அது மாதிரி தொழிலு பொம்பளைங்க, வயசானவங் களுக்கு. மீதி பேரெல்லாம் திருச்சி யில் இருந்து ஒரு கேங்க் கிளம்பும். அப்போ போவாங்க, பம்பாய்க்கு, டில்லிக்கு.

ஊர் கட்டுமானம் இருந்தப்போ எல்லாரையும் அடிச்சே தொரத்திட் டாங்க. ஊரவுட்டு ஒடிட்டாங்க. அப்புறம் ஒரு மாசம் சென்னு போலீஸ் கீலீஸ ஆயக்கட்டிக்கினு பணம் கொடுத்து, ஊர்வுள்ள வந்தாங்க. அப்போ அவங்கிட்ட

www.padippakam.com

பணம் இருந்தது. ஊரார்கிட்ட அவ்வளவு வசதி இல்லை. அவங்கக் கிட்ட இதுமாதிரி அப்பப்ப பணம் வருது. நாம விவசாயம் பாத்தாத்தா னுங்களா? அதனால அவங்க போலீசுக்கு பெரிய எடத்துல பணம் கொடுத்து வந்துட்டாங்க ஊருக் குள்ள. எவ்ளோ நிலமெல்லாம் வெச்சிருந்தாங்க. இப்போ வித்துட் டாங்க, ஊர் தொல்லை தாங்காம சிலபேர் போயிட்டாங்க. ஊர் பஞ்சாயத்து பண்ணும் போது பெரியதம்பி கவுண்டரு, நடேசக் கவுண்டரு எல்லாம் இருந்தாங்க. இப்போ எல்லாம் எறந்துட்டாங்க. இவங்கத் தலைமையில ஊர் ஒன்னா கூடினாங்க. அவங்க என்னா செஞ்சிட்டாங்கன்னா, அவங்க பொம்பளைங்களை ஊரார் கெடுத்திட்டங்கன்னு கேஸ் போட்டு சிலபேரை கொண்டு போய் உள்ளே வெச்சாங்க. பணத்தைக் கொடுத்து அவங்க அதுமாதிரி பண்ணிட்டாங்க. பிரஞ்சுக் காரங்க ஆதரவா இருந்தாங் கன்னு நான் சொல்லலை. அப்போ பிரெஞ்சுக்காரன் பெரிய போலீஸா இருப்பான். அவன் கீழ வேலை பார்த்த தமிழ் போலீஸ்காரங்க பணத்தை வாங்கிக்கினு அதுமாதிரி பண்ணிட்டாங்க. இதனால பிரச்சினை வந்து, அத்தோட அவங்க எல்லாம் ஊரை விட்டே போயிட் டாங்க.

ஸ்டேஷன்லே இவங்க போட்டோல்லாம் வெச்சிருப்பாங்க. அப்போ, இந்த ஊர்ல ஒரு ஸ்டேஷன் இருக்கும். காட்டேரிக்குப்பத்துல ஒன்னு இருக்கும். அத்தோட வில்லியனூர் தான். ஸ்டேஷன்ல இவங்க போட்டோல்லாம் ஒட்டி வெச்சிருப்பாங்க. எனக்குத் தெரிஞ்சே இதெல்லாம் இருந்தது. ஆனா உள்ளூர்ல எதுவும் தொழில் காட்டமாட்டாங்க. எல்லாம் வெளியூர்ல தான். நம்ம வூட்டுங்க கிட்ட எல்லாம் ஒன்னும் தொட மாட்டாங்க. கெடந்தாக் கூட எடுக்க மாட்டாங்க. ஆம்பளைங்க வெளியூர் போவாங்க. பொம்பளைங்க திருவிழா காலத்துல போவாங்க. அப்பல்லாம் எவ்வளுவு வசதியா வாழ்ந்தாங்கத் தெரியுமா? ஆனா அந்தச் சொத்து தங்கலைங்க. அதா வது ஒரு நாளைக்கு ரெண்டாயிரம், அய்யாயிரம் கூட செலவு பண்ணுவாங்க. கறி, மீனு, குடின்னு



**'அந்தத் தொழில்'**
**செய்யக் கூடாதுன்னு**
**ஊர் கட்டுமானம் பண்ணி**
**இவங்க வீட்டையெல்லாம்**
**இடிச்சி ஊரார் பூந்து**
**கொள்ளையடிச்சாங்க**

ஆடம்பரமா செலவு பண்ணுவாங்க. யாருக்கு வோனும்னாலும், குடிக்கிற வங்களுக்கு கொண்டுபோய் ஊத்து வாங்க. இருநூறு, முந்நூறு கூட ஒரு ஆளுக்கு செலவு செய்வாங்க.

எல்லாம் பழக்க வழக்கங்களும் நம்பளைப் போல் தான். ஆதியில, அதாவது இருவது, முப்பது வருஷத் துக்கு முன்னல, அவங்க ஊட்டுக்கு போவக்கூடாதுன்னு ஊரார் இருந்தாங்க. இப்ப அதெல்லாம் இல்ல. இப்ப எல்லாம் ஒன்னு. அப்புறம் அண்ணன் தம்பி மாதிரி பழகி, இப்ப நம்ம இதுக்கு அவங்க வருவாங்க, அவங்க இதுக்கு நாம போவறது தான்.

அவுங்க அடையாள அட்டை வெச்சிருப்பாங்க. எங்கயாவது போவணும்னா போலீஸ் ஸ்டேஷ னில் சொல்லிட்டு போவாங்க. அதே மாதிரி, போற எடத்துல இருந்து ஸ்டேஷன்ல கையெழுத்து வாங்கி வந்து இங்க கொடுக்கனும். இதே மாதிரி வன்னியர்லேயும் இரண்டு பேர் காசி நாதன், அம்மாவாசைன்னு பேரு, குற்றவாளிங்க லிஸ்ட்ல இருந்தாங்க. இவங்களும் அதே மாதிரி எங்கயாவது போனா சொல்லிட்டு போவனும். சொல்லாம போயிட்டா உள்ளே கொண்டுபோய் வெச்சிடுவாங்க. கையெழுத்து அன்னாடம் போட வேண்டியது இல்லை. போலிஸ்காரங்க திடீர்னு வருவாங்க. எங்க போயிருக்காங் கன்னு விசாரிப்பாங்க. இரண்டு நாளா ஆளாக் காணாம்னா கேப்பாங்க. அப்புறம் அவங்க வந்தாங்கன்னா, கொண்டு போய் உள்ளே வெச்சிடுவாங்க. ஒரு வாரம் வில்லியனூருக்கு கொண்டு போயிடு வாங்க.

அப்பெல்லாம், இங்கிருந்து தமிழ் நாட்டுக்கு போவனும்னாவே போட்டோ பாஸ் இருந்தாத்தாங்க போவலாம். நான் கூட இன்னும் வெச்சிருக்கேன் பிரெஞ்சுக்காரன் போட்டோ பாஸ். எங்கன்னா ஊருக்கு போவனும்னா கஸ்டம்ஸ்ல பதிஞ்சிட்டு இன்ன ஊருக்குப் போறேன், இத்தனை நாள் சென்னு வருவன்னு எழுதி கொடுக்கனும். பாண்டிச்சேரியில் இருக்கிற அத்தனை பேருக்கும் போட்டோ பாஸ் உண்டு. அது இல்லாது போனா, தெரியாம போவனும். இப்படி கொல்லியால பூந்து, சேறு பூசிகினு அந்தாண்ட போய் குளிச்சிட்டு அப்படி போயிடலாம். சுத்தி போலீஸ் இருக்கும். ரோட்டே போவனும்னா பாஸ்போர்ட் இருந்தாத்தான் போலாம். இப்ப வெளிநாட்டுக்கு போவறத்துக்கு பாஸ்போர்ட் வெச்சிருக்கிற மாதிரி இங்க பாண்டிச்சேரியிலேயும் கொடுத்து இருந்தாங்க. சைக்கிளு, மோட்டார் சைக்கிளுக்கு, மோட்டார் சைக்கிள்ளலாம் பெரும்பாலும் அப்ப இல்ல, சைக்கிளுக்கு நெம்பர் போட்டு அந்த சைக்கிள எடுத்தும் போவனும். அந்த நெம்பர கொண்டு வந்து கஸ்டம்ஸ்ல, காட்டிட்டு பதிஞ்சுக்கினு வந்திடலாம். அதெல் லாம் இப்ப இல்லங்க.

அப்போ, இந்த ஊர்ல இருபது, முப்பது வூட்டுக்கு மேல 'அந்தத் தொழில்' செய்யவறங்க இருந்தாங்க. திருப்பதியில இருந்து போலீஸ் அடிக்கடி வந்து இவங்களை புடிச்சிக்கினு போவாங்க. இப்பெல் லாம் யாரும் அது மாதிரி வர்றது கிடையாது. இப்பெல்லாம் தொழிலுக்கு போறாங்களோ இல்லையோ, ஆனா திருப்பதின்னா மட்டும் பயப்படுவாங்க. ஏன்னா, இவங்கக் கூட இருந்தவன் ஒருத்தன் அங்க இருந்துக்கினு காட்டிக் கொடுத்துக்கினே இருந்தான். போலீஸ் அவனை வெச்சிக்கினு இங்க வந்து புடிச்சிக்கினு போவாங்க. போலீஸ்லாம் இப்ப வர்றது இல்ல. இங்க கர்ணன்னு ஒருத்தன் ஒன்றை லட்ச ரூபாய் எடுத்திட்டான் பேங்க்ல இருந்து. எல்லாத்தையும் செலவு பண்ணிட்டு



படிப்பகம்

www.padippakam.com

தொன்னூத்து மூனாயிரம் இருந்தது போலீஸ்காரங்க வந்தாங்க. பேக்கோட, அப்படியே இட்டுக்கினு போனாங்க. என்னாச்சோ, பணத்தை எடுத்துக்கினு ஆள வுட்டுட்டாங்க.

ஊருல தனியா ஒரு நாள் திருவிழா்வே செய்வாங்க. சித்தர மாசம், திரௌபதியம்மன் கோயில் திருவிழாவுல 18-ல் ஒரு நாள் அவங்க திருவிழா செய்வாங்க. அப்போ எல்லாம் திருவிழாவை ஆடம்பரமா செய்வாங்க. அப்படி ஆடம்பரமா செய்தப்பதாங்க ஒரு கேஸ்ல மாட்டிக் கிட்டாங்க. ஒரு 35, 37 வருஷம் இருக்கும். தர்மராஜா கிளம்பரது. நெருப்பு முடிஞ்சி மறுநாள் பட்டாபிஷேகம் முடிஞ்சிட்டு கடைசி நாள் தர்மராஜா கிளப்பி வருவாங்க. அப்ப வந்து ஊரெல்லாம் தர்மம் செய்வாங்க. வூட்டுக்கு வூடு கடலை, சாதம் கிண்டி அவங்க அவங்க ஃப்ரியா கொடுப்பாங்க.

அந்த சமயத்துல, இவங்களுக்கு நல்ல வருமானம். கேரளாவுக்கு போய் பேங்க்ல அடிச்சிக்கினு வந்துட்டாங்க. அப்ப வந்து இன்ன செஞ்சாங்கன்னா உயிர் யானை திருக்கோவிலுள்ள போய் எடுத்தாந்து அந்தத் திருவிழாவை இவங்க செய்தாங்க. இது தெரிஞ்சுப் போய் போலீஸ் வந்து புடிச்சிக்கிட்டு போய்ட்டாங்க. நமக்கு அவமானம்னு தோணுது. அவங்க அதப்பத்தியெல்லாம் கவலைப்பட மாட்டாங்க.

பிரெஞ்சுக்காரங்களுக்குக் கீழே வேல பார்த்த தமிழ் போலீஸ்காரங்க பணத்துக்காக அவங்களுக்கு கொஞ்சம் சப்போட்டா இருந்தாங்க. பணம் கொடுக்கறாங்க இல்ல. பத்து ரூபாய் கொடுத்தா அப்போ பெரிசு தானுங்கள. ஒரு நாளெல்லாம் வேலை செஞ்சா காலணா கொடுப் பாங்க. அப்போ பத்துரூபா என்கிறது பெரிசு தானுங்களே. ஊர் கட்டுமானத்துல கொஞ்ச நாள் விலக்கி வெச்சி பார்த்தது. ஆனா முடியலைங்களே. நமக்குத் தான் தொந்தரவா இருந்தது. போலீஸ் அவங்களுக்கு சப்போர்ட்ட இருந்தது. பசங்களையெல்லாம் இந்தத் தொழிலுக்கு இட்டுகினு போகமாட்டாங்க. 25 வயசுக்கு மேல கல்யாணம் ஆகி போற இடத்தில இருந்து பொம்பளை பசங்க போகுங்க. பெண்ணுங்கள அவங் களுக்குள்ளே தானே கொடுத்துக் கறாங்க. கொழந்தை கிழந்தை பெத்துக்கினு அப்புறம் போவுதுங்க. மத்த முதலியாருங்க கொடுக்கவும் மாட்டாங்க. எடுக்கவும் மாட்டாங்க. இங்க சிலபேர் பாண்டியில இருந்து தெரியாம கட்டிக்கினு இருக்காங்க. நானும் இவங்க வீட்டு விசேஷங் களுக்கு போயிருக்கேன். பசங்களுக் கெல்லாம் நாம எப்படி என்ன பேர் வெக்கறமோ அதே மாதிரி தான் அவங்க பசங்களுக்கும் பேரும் வெப்பாங்க.

திருடுனா கேப்மாரின்னு சொல்றாங்களே அதுமாதிரி தான். அவங்க அந்தத் தொழில் செஞ்சாங்க. அதனால அந்தப் பேரு. இந்தத் தொழில் பண்ணறவங்க கடலூர் முட்லூருக்கு அந்தாண்ட மாரியாங் குப்பத்தில இருந்தாங்க. மலப்பட்டி யில முந்நூறு, நானூறு பேர் இருக்கிறாங்க. அப்புறம் ராம்ஜி நகர்ல இருக்காங்க. அவங்க திருடக் கூடாதுன்னு, காமராசர் இருக்கப் பாத்து பஞ்சு மில்லு ஒன்னு ராம்ஜி நகர்ல கட்டிக் கொடுத்தாரு. அவங்க மட்டும்தான் வேலையில இருப் பாங்க. இப்பயும் இங்க இருந்தவங்க கொஞ்சம் பேர் அங்க போய் வேலையில இருக்காங்க. மாரியாங் குப்பம், திருச்சி எல்லாம் போயிருக் கேன். இங்கேயாது விவசாயம் பார்ப்பாங்க. அங்க அது கூட கிடை யாது. அங்கேயெல்லாம், இதே தொழில் தான். பொம் பளைங்க எல்லாம் சாராயம் காய்ச்சு வாங்க. ஆம்பளைங்க அந்தத் தொழிலுக்கு இருபது, முப்பது பேரா போவாங்க.



**உள்ளூர்ல எதுவும் தொழில்காட்டமாட்டாங்க. எல்லாம் வெளியூர்ல தான். நம்ம வூட்டுங்ககிட்ட எல்லாம் ஒன்னும் தொடமாட்டாங்க. கெடந்தாக் கூட எடுக்க மாட்டாங்க.**

இவங்க செய்யறது எல்லாம் சினிமாவுல காட்டற மாதிரிதாங்க இருக்கும். பேங்க்ல இருந்து யாரா வது பணம் எடுத்துக்கினு வந்தாக்கா சாணி அடிக்கறாங்கலே அந்த இது, அப்புறம் ஆள் ரொம்ப ஆடம்பரமாக இருப்பானுங்க, நமக்கு அவ்வளவு சூட்சுமம் போதாதது. நேரா கேஷியர் கிட்ட போயி எல்லாம் பத்து ரூபா நோட்டா மாத்தி செதறவுட்டுட்டு, என்னாங்க பணம் கீழ கெடக்குன்னு சொல்லி, அத அவர் எடுக்கப்பாத்து, இது பாட்டுக்கு வந்திடும். நெடுக்க ஆள் இருப்பாங்க. எடுத்து அப்பிடி இப்பிடி கொடுக்க அவங்க ஆள்கிட்ட வந்திடும். அவங்க அங்கே யேதான் இருப்பாங்களாம். பப்ளிக்கா செய்வாங்க. கன்னக்கோல் போடறது எல்லாம் பண்ண மாட் டாங்க. அதெல்லாம் சும்மாங்க. அவங்க எப்படி அந்தத் தொழில் செய் யறாங்க என்கிறத நம்ம கிட்டயே செய்து காட்டுவாங்க. கூச்சப்பட மாட்டாங்க அது என் னமோ, அது அவங்க தொழில், பரம்பரையா வருது. வேற தொழில் செய் யலாம். ஆனா, அது மாதிரி சாப்பிட முடி யாது, செலவு பண்ண முடியாதே. அரசாங்கமே கூட ஒன்னும் செய்ய முடியல. அவங்களுக்கு உதவின்னு அரசாங்கம் ஒன்னும் செய்யததில்ல.

● பதிவில் இடம்பெற்ற பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

தொகுப்பு: கோ. சுகுமாரன்,
மகரந்தன்,
பாண்டியன்


படிப்பகம்

www.padippakam.com

## பதிவு இரண்டு

கேப்மாரிங்கிறது திருடங்களோட சாதி. திருட்டு அவங்களோட முக்கியமான தொழில். இந்த சாதி பொம்பளைங்க பெரிய ஊருங்களுக்கு... டில்லி, பம்பாய், சென்னை, மாயவரம், கும்பகோணம் போவங்க. உள்ளூர்ல திருட மாட்டாங்க. ஆம்பளைங்க பேங்க்ல திருடுவாங்க. அவங்க பல பாஷ பேசுவாங்க. அப்பறம் செயின், நெக்லஸ், வளையல்னு போட்டுக்கிட்டு போவாங்க. ஆனா, பணக்காரங்க மாதிரி இருக்க மாட்டாங்க.

காரணியோட நடுவுல இருந்து கொஞ்சம் தள்ளி கேப்மாரிகளுக்கு ஒரு தெரு இருக்கு. அவங்களுக்கு என்று சொந்தமாக நெலமெல்லாம் இருக்கு. நாங்கள் அவங்க நெலத்துல வேல பாத்திருக்கோம். அந்த சாதிப் பொம்பளைங்க மாட்டுக்கறில்லாம் சாப்பிட மாட்டங்க. திருட போறதுக்கு கொஞ்ச நாளுக்கு முன்னாடி அவங்க குல தெய்வம் காக்கப்பட்டனுக்கு பூச போடுவாங்க. ஆத்துக்கு பக்கத்துல இருக்குற காக்கப்பட்டன் கோயில் ரொம்ப அமைதியா இருக்கும். வேற எந்த சத்தத்தையும் கேட்க முடியாது. காக்கப்பட்டன் சாமியே பாக்க பயங்கரமா இருக்கும். இந்த கோயில்ல வூட்டுக்காரு, கொழந்தைங்களோட மூனு பகல் பொழுது, மூனு ராப்பொழுதும் தங்கி இருப்பாங்க. திருடப் போறதுக்கு முன்னாடி காக்கப்பட்டனின் உத்தரவுக்காக காத்திருக்கிற, அந்தநேரத்துல ஒரு நாளைக்கு மூனு மொற ஆத்துலயே குளிப்பாங்க. காக்கப்பட்டன் உத்தரவு கிடைச்சப் பிறகு போவாங்க. இதுக்காக ஒரு மாசம் வரைக்கும் கூட காத்துக்கிட்டு இருப்பாங்க.

அவங்க பெரும்பாலும் பெரிய கோயில்ல நடக்கிற திருவிழாவுக்குப்போவாங்க. யாரும் அவங்கள சந்தேகப்பட மாட்டாங்க. அதுக்கு அவங்க போட்டுக்கிற நகைங்கதான் காரணம். அவங்க வைச்சிருகிற ஒரு மருந்தால, கூட்டத்துல இருக்கிறவங்க கழுத்து , கையில எல்லாம் பீச்சி அடிப்பாங்க. உடனே செயின், வளையல்களெல்லாம் கத்திரிச்சு எடுத்துக்குவாங்க. யாரும் இத கண்டு பிடிக்க முடியாது. கண்ண மூடி தெறக்கறதுக்குள்ளே செஞ்சிடுவாங்க. அவங்களுக்கு அவங்களோட தொழில் பத்தின நுணுக்கம் தெரியும், நகைங்கள திருடன ஒடனே அங்கிருந்து போயிட மாட்டாங்க. யார்கிட்டே திருடப்போறாங்களோ, அவங்களை சுத்தி இவங்களோட ஆளுங்க சுத்திக்கிட்டே இருப்பாங்க. சின்ன சந்துல நிக்கிற அவங்களோட ஒரு ஆள்கிட்ட இந்த நகைங்கெல்லாம் போய் சேர்ந்திடும். பதினைஞ்சு இல்லன்னா இருபதாயிரம் ரூபா மதிப்புக்கு பணமோ, நகைங்களோ, போதுமானது கெடச்சதும் கிராமத்துக்கு வந்துடுவாங்க.

பொம்பளைங்க இதுக்கெல்லாம் பயப்படமாட்டங்க. அவங்க எல்லாத்துக்கும் தயாரா இருப்பாங்க. அவங்களை கைது பண்றதுக்காக பல வாட்டி போலீஸ் வந்திருக்கு, நாங்க சேரிப் பொம்பளைங்க, அவங்க ஜெயில்ல இருந்து வர்றத பாக்க



**திருட போறதுக்கு கொஞ்ச நாளுக்கு முன்னாடி அவங்க குல தெய்வம் காக்கப்பட்டனுக்கு பூச பொடுவாங்க**

ரோட்டுக்கு போயிருக்கோம். அவங்களுக்காக நாங்க செல நேரம் வருத்தப்படுவோம். பாவம், அந்த பொம்பளைங்கள கைது பண்ணிக்கினு போகும்போது நாங்க அழுதிருக்கோம். அவமானந்தான் அது. 'வெல்லக்கட்டி மாதிரி அழகா இருக்கிங்க, ஏன் இந்தத் தொழிலுக் கெல்லாம் போறீங்கன்னு' நாங்க கேட்டோம். ஆனா கொஞ்சங்கூட வெட்கமோ, அவமானமோ,உணர்ச்சியோ இல்லாம, அந்த வண்டியில சௌரியமா, ஒட்காந்துகிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு போனங்க. ரொம்ப நாள் அவங்க அங்க இருந்தது இல்ல. ரெண்டு நாளைக்கு அப்புறம் ஊருக்கு வந்துடுவாங்க. யாராவது ஒருத்தர் போய் பெயில்ல எடுத்துடுவாங்க.

ஒரு வாட்டி இந்திராகாந்தி நாட்டுல இருக்கிற எல்லா திருடங்களையும் கைது பண்ணச் சொல்லி உத்தரவு போட்டாங்க. போலீஸ்காரங்க எப்போ வந்து கைது பண்ணுவாங்களோன்னு உண்மையிலேயே கேப்மாரிங்க பயந்தாங்க. உடனே நகை,பணம், தங்க காசுன்னு எல்லாத்தையும் மல்லாட்டக் கொல்லியில தூக்கி எறிஞ்சிட்டாங்க. போலீஸ்காரங்க வந்து போனதும் ஏறக்குறைய எல்லாத்தையும் எடுத்துக் கிட்டாங்க.

வள்ளிக்கு இன்னா நடந்த துன்னே தெரியாது. அவ மாட்டுக்கு புல்லு புடுங்கப் போன எடத்துல ரெண்டு பவுன்ல தங்ககாசு மின்னிகிட்டு கிடக்கிறத பார்த்து எடுத்தா. ஊரார் வந்து மெரட்டினாங்க. ஆனாஅவ அத, அவளோடதுன்னு சொல்லிட்டா. இத நான் திருடல, யாரு பையில இருந்தும் எடுக்கல, கொல்லியில போவும் போது பாத்து எடுத்தேன். வெச்சிகிட்டேன்னு சொன்னா. அத அவ, அவளோட பொண்ணு கல்யாணத்துக்கு வெச்சி கினா. பங்காரு ரெட்டியாரு கொல் லில உழுதுட்டு வரும் போது தங்கவேலுவுக்கும் அது மாதிரி ஒரு தங்கச் செயின் கெடச்சிது. அவனையும் மெரட்டி பாத்தாங்க. ஆனா, அவன் திருப்பிக் கொடுக்கல. அத வித்து தான் அவன் கல்லுவூட்ட கட்டனான். இந்த சேரியில இருக்கிற ஒரே கல்லுவூடு அவனது தான்.

கேப்மாரிங்க பயந்த காலம்னா அதுதான். அதுக்கு அப்புறம் எனக்குத் தெரிஞ்சி அவங்கள கைது பண்றதுக்கு யாரும் வரல. சும்மா போலீஸ் காரங்க இங்க வரக்கூடாதுன்னு கவுண்டரு மேலிடத்துலே சொல்லிட்டார்னு அவங்க சொன்னாங்க. இது, ஊர்க்கே கெட்ட பேரா இருந்தது. இப்போ கூட போலீஸ் காரங்க வந்தா ,அந்த ஒரு கேப்மாரி பொம்பள எல்லாத்தையும் பாத்துக்குவா. அவளுக்கு அல்லி பூ மாதிரி ஏழு கொழந்தைங்க. போலீஸ் காரங்க, கலெக்டருலருந்து, சப் - இன்ஸ்பெக்டரு வரைக்கும் எல்லாரையும் சமாளிப்பா. எல்லாரையும் அவளுக்கு தெரியும். ஒரு



படிப்பகம்

www.padippakam.com

நாளைக்கு அவள நான் காட்டறன் சின்னம்மா. அவளுக்கு எதிர்ப்பா இந்த ஊர்ல யாரும் துப்பு தரமாட்டாங்க. ஏன்னாகஷ்டம் வரும்போது கேப்மாரிங்க ஒவ்வொருத்தரும் அவங்க நகைங்கள தட்டான் விலைக்கு கொஞ்சம் கொறைச்சு, கவுண்டர்கிட்ட வித்துடுவாங்க. அதனால அந்தப் பணமெல்லாம் இந்த ஊர்ல தானே பொழங்கும்.

நான் மட்டும் கூலி வேல செய்ய கேப்மாரிங்களோட போவேன். ஆனா,ஆராயி, லார்ப்பாயி ரெண்டு பேரும் அவங்க படியாள். ரெட்டியார் நெலத்துல வேல செய்யும் போது கொஞ்சம் நெல்லோ, மல்லாட்டையோ எடுக்க எங்களுக்கு பயமா இருக்கும். ஆனா அவங்க பணத்தையோ,நகைகளையோ எப்படி,இப்படி தைரியமா திருடறாங்கன்னு ஆச்சரியமா இருக்கும். "அது நீங்க எப்படி துணி உடுத்திறங்கறத பொருத்தது. இது மாதிரி கிழிஞ்ச துணியெல்லாம் போட்டுக்கிட்டு இருந்தா சந்தேகப்படுவங்க"ன்னு ஆராயி எங்கிகிட்ட சொல்வா. டவுன்ல பெரிய வீட்டுங்க கதவத் தட்டி குடிக்க எதாவது கேட்பாங்க. அப்புறம் ரொம்ப தூரத்துல இருந்து வர்றதாவும், கொஞ்சம் திண்ணையில உக்காந்துக்கலாமான்னு கேட்பாங்க. பாக்க நல்ல துணி, நகையெல்லாம் போட்டிருப்பாங்க. ஆம்பளை தொணை இல்லாம தனியா வேற வந்திருப்பாங்க. வீட்டுக்காரங்க அவங்கள வெளியில உட்கார வெக்க மனசு இல்லாம உள்ளே கூப்பிடுவாங்க. அதுக்கு அப்புறம் மொல்லமா, பேச்சு கொடுப்பாங்க. வீட்டுக்காரங்ககிட்ட பேசிக்கிட்டே நம்பவச்சி வீட்டுலேர்ந்து எத எடுக்கலாம்ன்னு, அப்படியே நோட்டம் விடுவாங்க. வேண்டியத எடுத்துக்கிட்டு ஊர்க்கு வந்துடுவாங்க. வீட்டுல சும்மா இருக்கப்பாத்து இந்த கதை யெல்லாம் சொல்லி சொல்லி சிரிப்பாங்க. அவங்க வழிமொறையெல்லாம் சேரியில எங்களுக்கு தெரியும்.

கனமான மூட்ட முடிச்சுகளோட அவங்க ஊர்குள்ள நொழையறதை நீங்க பார்க்கலாம். பஸ் ஸ்டாண்டுல அவங்க எறங்கியதும் அவங்க சொமய ஏத்திக்கினு வூட்டுக்கு எடுத்துக் கிட்டு போவறதுக்கு எங்க ஆம்பளைங்க கட்டவண்டிய வேகமா



வெல்லக்கட்டி மாதிரி அழகா இருக்கீங்க, ஏன் இந்தத் தொழிலுக் கெல்லாம் போறீங்கன்னு நாங்க கேட்டோம்.

ஓட்டிக் கிட்டு போவாங்க. அவங்க ரெண்டு ரூபா தருவாங்க. ஒருவாட்டி வயசான பொம்பள ஒருத்தி அவளைய எடுத்து வந்ததுக்காக மூனுரூபா கொடுத்திருக்கா. ஊருக்குள்ள வந்த உடனே அவங்கள திருலகத்துல இருக்கிற சாராயக்கடையில பாக்கலாம். வயசான பொம்பளையாக இருந்தாலும் சரி, மேச மேலே இருக்கற பாட்டில், முட்ட, கோழிக்கறி எல்லாம் காலியாகற வரைக்கும் குடிப்பாங்க. எதையும் கூட்டி சொல்லல சின்னம்மா. இந்த சேரியில யார வேணும்னாலும் கேட்டுப் பாருங்க.

சந்தையிலேர்ந்து திரும்பி வரும் போது அந்த சாராயக்கடை வழியா வருவோம். குடிச்சிட்டு சத்தமா பேசிகிட்டு, கெக்களிச்சி கிட்டு இருப்பாங்க. அத வெச்சே அவங்க போயிட்டு வந்ததை பத்தி தெரிஞ்சிக்கலாம்.

சாராயக்கடைக்கு பக்கத்துல பார்த்தா எங்களையும் கூப்பிடுவாங்க. எனக்கு தெரிஞ்ச ஆராயியோட மொதலாளி 'ஏய் வேல் பாக்கத்தா!, ஏய் வேல் பாக்கத்தா, என்ன நான் குடிக்கிறதையே பாக்குற. கொஞ்சம் குடிக்கிறியா? என்ன சொல்ற' ன்னு கேட்டார்.

'இல்லம்மா இதெல்லாம் எனக்கு பிடிக்காது. நான் குடும்பத்துல இருக்குற பொண்ணு இத மாதிரி பழக்கமெல்லாம். நான் வெச்சிக்கிறது இல்ல. அதுக்கு பதிலா எனக்கு ரெண்டு ரூபா தந்தா வெத்தல பாக்கு வாங்கிக்கிவேன்னு சொன்னேன்', எனக்கு ரெண்டு ரூபா கொடுத்தார்.

கொஞ்ச நாள் கழிச்சி காக்கப்பட்டனுக்கு நேத்தி கடனுக்காக பூஜை செய்வாங்க. ரெண்டு மூணு சேவக் கோழி, மூணு ஆட்டுகெடா வெட்டி பொங்க வெப்பாங்க.

அந்த கோயிலுக்கு முன்னால தலைய மொட்ட அடிச்சி, சந்தனம் பூசிக்குவாங்க. அவங்ககிட்ட வேல செய்யற ஆளுங்களுக்கும், ஏழைங்களுக்கும் கொடுக்கறதுக்காக அந்த பொங்க பானைய டிராக்டர்ல வச்சி எடுத்துகிட்டு வருவாங்க. கேப்மாரிங்க கிட்ட இருந்து அத அவங்க வாங்கிக்குவாங்க. இந்த பூஜ மாதிரியே தொரௌபதியம்மன் கோயிலு திருவிழா சமயத்துல ஒரு நாள் செலவை கேப்மாரிங்க ஏத்துக்குவாங்க. அத அவங்க விருப்பம் போல செய்வாங்க. ரொம்ப வேடிக்கையா இருக்கும்.

அவங்கள்ள பாதி பேர் தான் இப்போ இந்த திருட்டு தொழில செய்றாங்க. மீதி நாட்களெல்லாம் ஊர்லேயே தங்கி வெவசாயம் பாப்பாங்க. கொள்ளையடிச்ச பணத்துல இருந்து அவங்கள்ள பல பேர் நெலமெல்லாம் வாங்கியிருக்காங்க. அந்த நெலமெல்லாம் ஐத்தாலம்மன் கோயிலுக்கு பின்னாடி இருக்கு. அவங்கள பல பேருக்கு மோட்டார் பம்ப்பெல்லாம் சொந்தமா இருக்கு. அதெல்லாம் நல்லா வெளையற நெலங்க. மாட வளர்த்து பால் கறந்து விப்பாங்க. வேல வேகமா நடக்க ரெட்டியார், கவுண்டருங்க கொடுக்கற கூலியை விட கேப்மாரிங்க அதிகமா கொடுப்பாங்க. எங்க ரெட்டியார் நடவுக்கு ஆறு ரூபா கொடுத்தா, தொழில் தெரிஞ்சு வேகமா நடவு நடற பொம்பளைங்களுக்கு இவங்க எட்டு ரூபா கொடுப்பாங்க. அதே மாதிரி கூலி

www.padippakam.com

கொடுக்க சொல்லி நாங்களும் கேட்போம்.

நாங்க ரெட்டியார்ட்ட சொல்லிட்டு எங்க அதிகமா கூலி தர்றாங்களோ அங்க போய்டுவோம். இது சகஜம் தான். இருந்தாலும் இது ரெட்டியாருங்க, கேப்மாரிங்களுக்கு எடையில சண்டைய உண்டாக்கிடுச்சி பெரிய ரெட்டியார் அவங்கள கூப்ட்டு "இன்னாப்பா ஏன் இவ்ளவு கூலி அதிகமா கொடுக்கிறீங்க. நெத்தி வேர்வை நெலத்துல விழ நாங்க பாடுபடறோம். உங்கள போல இல்லை. நீங்க திருடப்போங்க. பணம் சம்பாதிக்கறதுன்னா என்னன்னு உங்களுக்கு தெரியாது. கஷ்டப்பட்டாதான் அதோட அரும உங்களுக்கு புரியும். ஆனா ஒழைக்காம அது ஒங்களுக்கு கெடைக்குது இல்ல. அதான் நெறயா சேத்து வெச்சிருக்கவன் கிட்ட போய் திருடுங்க. வெதைக்கிறதுக்கு நாங்க இப்போ ஆறு ரூபா தர்றோம். பத்து பன்னெண்டு பேர் கொல்லியில வேல செய்யறாங்க. நீங்க ஏன் அதிகமா கொடுக் கிறீங்க"ன்னு கேட்டார்.

"கோவபடாதீங்க, நாங்க அதிகமா கொடுத்தது தப்பு தான். மழைக்கு முன்னாடி வேலய முடிக்க வேண்டி இருந்தது. அதான் கொடுத்தோம்" ன்னு மத்தவங்க சொன்னாங்க. நான் கூட இந்த வருஷம் அர ஏக்கர் நெலத்த குத்தகைக்கு கொடுக்கச் சொல்லி ஆராயி மொதலாளிக்கிட்ட கேட்டேன்.

"நீங்க ஒன்னும் பயப்படாதீங்க. எங்கிட்ட பத்து மாடு இருக்கு. பத்து வண்டிக்கு சாணி போடும். நல்லா எருவாகும். கம்பு, கேழ்வரகு பயிரிடுவேன். நல்ல வெளச்சலை கொடுக்க பாடுபடுவேன். உங்களுக்கும் போதுமான பங்கு கெடைக்கும்"ன்னு சொன்னேன். அதுக்கு அவரு "இந்த வருஷ மழைக்கு அப்புறம் பாக்கலாம், வேல்பாக்கத்தா!"ன்னு பதில் சொல்லிட்டாரு.

● இப்பதிவு, கூனிச்சம்பட்டைச் சேர்ந்த வீரம்மா என்ற தலித் பெண்மணியின் சுயசரிதையில் (வீரம்மா சுயசரிதையில் இடங்கள், பெயர்கள் மாற்றப்பட்டே தரப்பட்டு இருக்கின்றன) இருந்து எடுக்கப்பட்டது. தமிழ் ஒலிப்பதிவில் இருந்து பிரெஞ்சுக்கு மொழி பெயர்க்கப்பட்டு, பின் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. வீரம்மாவின் சுயசரிதை இது வரையில் தமிழில் வெளியிடப்படவில்லை. வீரம்மா சென்ற வருடம் காலமானார்.

ஆங்கிலம் வழித் தமிழில்: **மகரந்தன்.**

ஓவியம் : மாறன்

(Viramma, Life of an Untouchable, Viramma, Josiane Racine, Jean Luc Racine. Verso London - 1997)

---

**எதை அழிப்பது முதலில்:**
**நிழலையா உடலையா,**
**நேற்று எழுதிய வார்த்தையையா**
**அல்லது இன்று எழுதிய வார்த்தையையா**
**மேகம் கவிந்த நாளையா**
**அல்லது தெளிவான நாளையா**

**ஓர் ஒழுங்கை கண்டுபிடிக்க வேண்டும்**
**உலகை அழிக்கக் கற்று கொள்வது**
**விரைவில் நம்மையே நாம் அழித்து கொள்ள உதவும்**

ராபர்ட்டோ ஜுர்ராஸ் (Roberto Juarroz)
(ஸ்பானிய மொழியிலிருந்து ஆங்கிலம் வழியாக)

**இன்று என் வாழ்வின் இறுதி நாளாக இருக்கலாம்.**
**சூரியனை நோக்கி அசைப்பதற்காக என் வலது கையை உயர்த்தினேன்,**
**சூரியனிடமிருந்து விடைபெறுவதற்காக நான் என் கையை அசைக்கவில்லை.**
**இன்னும் என்னால் சூரியனை பார்க்க முடிகிறது என்ற சந்தோஷம் அவ்வளவுதான்.**

பெர்னாண்டோ பெஸோவா (Fernando Pessoa)
(போர்ச்சுகீசிய மொழியிலிருந்து ஆங்கிலம் வழியாக)

தமிழில்: **கண்ணன். எம்.**


படிப்பகம்

www.padippakam.com

# "பெரியாரை சிந்தனையாளர் என்று சொல்லமுடியாது" - ரவிக்குமார்



**தமிழகத்திலுள்ள தலித் சிந்தனையாளர்களில் குறிப்பிடத்தக்கவர் ரவிக்குமார். கவிஞராகவும் (இதுநான் யாவருக்கும், தர்மபுரி எதிரொலிகள்), நாடக ஆசிரியராகவும் (வார்த்தை மிருகம், பலியாடுகள்), இலக்கிய விமர்சகராகவும் (கண்காணிப்பின் அரசியல்), மனித உரிமை போராளியாகவும் (தலைவர், மக்கள் சிவில் உரிமைக் கழகம்), தலித் படைப்பாளியாகவும், பத்திரிகையாளராகவும் (இந்தியா டுடே, தாய் மண், தலித் முரசு, B.B.C.) பல்வேறு தளங்களில் தலித் மக்களின் உரிமைகளுக்காக இயங்கிக் கொண்டிருப்பவர். ரவிக்குமார் மீது களம் புதிது இதழில் அ.மார்க்ஸ் வைத்த விமர்சனம் அண்மைக் காலமாக சிறுபத்திரிகை வட்டாரத்தில் பரப்பரப்பாக பேசப்படுபவை. இச்சூழலில் வல்லினத்துக்கு ரவிக்குமார் அளித்த நேர்காணலிலிருந்து....**

*மகரந்தன் : இந்தியா டுடே இலக்கிய மலர் வெளிவந்த போது அதை மலம் துடைக்க பயன்படுத்த வேண்டுமென்று கூட்டம் போட்டீர்கள். ஆனால், அடுத்த மலரிலிருந்தே எழுத ஆரம்பித்து விட்டீர்களே, காரணம் என்ன?*

*ரவிக்குமார்:* அந்த இந்தியா டுடே இலக்கிய மலர் பற்றி சில விஷயத்தை தெளிவுப்படுத்த வேண்டும். அப்போதே அதில் என்ன நடந்தது என்பது பற்றி ஒரு ரிப்போர்ட் எழுதி பத்திரிகைகளுக்கெல்லாம் தந்திருக்கிறேன். மதிமுக பத்திரிகை போர்வாளில் அது வெளியிடப் பட்டிருந்தது. அதில் உதாரணமாக என்ன அப்படி காட்டியிருந்தேன் என்றால் எம்.ஆர். ராதா அவர்களுடைய மலேசியப் பயணப் பேச்சு பற்றி' எழுதியிருந்தேன். அதில் அவர் சொல்லுவார், சரஸ்வதியின்னு புத்தகத்தை நாம் தொட்டு கும்பிடுகிறோம். அங்க என்னன்னா கக்கூஸில் மலம் துடைக்க பயன்படுத்துகிறார்கள் என்று. எழுத்து என்பது ஒரு ஆயுதமாக வெகுமக்களுக்கு எதிராக பயன்படுத்தப்படும்போது அதன் ஆற்றலை அழித்து, அதை வெறும் காகிதமாக, அதனுடைய பொருண்மையை பண்புக்கு மாற்றுவதென்பது ஒரு போராட்ட யுக்தி. அதைத்தான் இந்தியா டுடே இலக்கிய மலர் குறித்து நாங்கள் செய்தோம் என நான் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன்.

அந்த மலர் முற்றாக அங்கு நிராகரிக்கப்படவில்லை. வெங்கட் சாமிநாதன் கட்டுரைதான் மிகுந்த தாக்குதலுக்கு ஆளானது. அதில் வந்திருந்த வாஸந்தியின் சிறு கதையை ராஜன்குறை அதே கூட்டத்தில் பாராட்டிப் பேசினார். நானும் அதில் உடன்பட்டு கருத்து சொன்னேன். சுஜாதாவின் மஞ்சள் ரத்தம் கதை குறித்த எனது பேச்சுதான் பிறகு முன்றிலில் வெளியானது. அதை கட்டுரை வடிவில் அல்லாமல் ஒரு கதை போன்ற வடிவத்தில் நான் எழுதியிருந்தேன். சுஜாதா ஒரு பார்ப்பனர் என்று நிரூபிப்பது அல்ல என்னுடைய நோக்கம். பிரதியை வேறு வகையாக வாசித்தால் என்ன கிடைக்கும் என்கிற முயற்சி தான் அது. அது மட்டுமல்ல, அதை ஒரு விமர்சனக் கட்டுரையாக இல்லாமல் ஒரு கதையாக வாசிக்க முடியும் என்கிற சாத்தியப்பாட்டை கொடுத்திருந்தேன்.

அதுக்குப்பிறகு என்ன நடந்தது என்றால், உண்மையிலேயே யாரோ ஒருவர் மலம் துடைத்து அனுப்பியதாக கோமல் சுவாமிநாதன் சொல்லி நான் கேள்விப்பட்டேன். அவர் இதை மிகவும் வருத்தத்துடன் சொன்னார். ஆனால் வாஸந்தி இருப்பதால் அது பார்ப்பனப் பத்திரிகை என்று பார்ப்பதல்ல எங்கள் நோக்கம். ஆனால் அந்தப் பத்திரிகையில் அப்படியான தன்மைகள் வெளியிடப் பட்டிருந்தன.

அதே, வெங்கட் சாமிநாதன் தலித் சிறப்பிதழ் Indian Literature -க்காக தொகுத்தபோது உனக்கு என்ன தகுதியிருக்கு என்ற கேள்வியை எழுப்பினயவன் இந்த ரவிக்குமார் தான். அதில் கட்டுரை எழுதவேண்டும் என்று அவர் கேட்டபோது அதை மறுத்தவனும் இந்த ரவிக்குமார் தான். ஆனால் அதிலேயே, தலித் என்று சொல்லிக் கொண்டு யாரெல்லாம் இடம் பெற்றார்கள் என்பதை உண்மையிலேயே அது பற்றி அக்கறை உள்ளவர்கள் யோசித்து பார்க்க வேண்டும். ஏனென்றால் "தமிழ் தலித் இலக்கியம்" என்று தொகுக்கப்பட்ட அந்தத் தொகுப்பில் நிறைய போர் தலித்தே அல்லாதவர்கள். இதை இது வரை யாரும் பேசியதே இல்லை.

இந்த இந்தியா டுடே நிகழ்ச்சி நடந்ததற்கு பிறகு, அடுத்த இலக்கிய மலருக்கு முன், வாஸந்தி நேரடியாக பாண்டிச்சேரிக்கு வந்தார். என்னை சந்திப்பதற்காக எனக்கு போன் செய்தார். அப்பவும் நான் தனியாகப் போகவில்லை. நான், பேராசிரியர் கல்யாணி, சுகுமாரன், பிரபஞ்சன், விசாலம் போன்றவர்களும் இருக்கும் போது தான் பேசினேன். அப்போது அவர்கள் என்ன


படிப்பகம்

www.padippakam.com

சொன்னார்கள் என்றால், "கடந்த இலக்கிய மலரில் இப்படி நடந்துவிட்டது. நான் அப்போது டெல்லியில் இருந்தேன். அங்கிருந்து வந்தபோது எனக்குத் தெரிந்தவர்களிடம் மட்டும் தான் வாங்கினேன். இதில் எனக்கு எந்த உள்நோக்கமும் கிடையாது. அப்படி நான் உங்கள் மனதை புண்படுத்தி இருந்தால், உங்களிடம் நேரிடையாக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று சொன்னார். இதற்கு அங்கிருந்த எல்லோருமே சாட்சி. எனவே, "ஒரு பத்திரிகைக்குள் எப்படி மற்ற கருத்துக்களும் வர வேண்டும் என்பதற்கு நீங்களெல்லாம் இதில் எழுதுங்கள். நீங்கள் என்ன விரும்பு கிறீர்களோ அதை எழுதுங்கள். வேண்டுமென்றால் வரும் இதழை தலித் இலக்கிய சிறப்பிதழாகவே கொண்டு வருவோம்" என்றும் கூறினார். அப்பவும் நான் சொன்னேன் இந்த இலக்கிய மலரில் மட்டுமல்ல பொதுவாகவே உங்கள் பத்திரிகை யில் அப்படியொரு தொனி இருப்பதை காண முடிகிறது என்று உதாரணங்களோடு சொன்னேன். அதற்கு வாஸந்தி அவர்கள் சொன்னார், "இது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இப்படியெல்லாம் நீங்கள் பார்ப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உண்மையிலேயே அப்படியெல்லாம் எங்களுக்கு பார்க்கத் தெரியலை. ஆனால் இப்படி பார்க்கிறவர்களெல்லாம் எழுதினால் தானே வெளியே வரும். நானே பத்திரிகைக்குள் எப்படியெல்லாம் சண்டை போட்டுக் கொண்டு இருக்கிறேன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியாது" என்று சொன்னார்.

பிறகு நான் வைத்த விவாதங்களையெல்லாம் ஒத்துக்கொண்டு என்னை எழுதச் சொன்னார்கள். அப்போதும் நான் ஒத்துக் கொள்ளவில்லை. பிரபஞ்சனுக்கு நினைவு இருக்கும் பட்சத்தில் அப்போது அவர்கள் கூறியதை இங்கே கூற விரும்புகிறேன். "இதுக்காக ஒரு எடிட்டர் வந்து இருக்கீங்க. அதெல்லாம் அவர் எழுது வாருங்க. நான் பார்த்துக்கிறேன்" என்று சொல்லி நடுவில் சில விவாதங்களையெல்லாம் எடுத்து வைத்தார். அப்போது கல்யாணியும் இருந்தார்.



**"பத்திரிகை என்பது ஒரு முதலாளியால் முதலீடு செய்யப்படலாம். ஆனால் அதில் மாறுபட்ட பல்வேறு சக்திகள் செயல்படுகின்றன. அதுவும் பாப்புலர் மீடியாவில் மறுக்க முடியாது"**

அந்த நேரத்தில் தான் நாங்கள் அத்தியூர் விஜயா வழக்கு போன்ற விஷயங்களையெல்லாம் எடுத்து மும்முரமாக செய்து கொண்டிருந்த நேரம். அப்போது கல்யாணி என்ன சொன்னார் என்றால் "நமக்கு எப்போதும் மீடியாவோடு ஒரு நெருக்கமான உறவு வேண்டும். பல பிரச்னைகளை முன் வைத்து செல்வதற்கு அதிலும் ஒரு எடிட்டரே வந்து கேட்கும்போது பெரிதாக ஒன்றும் வீம்பு பாராட்டத் தேவையில்லை. அதிலும் அவங்க வருத்தம் தெரிவிக்கிறாங்க. நீங்க எழுதறது சரின்னு தான் எனக்கு படுது" என்று சொன்னார். மேலும் என்னை தொடர்ந்து வற்புறுத்தியதன் பேரில் தான் நான் எழுதினேன். இன்னொன்று பொதுவாக மீடியாவை எப்படி பார்ப்பது என்பதில் எனக்கொரு புரிதல் இருக்கிறது. இன்றைக்கு மீடியா என்பது ஏதோ ஒரு முதலாளி அவர் பணம் போட்டு நடத்துவது என்பது அல்ல. பத்திரிகை என்பது ஒரு முதலாளியால் முதலீடு செய்யப்படலாம். ஆனால் அதில் மாறுபட்ட பல்வேறு சக்திகள் செயல்படுகின்றன என்பதை, அதுவும் பாப்புலர் மீடியாவில் மறுக்க முடியாது. அது மட்டுமல்லாமல் மீடியாவின் கோட்பாடுகளை படித்தவன் என்கிற முறையில் மெலுக்கானில் இருந்து போத்ரியா வரைக்கும் இதைப் பற்றிய கோட்பாடுகளை அறிந்தவன் என்கிற முறையில், மீடியா குறித்து எனக்கென்று ஒரு புரிதல் உண்டு. பாப்புலர் மீடியாவிலும் பங்கு பெறலாம் என்பது தான் எனது நிலையாக இருக்கிறது. அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் தான் நான் எழுதினேன் . இதில், வாஸந்தி இருக்கிற வரைக்கும் அது பார்ப்பனப் பத்திரிகை, வாஸந்தி போய்விட்டால் அது முற்போக்கு பத்திரிகையாகிவிடும் என்றோ அல்லது தினமணியில் சம்பந்தம் இருக்கிறார் அதனால் அது முற்போக்கு பத்திரிகை, அவர் இல்லாவிட்டால் அது பிற்போக்கு பத்திரிகையாகிவிடும் என்பது போன்ற அசட்டுத்தனமான முடிவுக்கு நான் வரமட்டேன்.

*மகரந்தன்:* பாப்புலர் மீடியாவைப் பற்றிய உங்கள் புரிதல் இதுதான் என்றால் எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் எழுதுவீர்களா?

*ரவிக்குமார்:* எந்த பத்திரிகையாக இருந்தாலும் நமது பிரச்னைகளை முன்நிறுத்த முடியுமானால், அதை முன்வைத்துக்கொண்டு போக வேண்டும். இன்றைக்கு மீடியா என்பது இணையதிகாரம் என்று கூட சொல்ல முடியாது, அதைவிட இன்னமும் ஒரு முக்கியமான அங்கம் வகிக்கிறது. அல்லது அதிகாரத்தின் செயல்பாடுகளையே வடிவமைக்கிற ஒரு விஷயமாக வந்து கொண்டு இருக்கிறது. குறிப்பாக, குஜராத் கலவரத்தில் பார்த்தீர்கள் என்றால் ஸ்டார் டிவியின் செய்திக்கு அப்புறம் தான் அச்சு வழி ஊடகங்கள் வேறு நிலையை எடுத்தன. அப்படி செய்யவில்லை என்றால் மற்ற ஊடகங்கள் அப்படியொரு நிலையை எடுத்து இருக்குமா என்றால் சந்தேகம் தான். அதுவும் வாஜ்பாய் சென்று "எந்த முகத்தோடு நான் வெளிநாடுகளுக்கு செல்வேன்" என்று ஒரு நாடகம் போடுகின்ற ஒரு நிர்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அப்போ, மீடியாவோட பங்கு முக்கியமானது. அதில் இப்படி ஆள் பார்த்துக் கொண்டு, செய்து கொண்டு இருக்க முடியாது. பிறகு வாஸந்தியை ஒரு எதிரியாக நினைப்பது என்பது எதிரியை சுலபமாகத் தேர்ந்



படிப்பகம்

www.padippakam.com

**தமிழ்த் தேசியத்தை ஓர் அடிப்படைவாதமாக மாற்றிக் கொண்டிருக்கிற நந்தன் பத்திரிகையை நான் அப்படிதான் பார்க்கிறேன்**

தெடுத்துக் கொள்வதற்கான ஒரு வழி. வாஸந்தியை எதிரியாக பார்ப்பவர்கள் கோழைகள் என்றே நான் நினைக்கிறேன். இன்றைக்கு பார்ப்பனீயத்தைத் தாக்குவதற்கு வாஸந்தி யல்ல இலக்கு . அப்போது உங்களது இலக்கு வேறாக இருக்க வேண்டும். இந்த இலக்கை நோக்கி விரலை உயர்த்த துணிவோ, நேர்மையோ, அக்கறையோ இல்லாதவர்கள் தான் இது மாதிரியான Soft Target ஐ தேர்ந்து எடுப்பார்கள். இது எப்போதும் நடப்பது தான். டெரரிஸ்ட் அட்டாக்கில் கூட என்ன நடக்கும் என்றால், Soft Target ஐ தான் தேர்ந்தெடுப்பார்கள். குழந்தைகளை தாக்குவது, பெண்களை அடிப்பது என்று. அதே தான் இங்கேயும் நடக்கிறது. எனவே பொத்தாம்பொதுவாக முன்பு மலம் துடைக்க பயன்படுத்தினீர்களே இப்போது இதில் போய் எழுதலாமா என்றால், என்னுடைய எதிர்ப்பை தெரிவிக்கவேண்டிய நிலை வரும் போது தெரிவிப்பேன். இப்போதுங் கூட, ஜெயலலிதா இன்றைக்கு சங்கரலிங்கபுரம் போய் அந்த நிலைகளைப் பார்த்ததை நான் வரவேற்கிறேன். ஏனென்றால் கடந்த ஐந்தாண்டு காலத்தில் கருணாநிதி போய் பார்க்கவே இல்லை. இன்னமும் சொல்லப் போனால் அவரது ஆட்சிக் காலத்தில் தான் சாதிக்கலவரம் உச்சத்தில் இருந்தது. ஒரு இடத்தைக் கூட போய்ப் பார்க்க முயற்சித்தது இல்லை. ஆனால் இந்த அம்மா வந்த உடனே போய் பார்த்ததை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் அங்கே சட்டப் பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் வலியுறுத்துகிறேன் . இது மாதிரி சாதகமான விஷயங்கள் நடக்கும்போது பாராட்டுவதும், குரல் எழுப்பவேண்டிய நேரத்தில் குரல் எழுப்புவதும் அவசியம் என்று கருதுகிறேன். அதுவும் என்னைப் போல மனித உரிமை தளத்தில் இயங்குகிற ஆட்களுக்கு தவிர்க்க முடியாது என்று நான் நினைக் கிறேன்.

*பாண்டியன்:* விஜய பாரதத்தில் எழுத வாய்ப்பு கிடைத்தால் எழுதுவீர்களா?

*ரவிக்குமார்:* இந்தியா டுடே வும் விஜயபாரதமும் ஒன்று அல்ல. இந்தியா டுடே கமர்ஷியல் பத்திரிகை. செக்யூலரிசம் நிலைப்பாடு எடுத்தால் சர்க்குலேசன் கூடுமென்றால் அதை மேற்கொள்ள அது தயங்காது. அதை வழி நடத்துவது மார்க்கெட்டின் விதிகள் தான். ஆனால் விஜயபாரதம் அப்படியல்ல. அது ஆர்.எஸ்.எஸின் அமைப்பு ரீதியான பத்திரிகை. அது ஒரு பொது வெளி அல்ல. அதை வழி நடத்துவது ஆர்.எஸ்.எஸ். கொள்கை. அதற்கும் மார்க்கெட் விதிகளுக்கும் தொடர்பு கிடையாது.

இந்தியா டுடே போல மார்க்கெட்டில் வரும் ஒரு பண்டத்தின் மீது கன்ஸ்யூமர் என்ற வகையில் எனக்கொரு உரிமை இருக்கிறது. ஆனால் விஜயபாரதத்தில் எனக்கு அந்த உரிமை இல்லை. ஜனநாயக அமைப்பில் செயல்படுகிறவன் அந்த கொள்கைக்கு விரோதமாக வெறுப்பை, ஏற்றத்தாழ்வை பிரச்சாரம் பண்ணக் கூடாது. அந்த விதத்தில் ஆர்.எஸ். எஸ்., விஜய பாரதம், போன்றவற்றின் பாசிசக் கூறுகளை கண்டிக்க எனக்கு உரிமை உள்ளது.

எவ்வளவு விமர்சனங்கள் இருந்தாலும் நாம் இந்தியா டுடே- வை விஜயபாரத்தோடு இணையாக சொல்லிவிட முடியாது. எனவே ஆர்.எஸ்.எஸ் பத்திரிகையில் எழுதுவது ஒருபோதும் சாத்திய மில்லை. விஜயபாரதம் மட்டுமல்ல அடிப்படைவாதத்தின் பண்புகளைத் தூக்கிப் பிடிக்கிற எந்தவொரு பத்திரிகையிலும் நான் எழுத மாட்டேன். தமிழ்த் தேசியத்தை ஓர் அடிப்படைவாதமாக மாற்றிக் கொண்டிருக்கிற நந்தன் பத்திரிகையை நான் அப்படி தான் பார்க்கிறேன்.

*மகரந்தன்:* இது தொடர்பாக இன்னொரு கேள்வி. இன்றைக்கு காலச்சுவடு என்றால் அது பார்ப்பனீயப் பத்திரிகை என்கிற தோற்றம் உருவாகியுள்ளது. ஒரு கட்டத்தில் "நிறப்பிரிகை" ரவிக்குமார் என்று அறியப்பட்ட நிலை மாறி, தற்போது "காலச்சுவடு" ரவிக்குமார் என்று பரவலாக அறியப்படுகிறீர்களே....

*ரவிக்குமார்:* அதாவது "நிறப்பிரிகை" ரவிக்குமார் என்று அழைக்கப்பட்டதை எப்போதுமே நான் விரும்பியது இல்லை. அது மாதிரி, ஒரு கூட்டத்தில் எனது பெயரை போட்டார்கள் என்றே நான் போகவில்லை. வடலூரில் அப்படி போட்டவரைகண்டித்து அப்போதே கடிதமும் எழுதியிருக் கிறேன். நான் அப்போது அவரிடம் கடுமையாக சொன்னேன், "இது போல போடாதீர்கள். இது திரா விடப் பாரம்பரியம், அதிலும் குறிப்பாக திமுக கலாச்சாரம். அது ரொம்ப அருவருப்பான விஷயம். அது மாதிரி போடாதிங்க" என்று சொன்னேன். நான் நிறப்பிரிகை பத்திரிகையால் அறியப்பட்டவன் கிடையாது. நிறப்பிரிகை எனது நடவடிக்கைகளுள் ஒன்று. அவ்வளவு தான். நிறப்பிரிகை நடத்தப் பட்ட போதும் கூட என்னுடைய செயல்பாடுகள் பல தளங்களைச் சார்ந்தவை. நானெல்லாம் மார்க்ஸிய, லெனினிய சிந்தனையோடு செயல் பட்டு, அதன் மீது கேள்விகளை வைத்து அதைவிட்டு வெளியேறியவன். அ.மார்க்ஸ் ராஜினாமா செய்யவும் இல்லை. அவர் ஏன்



www.padippakam.com

வெளியேறினார் என்பதை அவரே இதுவரை சொன்னதும் இல்லை. நான் அப்போது புரட்சி பண்பாட்டு இயக்கத்தில் தென்னாற்காடு, புதுவைக்கு பொருப்பாளராக இருந்தேன். அந்த அமைப்பு சார்பாக நான் வெளிக்கொண்டு வந்த ஒரு பிரசாரத்தை தடைசெய்து கட்சியில் இருந்து சுற்றறிக்கை அனுப்பினார்கள். அப்போது இந்த ஜனநாயகமற்ற முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து ராஜினாமா செய்து விட்டு வெளியேறினேன். அப்போது கல்யாணி கூட இந்த பணியை தொடர வேண்டும் என்று வலியுறுத்தினார். நான் முடியாது என்று பொறுப்பை ராஜினாமா செய்தேன். வேடிக்கை என்னவென்றால் அந்த பிரசுரத்தை எழுதிய மார்க்ஸ் கட்சியில் நீடித்தார்.

கல்யாணியை சந்தித்து இதை இப்படியே விட்டுவிடக்கூடாது என பலமுறை பேசினேன் அவர் மனச்சோர்வில் இருந்த போது அடிக்கடி போய் பேசி, கேசவன், தங்கவேல்சாமி, மார்க்ஸ் இவர்கள் எல்லோரையும் அழைத்து ஆலோசனை செய்தோம். அப்போது நான் சிதம்பரத்தில் இருந்தேன். என்னுடைய வீட்டில் தான் இதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அப்போது அதிர்வுகள் என்கிற ஓர் அமைப்பை துவக்கினோம்.

**மகரந்தன்:** (இடையில்) இதில் மார்க்ஸ் எங்கு வருகிறார்?

**ரவிக்குமார்:** இந்த நடவடிக்கையில் மார்க்ஸும் சேர்ந்து கொண்டார். இதை ஒருங்கிணைத்தது நானும் கல்யாணியும் தானே தவிர, மார்க்ஸோ வேறு யாரோ கிடையாது. மற்றவர்கள் இதில் பங்கேற்றார்கள். அவ்வளவுதான் அதன் பிறகு மார்க்ஸ் நாம் ஒரு பத்திரிகையை துவக்குவோம் என்று சொன்னார். சரி என்று சொன்னேன். கல்யாணிக்கு தத்துவார்த்தத் தளத்தில் அவ்வளவாக ஈடுபாடில்லை. பொதிய வெற்பன் கூட நீங்கள் பேசுவது எனக்கு புரியவில்லை, அதனால் நான் வரவில்லை என்று ஒதுங்கி கொண்டார். வெளிப்படையாக வேலை செய்வது என்பதை நான் மாணவ பருவத்தில் இருந்தே கடைப்பிடித்து வருகிறேன். கல்லூரி நாட்களில் சரி, அதன் பிறகு என்னுடைய தொடர் நடவடிக்கைகளிலும் சரி எதையும் வெளிப்படையாக எதிர்கொள்ள வேண்டும் என்று எதிர் கொண்டவன் நான். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது முற்போக்கு மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோதே வெளிப்படையாகத் தான் செய்தோம். அப்புறம் சில ஆண்டுகள் கழித்துப் பிறகு தான் கல்யாணி எனக்கு அறிமுகமானார். கிரணம் பத்திரிகை கூட ஏதாவது ஒரு விலாசம் வேண்டும் என்று கூறியபோது கூட எனது விலாசத்தை கொடுத்து நடத்தச் சொன்னேன். எனவே இதில் எப்போதுமே நான் தயங்கினது இல்லை. அதேபோல தான் இந்த நிறப்பிரிகை பத்திரிகையும் எனது விலாசத்தில் இருந்து வெளி வந்தது. அதை எப்படியெல்லாம் வளர்த்து கொண்டு வந்தேன் என்பது பெரிய கதை. 'செயல் அதுவே சிறந்த சொல்' என்பது நிறப்பிரிகையின் முத்திரை வாசகம். அதை ஒரு கவிஞரின் வரிகளிலிருந்து எடுத்து நான் பயன்படுத்தினேன். அந்த கவிஞரின் பெயர்கூட இன்று வரை அ.மார்க்ஸ்சுக்கு தெரியாது. காலச்சுவட்டில் நான் ஒரு Column எழுதுகிறேன். அதுக்கு மேல் என்ன இருக்கிறது.



**"அயோத்திதாசரையும், அம்பேத்காரையும் படித்தவன் நான். இந்துக்களைப் பற்றி, பார்ப்பனீயத்தைப் பற்றி எவரிடமும் பாடம் கேட்க வேண்டிய அவசியம் எனக்கில்லை"**

தலித்முரசு ஆரம்பித்திலிருந்து அதில் எழுதிவருகிறேன். என்னுடைய பெரும்பாலான கட்டுரைகள் அதில் எழுதப்பட்டவைதான். அது இன்றைக்கு எட்டியிருக்கும் நிலையை உருவாக்கியதில் எனக்கும் ஒரு சிறு பங்கிருக்கிறது. ஆனால் தலித் முரசு ரவிக்குமார் என அ. மார்க்ஸ் கூறுவதில்லை. இன்று தாய்மண் பத்திரிகையில் இதழ் தோறும் எழுதுகிறேன். அந்த இதழோடு என்னை சேர்த்துக் கூறுகிறார்களா? தினமணியில் எழுதுகிறேன். பி.பி.சி.யில் ஒரு Column செய்கிறேன். அவற்றின் பெயரோடு என்னை இணைத்துப் பேசுகிறார்களா? ஒரு மாதத்தில் குறைந்தபட்சம் ஐந்து கட்டுரைகளாவது எழுதுகிறேன். தலித் என்ற பத்திரிகையை நடத்துகிறேன். தலித் ரவிக்குமார் என என்னை அ. மார்க்ஸ் சொல்லியிருக்கிறாரா?

அவருடைய திட்டம் என்னை பார்ப்பன கைக்கூலியாக சித்தரித்து அவதூறு செய்வது தான். அந்த நோக்கத்தோடு தான் காலச்சுவடு என்ற பெயரை ஒட்டப் பார்க்கிறார்கள். அதுபற்றி எனக்கு கவலையில்லை. அயோத்திதாசரையும், அம்பேத்காரையும் படித்தவன் நான். இந்துக்களைப் பற்றி, பார்ப்பனீயத்தைப் பற்றி எவரிடமும் பாடம் கேட்க வேண்டிய அவசியம் எனக்கில்லை.

இன்றைய சூழ்நிலையில் ஒரு பத்திரிகையில் எழுதுவதற்கு அனுமதிப்பது என்பதே பெரிய விஷயமாக இருக்கிறது. தெரிந்த ஆட்கள் இருந்தாலும் கூட தினமணியில் ஒரு கட்டுரை வருவது என்பது சாதாரணமான விஷயம் இல்லை. இன்றைக்கு வெகுஜன ஊடகங்களில் உங்களது கருத்துக்களைக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. எனக்கு மேலவளவு பற்றியும், சிதம்பரம் கலவரம் பற்றியும் அல்லது நான் பார்க்கிற பல்வேறு அநீதிகள் பற்றியும் பதிவு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. அதற்கான பக்கங்களை பல்வேறு பத்திரிகைகளிலும் பயன்படுத்த வேண்டியிருக்கு. அப்படி பயன்



படிப்பகம்

www.padippakam.com

படுத்தியதால் தான் கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி பிரச்னை ஒரு பிரச்னையாக பேசப்படுகிறது. பத்திரிகைகள் உதவியதால் தான் இன்று ஆதி திராவிடர் நலப்பள்ளிகள் காப்பாற்றப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இவ்வளவு பத்திரிகைகள் வந்த போதிலும், எதில் நான் எழுத முடியும்? வாய்ப்பே இல்லை. அப்போ நான் எதில் வாய்ப்பு கிடைக்கிறதோ அதில் தான் எழுதமுடியும். காலச்சுவட்டை ஒரு பார்ப்பனியப் பத்திரிகை என்று சொல்வதெல்லாம், வாஸந்தியை பார்ப்பனியத்தின் குறியீடாக பார்ப்பது போன்றது தான். அதற்குமேல் சொல்வதற்கு நான் விரும்பவில்லை. அந்தப் பத்திரிகையை துவக்கியவர்கள் பார்ப்பனர்களாக இருப்பதால் அதை பார்ப்பனீய பத்திரிகை என்று நீங்கள் சொல்லலாமே ஒழிய ஜனநாயகம் என்கிற அளவிலேயோ, அல்லது தரம் என்கிற விதத்திலேயோ, சீரியஸ்னஸ் என்கிற விதத்திலேயோ பார்த்தால் பார்ப்பனரல்லாதவர்கள் நடத்துகிற பல பத்திரிகைகளை விட நன்றாகத் தான் இது இருக்கிறது.

***மகரந்தன்:*** உண்மையில் நிறப்பிரிகைக்குள் நடந்தது என்ன?

***ரவிக்குமார்:*** Breaking Point என்று ஒன்றை மட்டும் தனியாக சொல்ல முடியாது. எனக்கு பிடிக்கவில்லை. நான்தான் விலகிக் கொண்டேன். இந்தப் பத்திரிகையில் இனி என் முகவரியைப் பயன்படுத்தாதீர்கள் என்று நான்தான் அவரிடம் சொன்னேன். அது ஒரு தனிச் சொத்தாக மாற்றப்படும்போது அதில் இடம்பெற எனக்கு உடன்பாடு இல்லை. இன்னும் சொல்லப்போனால் நிறப்பிரிகை என்பது ஒரு பத்திரிகையின் பெயர். அதைப் போய் வீட்டிற்கு பெயராக வைத்தார். அது ரொம்ப அருவருப்பான விஷயமாக எனக்குப்பட்டது.

***மகரந்தன்*** : அது ஒரு காரணமா?

***ரவிக்குமார்:*** அதுவும் ஒரு காரணம். அப்புறம் அவர் பேச்சின் மீது அவருக்கே எப்போதும் ஒரு பிடிப்பு கிடையாது. சுருக்கமாக சொல்லவேண்டுமானால் இன்னும் கொஞ்சம் நாட்களில் மார்க்ஸ் தன்னை ஒரு தலித் விரோதி என்று வெளிப்படுத்திக் கொள்வார். ஒரே மாதிரியான குணா நலன்கள் கொண்ட ஜெயமோகனும் அவரும் கூட்டணி அமைப்பாளர்கள். அந்த நாளை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

***பாண்டியன்:*** எது பலமாக வளர்கிறதோ அதை ரவிக்குமார் கெட்டியாக பிடித்துக் கொள்வார் என்று அ. மார்க்ஸ் சொல்லியிருக்கிறாரே?

***ரவிக்குமார்:*** அதாவது சொல்லப்போனால் தமிழ் நாட்டில் சில கருத்துத் தளத்தில் சில வேலைகளை முன்னெடுத்தேன். உதாரணமாக ஈழப் பிரச்சனையில் அகதிகள்



பிரச்சனை முழுவதுமாக புறக்கணிக்கப்படுகிறது. அகதிகள் பிரச்சனை குறித்து புலம் பெயர்ந்த தமிழர்கள் மாநாடு நடத்த வேண்டும் என்கிற கருத்தை முன் வைத்ததே நான் தான். அதற் கான முதல் கூட்டமும் என் வீட்டில் தான் நடந்தது. அரண முறுவல் அதற்கு வந்திருந்தார். இரண்டா வதாக, இரட்டை வாக்குரிமை என்பதை தலித் இயக்கங்கள் பெரிய அளவில் எடுத்துச் செல்ல கருத்தியல் களை உருவாக்கியவன் நான். தலித் கலைவிழா என்று யார் முன் வைத்தது? கடந்த ஐந்தாண்டுகளாக வடமாவட்டங்களில் நடந்த வன் கொடுமைகள் ஒவ்வொன்றின் போதும் அங்கு சென்றது யார்? பதிவு செய்தது யார்? தலித் என்ற தனித்துவத்தை கருத்தியல் தளத்தில் முன் மொழிந்ததும் பரப்பிவருவதும் யார்? தலித்துக்கள் உருவாக்கித் தந்த மேடைகளில் நின்று சவடால் அடித்ததும், தலித்துக்களின் பத்திரிகைகளை ஆக்கிரமித்தது அதை அவதூறுகளுக்கு பயன்படுத்துவதுதான் மார்க்ஸ் செய்து வருவது.

தலித் முரசுக்கு அங்கீகாரம் கிடைத்த பிறகு அதைத் தனது புகழ் பரப்பலுக்கு பயன்படுத்தி வருபவர் அ. மார்க்ஸ். அதை போலவே கோடாங்கி பத்திரிகையிலும் ஒட்டிக் கொண்டிருக்கிறார். இவையெல்லாம் சுயமரியாதை உள்ளவர்கள் செய்கிற செயல்களா?

பலமாக உள்ளத்தில் ஒட்டிக் கொள்வது அவரது பண்பு. கவிதாசரணை அவன், இவன் என்று பேசியவர். சிவகாமியை கேவலமாக திட்டியவர். இன்று அவர்களை அண்டி நிற்கிறார்.

இன்று பேசுவதில் என்ன ரிஸ்க் இருக்கிறது? இந்து வெறியர்களையும், முஸ்லீம்களின் ஜனநாயக மறுப்பையும் ஒரு சேர எதிர்ப்பது தான் ரிஸ்க். ஆனால் முஸ்லீம்களின் வெளியீட்டு நிறுவனங்களை பயன்படுத்துவதற்காக தலிபான்களின் செயல்களை நியாயப்படுத்தி எழுதியவர் அவர்.

மார்க்ஸ் இன்றைக்கு செக்குலரிஸம் பற்றி பேசுகிறார். சி.பி.எம் நிலைப்பாட்டில் இருந்து தாண்டி இவர் என்ன பேசியிருக்கிறார். இன்றைக்கு சி.பி.எம். சார்பாக பல்வேறு வெளியீடுகள், மதவாதம் பற்றி பல்வேறு கட்டுரைகளை எழுதுகிறார்கள். குறிப்பாக கே.என். பணிக்கரைத் தாண்டி இவர் என்ன விஷயங்களை பேசிவிட்டார். ஒன்றும் இல்லை. இன்னும் சொல்லப் போனால் ஆங்கிலப் பத்திரிகையில் குறிப்பாக நாளேடுகளில் வருவதைத் தனக்கு புரிந்த விதத்தில் தொகுத்து கொடுப்பதைத் தவிர வேறு எதுவும் செய்து விடவில்லை.

***மகரந்தன்:*** இதே மாதிரி இன்னொரு கேள்வியும் அவர் உங்கள் மீது வைத்திருக்கிறார். இந்திய புரட்சியின் இருபெரும் எதிரிகள் முதலாளியமும், பார்ப்பனி

www.padippakam.com

யமுமே என்கிற அம்பேத்கரின் மேற்கோளை ரவிக்குமாரின் வாய் எங்கேனும் உச்சரித்து உள்ளதா? என்று.

**ரவிக்குமார் :** மேற்கோள்களை உச்சரிப்பதன் மூலம் ஒருவர் அம்பேத்கரியவாதியாகிவிட முடியாது. எனது கட்டுரைகளையும், மார்க்ஸின் கட்டுரைகளையும் எடுத்து வாசித்துப் பாருங்கள். அம்பேத்கரைப் படித்திருப்பது , அதைவிட உள்வாங்கியிருப்பது யார் என்பது புரியும்.

சாதி இந்து சிந்தனைகளால் கனத்துப் போயிருக்கும் அ.மார்க்ஸின் மண்டைக்குள் அம்பேத்கர் நுழைய மாட்டார்.

அம்பேத்கரைப்பற்றி மார்க்ஸிடமிருந்து தெரிந்து கொள்ளுமளவுக்கு தலித்துக்கள் முட்டாள்களுமல்ல. தலித்துக்களுக்கு அம்பபேத்கரை போதிக்கும் அளவுக்கு அவர் புத்தி சாலியும் அல்ல.

**பாண்டியன்:** தலித் அல்லாதவர்கள் தலித்தியம் பேசுவது பற்றி ஏற்கனவே ஒரு கருத்தை சொல்லியிருக்கிறீர்கள். இதன் காரணமாகத் தான் தங்கள் மீதான தாக்குதல் தொடர்கிறதா?

**ரவிக்குமார்:** அது ஒரு aspect தாங்க. நான் சொன்னது என்னவென்றால் சொந்த சாதிக்கு துரோகம் செய்பவர்கள் தான் தலித்திற்கு ஆதரவாளராக இருக்க முடியும். 1992ல் பத்து ஆண்டுகளுக்கு முன்பு புதுச்சேரியில் நடைபெற்ற தலித் கலை விழாவில் நான் பேசினேன். இன்றைக்கு தலித்துக்கள் அமைக்கிற மேடைகளில் வீர வசனம் பேசுகிறவர்கள் தங்கள் சாதிக்கு துரோகம் செய்திருக்கிறார்களா? அ.மார்க்ஸ் ஏன் கே.பி. ஆர் பத்திரிகைக்கு ஒவ்வோர் issue விற்கும் 500 ரூபாய் கொடுத்து உதவி செய்தார்.எதற்காக ஊக்குவித்தார். அவர்கள் நடத்தின விழாவில் பிரதான விருந்தினர்களாகக் கலந்து கொண்ட அ.மார்க்ஸ், தி.சு நடராஜன், தமிழவன் மூன்று பேரும் ஒரே சாதியைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்களே. அது எப்படி? இவர்களுக்கு இடையேயான கூட்டு செயல்பாடு என்ன, எது இவர்களை இணைக்கிறது? இந்த கேள்விகளுக்கெல்லாம் இவர்கள் பதில் சொல்வார்களா? ஒரே மேடையில் இவர்கள் எப்படி chief guest ஆக அழைக்க முடியும். இதற்கெல்லாம் நிச்சயமாக அவரால் பதில் சொல்ல முடியாது. இன்றைக்கு அவர் சுயமரியாதை இயக்கம் என்று ஒன்றை நடத்திக் கொண்டு இருக்கிறார். பெரியார் மென்று போட்ட சக்கை அது. பெரியாரில் இருந்து அ. மார்க்ஸ் வரை தன்னை ஒரு பிற்படுத்தப் பட்டவர்களின் பகுதியாக தான் உள்ளூர மனதில் கருதுகிறார்கள். அப்படிதான் கருதமுடியும். அது தான் உண்மை. அப்படி கருதுகின்ற ஒருவர் தலித் ஆதரவாளராக இருக்க முடியாது என்பதும் உண்மை. அந்தக் கசப்பான உண்மையை இவர்களால் விழுங்கிக் கொள்ள முடியவில்லை. பெரியாருக்கே அது தான் கதியென்றால் மார்க்ஸ் எல்லாம் பெரியாரில் லட்சத்தில் ஒரு பங்கு கூட இல்லை.

**மகரந்தன்:** ரவிக்குமார் பெரியாரை தலித்துக்களின் எதிரியாக சித்தரிக்கின்றார் என்கிற உங்கள் மீதான குற்றச்சாட்டு பற்றி

**ரவிக்குமார்:** பெரியார் தலித்துக்களின் எதிரி என நான் சொல்லவில்லை. தலித்துக்கள் தனது எதிரி என பெரியார் தான் சொல்லியிருக்கிறார். இதற்கு பெரியாரிடம் இருந்து எடுத்து படித்துக் காட்டுவது தான் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். (உள்ளே சென்று பெரியாரின் புத்தகம் ஒன்றினை எடுத்து வந்து படித்துக்காட்டுகிறார்)பெரியார் ஒவ்வொரு வருடமும் அவரது பிறந்த நாளின் போது, பிறந்த நாள் செய்தியாக ஒன்றை சொல்வார். அது தான் அந்த ஆண்டின் அவரது செயல் திட்டம் என்பது மாதிரி இருக்கும். இது 1963ல் அவரது பிறந்த நாள் விழா மலரில் இடம்பெற்றது. ஆனைமுத்து தொகுத்த பெரியார் ஈ.வே.ரா. சிந்தனைகள் 3வது தொகுப்பில் 1950ம் பக்கத்தில் "சதியை முறியடிப் போம்" என்கிற தலைப்பில் இருக் கிறது. அதில் அவர் கூறுகிறார் "பார்ப் பனர், நம்மில் கீழ்த்தர மக்கள், முஸ்லீம்கள், கிறித்தவர்கள் ஆக இன்று நமக்கு சமுதாய எதிரிகளாக இந்த நான்கு கூட்டங்கள் இருக்கின்றன" என்று சொல்கிறார். ஒரு கூட்டத்தினர் அதாவது தாழ்த்தப்பட்டவர்களைப்



**"சாதி இந்து சிந்தனைகளால் கனத்துப் போயிருக்கும் அ.மார்க்ஸின் மண்டைக்குள் அம்பேத்கர் நுழைய மாட்டார்"**

பற்றியும் ஏன் தங்களுடைய இழி நிலை பற்றியும் கூட கவலை இல்லாமல் சோறு, சீலை, காசு ஆகிய மூன்றையே வாழ்க்கை லட்சியமாக கொண்டவர்கள். இது தான் தாழ்த்தப்பட்டவர்கள் பற்றிய பெரியாரது கணிப்பு. "இந்த நிலை நம் வளர்ச்சியையும் இன்றைய நல் வாழ்வையும் சிதைத்துவிடும் என்றே கருத வேண்டியிருக்கிறது". என்கிறார் அவர். நான்கு எதிரியாக அவர் சொல்வது யாரையென்றால் பார்ப்பனர், கீழ்த்தர மக்கள், முஸ்லீம்கள்,கிறித்தவர்கள். அதுவும் முதலில் பார்ப்பனரையும், இரண்டாவது கீழ்த்தர மக்களையும் வைக்கிறார். தலித்துக்களை மிகக் கேவலமாக சித்தரிக்கும் கீழ்த்தர மக்கள் என்ற சொல்லாட்சியை சாதிவெறி பிடித்தவன்கூட பயன்படுத்தியதில்லை. தலித் பிரச்னைகள் குறித்து பெரியாருக்கு எந்த ஆழமான சிந்தனையும் கிடையாது. இன்னும் சொல்லப்போனால் பெரியார் 1925ல் தான் பத்திரிகை ஆரம்பித்தார். ஆனால் 1893 ல் பறையன் என்கிற வாரபத்திரிகையை நடத்தியவர் இரட்டை மலை சீனுவாசன். 1967ல் தமிழன் என்கிற வாரப்பத்திரிகையை ஏழு ஆண்டுகள் நடத்தியவர் அயோத்தி தாஸப்பண்டிதர். அது மட்டுமல்லாமல் பிற்படுத்தப் பட்டவருக்கான அரசியல் இயக்கம் வருவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே விழிப்புணர்வு பெற்று அரசியல் இயக்கம் நடத்திவர்கள் தலித்துக்கள். அந்த உண்மையையும் வரலாற்றையும் மூடி வைத்து இருட்டடிப்பு செய்து, பெரியார்


படிப்பகம்

இவர்களை சோறுக்கும் சீலைக்கும் காசுக்கும் விலைபோகிற ஒரு கூட்டம் என்று சொல்வது, நம்முடைய சமுதாய எதிரிகள் என்று சித்திரிப்பது, உண்மையில் தலித் பிரச்னையில் அக்கறை கொண்டவர்கள் செய்கிற காரியமா என்கிற கேள்வியை தான் நான் எழுப்புகிறேன்.

**மகந்தன்:** அப்படியென்றால் உங்கள் பார்வையில் பெரியார் யார்?

**ரவிக்குமார்:** பெரியாரை ஒரு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் பிரதிநிதியாக வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம். அதில் எனக்கு மறுப்பு இல்லை. அவர் பார்ப்பனியத்தை எதிர்த்தது வேறு ஒரு காரணத்திற்காகவும் இல்லை, ஜஸ்டிஸ் கட்சி ஏன் தோற்றது என்று அம்பேத்கர் எழுதியிருக்கிறார். அதில் அவர் பார்ப்பனர்களின் நிலையை எங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்பது தான் இவர்களின் நிலையாக இருந்ததே தவிர பார்ப்பனியத்தின் அடிப்படையான கருத்தியலை தகர்ப்பது இவர்களின் நோக்கமாக இல்லை என்று கூறியிருக்கிறார். அது தான் பெரியாரின் கொள்கையாகவும் இருந்தது. இந்துமதத்தைப் பற்றி அம்பேத்கர் வைத்த விமர்சனமும் பெரியார் வைத்த விமர்சனமும் வேறு வேறு. அம்பேத்கர் வைத்த விமர்சனம் என்பது வேறு எந்த சிந்தனையாளனும் வைக்காதது. பெரியார் அன்றைய காலகட்டத்தில் நடைமுறை சார்ந்து சில விமர்சனங்களை வைத்து இருக்கிறார். அவ்வளவு தான். இந்து மதம் என்கிற கருத்தியலை பெரிய கேள்விக்கோ, விமர்சனத்திற்கோ உட்படுத்தவில்லை. அதனால் தான் சொல்கிறேன் அம்பேத்கரை சிந்தனையாளர் என்று சொல்லலாம். ஆனால் பெரியாரை சிந்தனையாளர் என்று சொல்ல முடியாது. இதனால் பெரியாரை நான் குறைத்து கொச்சைப் படுத்துகிறேன் என்று அர்த்தம் இல்லை. பெரியாருக்கான இடம் அவ்வளவு தான். அதற்கும் மேல் பின் நவீனத்துவ சிந்தனைகள் எல்லாம் அவர் வைத்திருந்தார் என்பதெல்லாம் அபத்தம். அப்புறம் அவர் நிர்வாண கிளப்பில் உறுப்பினராக ஆனார் என்கிறார்கள். இன்றைக்கு மகா கும்பமேளாவில் என்ன நடக்கிறது? ஆயிரக்கணக்கான சாமியார்கள் நிர்வாணமாக குதியாட்டம் போடுகிறார்கள். அவர்கள் எல்லாம் புரட்சியாளன் என்று அர்த்தமா? நிர்வாணமாக போவது என்பது மத்திய தர வர்க்கத்திற்கு மட்டும் தான் பிரச்னை. சாதரண மக்களுக்கும் வசதி படைத்தவர்களுக்கும் அது பிரச்சனை இல்லை.

**மகரந்தன்:** ஸ்டார் டிவியில் செய்திக்குப் பிறகுதான் அச்சு ஊடகங்கள் குஜராத் கலவரம் குறித்த தங்கள் நிலைபாட்டை மாற்றிக் கொண்டன என்றீர்கள். நீங்கள் குஜராத் கலவரத்தை எந்தப் பின்னணியில் பார்க்கிறீர்கள்?

**ரவிக்குமார்:** இந்த நாட்டில்



**"சோழர் காலம் தான் இந்த பார்ப்பனியத்தை உச்சத்திற்கு கொண்டு போன காலம். தமிழக வரலாற்றில் இருண்ட காலம் என்று குறிப்பிட வேண்டும் என்றால் சோழர் காலத்தை தான் குறிப்பிட வேண்டும்."**

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் தலித் மக்களின் உயிரை பறித்து ரத்தத்தைக் குடித்து அவர்களின் பொருட்களை சூறையாடி, சேதப் படுத்தி இந்த இந்து வெறியர்கள் ஆயிரம் ஆண்டுகளாக பயிற்சி பெற்று வந்திருக்கிறார்கள். அதை இன்று மற்றவர்கள் மீது பிரயோகிக்கிறார்கள். இன்றைக்கு இந்த வன்முறையைப் பார்த்து கூக்குரல் போடுகிறவர்கள் இதற்கு முன் தமது கண்முன் நடந்த வன்முறைகளைப் பார்த்து கண்களை மூடிக் கொண்டு இருந்ததைப் பார்க்கிறோம். இப்படிப்பட்டவர்களுக்கு இதை கண்டிப்பதற்கு எந்த விதமான தார்மீக பலமும் கிடையாது. மேலவளவு கொலைகளை தட்டிக் கேட்காதவர்கள், சிதம்பரத்தில் ஐநூறுக்கும் மேற்பட்ட வீடுகளை எரிக்கப்பட்ட போது அதை வேடிக்கை பார்த்தவர்கள், இவர்களுக்கெல்லாம் இன்று குஜராத்தை பற்றி பேசுவதற்கு என்ன யோக்யதை இருக்கிறது. இந்த இந்து மத வெறியை நிர்மூலமாக்கவேண்டும் என்றால் அதற்கென்ற வழிமுறை என்னவாக இருக்க முடியும்? திராவிட கருத்தியல் அதை எதிர்க்கவே முடியாது. திராவிட கருத்தியல் என்பதே இந்து கருத்தியலின் ஒரு பகுதிதான். வேறு எதுவும் கிடையாது. திராவிட கருத்தியல் சோழர் காலத்தை பொற்காலம் என்று கொண்டாடிய கருத்தியல். சோழர் காலம் தான் இந்த பார்ப் பனியத்தை உச்சத்திற்கு கொண்டு போன காலம். தமிழக வரலாற்றில் இருண்ட காலம் என்று குறிப்பிட வேண்டும் என்றால் சோழர் காலத்தை தான் குறிப்பிட வேண் டும். சோழர்களின் வாரிசுகளாக தங்களை காட்டிக் கொண்டவர்கள் தான் திராவிட இயக்கத்தினர். இந்த திராவிட கருத்தியலை வைத்துக் கொண்டு பார்ப்பனியத்தை எதிர்க்கவே முடியாது. பார்ப் பனியத்தை எதிர்ப்பதற்கு இஸ்லா மிய அடிப்படை வாதமும் ஒரு வழி முறையாக இருக்க முடியாது. அம்பேத்கரின் சிநதனைகள் நிச்சயமாக இந்துமத வெறியை ஒழிப்பதற்கான வழிமுறையாக இருக்கமுடியும். அதை உள்வாங்கி கொள்ள வேண்டும். என்றால் உங்களுக்கு தார்மீக பலம் வேண்டும். உங்கள் கண்முன் நடைபெறுகின்ற மற்ற கொடுமைகளை கண்டிப்பதற்கான மன தைரியம் வேண்டும். இன்றைக்கு குஜராத்தில் முஸ்லீம்கள் மீது நடத்துகிற தாக்குதல்களானாலும் சரி, 1998ல் ஏவப்பட்ட வன்முறையாக இருந்தாலும் சரி, இந்த இந்து வெறியர்களின் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தொடர்ந்து, வன்முறையை ஏவி ஏவி பழகி போனதின் தொடர்ச்சி தான் இது. எனவே அந்த வன்முறைகளைப் பற்றியெல்லாம் பார்க்காமல் சிறுபான்மையினர் மீது நடத்தப்பட்ட வன்முறையைப் பற்றி பேசுவது என்பது எல்லாம் வெறும்


படிப்பகம்

www.padippakam.com

வெளிவேஷம் தான். சிறுபான்மையினரின் வெளியீட்டு நிறுவனங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான சூழ்ச்சி தான் .

**மகரந்தன்:** தலித் இலக்கிய இதழை கொண்டுவர இந்தியா டுடே பத்திரிகை முன்வந்ததாக முதலில் கூறியிருந்தீர்கள். ஆனால், குஜராத் கலவரம் பற்றி இந்தியா டுடே பத்திரிகையின் தற்போதைய பார்வை...

**ரவிக்குமார்:** நேர் எதிரானது. நான் சொல்கிறேன் இந்திய டுடே பத்திரிகையில் ஸ்வபன் தாஸ் குப்தா என்கிற ஒருவர் எழுதுகிறார். அவர் ஒரு ஆர்.எஸ்.எஸ் காரர் போல எழுதுகிறார். அவர் பாப்புலர் அளவில் ஆர்.எஸ்.எஸின் பிரச்சார பீரங்கியாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார். இந்து மதவெறி என்கிற நெருப்பை நாடு முழுவதும் விதைப்பதில் முக்கிய பங்கு ஆற்றிக் கொண்டு இருக்கிறார். குறிப்பாக அவர் சமீபத்தில் எழுதியிருக்கிற கவர் ஸ்டோரிகள் எல்லாம் மிக மிக விஷமத்தனமானவை, பயங்கரமானவை. இது மாதிரியான விஷயங்களை இந்தியா டுடே மட்டுமல்ல, வேறு எந்த பத்திரிகை வெளியிட்டாலும் எதிர்த்து ஆக வேண்டும். இன்றைக்கு குருமூர்த்தி போன்றவர்கள் தினமணியிலும் இந்தியன் எக்ஸ்பிரஸிலும் கட்டுரை எழுதிக் கொண்டு இருக்கிறார்கள். அதையும் நாம் கண்டிக்க தயங்கக் கூடாது.

**மகரந்தன்:** .....இந்தியா டுடே இத்தகைய விஷமத்தனங்களை செய்து வருகிறது என்பது குறித்து இதற்கு முன் எங்கே பேசியிருக்கிறீர்கள்-

**“முஸ்லீம்களிடம் இருக்கிற பெரிய பிரச்னை என்ன வென்றால் அவர் களிடம் இருந்து ஜனநாயக ரீதியில் தங்களை வெளிப் படுத்திக் கொள்வதற்கான சிறு குரல்கூட வரமாட்டேன் என்கிறது. திரும்பத் திரும்ப அடிப்படை வாதிகளை நியாயப்படுத்துகிற மாதிரியே அவர்களின் பேச்சும் மௌனமும் அமைகிறது”**

**ரவிக்குமார்:** ஞானியின் தீம்தரிகிட பத்திரிகை வெளியீட்டு விழாவின்போது அதைப்பற்றிதான் பேசினேன். இன்றைக்கு குஜராத் கலவரத்தில் வன்முறையாளர்கள் எழுநூறுக்கும் அதிகமான முஸ்லீம்களை கொன்றிருக்கிறார்கள். எட்டு மாத கர்ப்பிணி பெண்ணின் வயிற்றை பிளந்து குழந்தையை எடுத்து வெட்டியிருக்கிறான் . அந்த மரணத்தைப் பேசாதவர்கள் நடாஷா சிங் குடித்துவிட்டு மாடியில் இருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்டார் என்பதை கவர் ஸ்டோரியாக எழுதுகிறார்கள். குஜராத் மக்களின் மீது தொடுக்கப்பட்ட இன்னொரு தாக்குதல் போலத்தான் அந்த கட்டுரை இருந்தது என்பதை அன்றைக்கு நான் பேசினேன். இந்தியா டுடே பத்திரிகை இன்றைக்கு ஒரு நிலைப்பாடு எடுத்து செய்து கொண்டு இருக்கிறது. வாஜ்பாய் இனிமேல் பிரதமராக இருக்கத் தகுதியில்லை, இன்றைக்கு இந்துக்கள் ரொம்ப கோபத்தில் இருக்கிறார்கள், அவர்களுக்கு மிலிடெண்ட்டான ஒரு தலைவர் தேவை என்பதைத் தான் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக கோத்ரா பற்றி பயங்கரமான கட்டுக்கதைகளை வெளியிட்டார்கள். முஸ்லிம்கள் பற்றி படங்களையெல்லாம் போட்டு எழுதினார்கள். உண்மையில் இதையெல்லாம் முஸ்லிம்களால் எதிர்கொள்ள முடியும். இது போன்ற ஆட்களை நீதி மன்றத்திற்கு இழுக்க வேண்டும். செய்யவில்லை. முஸ்லீம்களிடம் இருக்கிற பெரிய பிரச்னை என்னவென்றால் அவர்களிடம் இருந்து ஜனநாயக ரீதியில் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான சிறு குரல்கூட வரமாட்டேன் என்கிறது. திரும்பத் திரும்ப அடிப்படைவாதிகளை நியாயப்படுத்துகிற மாதிரியே அவர்களின் பேச்சும் மௌனமும் அமைகிறது. அவர்கள் சமூகத்திற்கு அது நல்லதில்லை. இன்றைக்கு முஸ்லீம்கள் தாக்கப்படும்போது குரல் கொடுக்கிற தலித்துக்களையும் மற்ற ஜனநாயக சக்திகளையும் முஸ்லீம்கள் எப்படி பார்க்கிறார்கள்? பொதுவான ஜனநாயக பிரச்சனைகளுக்காக குரலெழுப்ப அவர்கள் முன் வருகிறார்களா?



**தலித்துக்கள் தங்களை ஓர் அடையாள ரீதியாக அணி திரட்டிக் கொள்வது சாதியை ஒழிப்பதற்காக தான். மற்றவர் களின் சாதி அடையாளத் திற்கும் தலித் என்பவருக்கும் வித்தியாசமே இதுதான். மற்ற சாதி அமைப்புகள் சாதி யத்தை காப்பாற்றுவதற்காக பாடுபடுகின்றன**

**பாண்டியன்:** படைப்பாளிகள் சாதி மதம் இனம் கடந்தவர்களாக இருக்க வேண்டும். இதன் அடிப்படையில் பார்க்கும் போது தலித்துக்களுக்கு என்று தனியாக படைப்பாளிகள் மாநாடு அவசியமா?

**ரவிக்குமார்:** பாட்டாளி வர்க்கம் என்ற அடையாளத்தில் திரள்வது வர்க்கப்பிரிவினையை ஒழிப்பதற்காக தான். அதே போல் தலித்துக்கள் தங்களை ஓர் அடையாள ரீதியாக அணிதிரட்டிக் கொள்வது சாதியை ஒழிப்பதற்காக தான். மற்றவர்களின் சாதி அடையாளத்திற்கு ம் தலித் என்பவருக்கும் வித்தியாசமே இதுதான். மற்ற சாதி அமைப்புகள் சாதியத்தை காப்பாற்றுவதற்காக பாடுபடுகின்றன. ஆனால், தலித் மட்டும் தான் சாதியை ஒழிக்க முற்படுகிறான். பிராமண சங்கமும் தலித் அமைப்பும் ஒன்று கிடையாது. பிராமண எழுத்தாளனும் தலித் எழுத்தாளனும் ஒன்று கிடையாது. அவன் ஆதிக்கத்திற்காக தன்னை அடையாளப்படுத்துகிறான். இவன் ஆதிக்க எதிர்ப்புக்காக தன்னை முன்நிறுத்துகிறான். தலித் படைப்பாளிகள் மாநாடு என்பது ஆதிக்க சக்திகளை கேள்விக்கு உட்படுத்துவதற்காக தான்.

புகைப்படம் : புதுவை இளவேனில்.
ஓவியம் : மாறன்



படிப்பகம்

www.padippakam.com

# புதிய அழைப்பு

**மு. பொன்னம்பலம்**



மசூதியிலிருந்தோர் தொழுகையின் அழைப்பு
என் நெஞ்சுப் புதைவிலோர்
இன் துளிக் கிளர்வு!
ஆனால் நான் முஸ்லிம் அல்ல.

சிலுவை ஏந்திய தேவாலயத்தினுள்
''ஆமென்'' எனவெழுந்த
ஆழ நெஞ்சொலிப்பில்
ஓர் ஒளிப் பருக்கை என்னுள் இறங்கும்!
ஆனால் நான் கிறிஸ்தவன் அல்ல.

தெருவோரம் அமர்ந்த தியானப் புத்தரின்
விழிகளின் கவிப்பில்
உள்ளுயிர் சிலிர்க்கும்!
ஆனால் நான் பௌத்தன் அல்ல.

தேவாரப் பொழிவோடு தேரிருந்தூரும்
சுவாமி ஒளிர்வில்
இறுகிய என்மனக்
கட்டவிழ்ந் திளகும்!
ஆனால் நான் இந்து அல்ல.

நான்கு வீதிகள் கலக்கும் சந்தி
கார்ல்மார்க்ஸ் நிற்கிறார்,
கற்சிலையாக!
புரட்சிச் சுலோகம், என்னுடல் அதிரும்!
ஆனால் நான் மார்க்சிஸ்ட் அல்ல.

இடமும் வலமும் பூட்டிய விலங்கொடு
எலும்புக் கூடொன்று
என்முன் எதிர்ப்படும்
''நீ யார்?'' என்றேன்
''மனிதம்'' என்றது!
என்றது சொல்லி என்தோள் சாயும்.
என்னுடல் - ஆத்மா
எரிகல் போன்று கருகி அணைந்தது
ஆனால் நான் மனிதனே அல்ல!

எனக்குள் ஓர் புதுக்குரல்
''எழு'' என ஒலிக்கும்
மெல்ல விழிக்கிறேன்
இப்போ..
இடம் வலம் குறிகள் சுழுமுனை ஈர்ப்பில்
புது வழி அழைக்கும்...

'கண்ணில் தெரியுது வானம்' தொகுப்பிலிருந்து

# கைப்புண்

**● தய். கந்தசாமி ●**

போதும்

போதும் உனது விமர்சனம்

எனது பசியை

பட்டினியை

நீ நிர்பந்தித்த இழிவை

எழுதவே பயந்தேன்

உன் இசங்களுக்கு அஞ்சி.

சங்கம் தொட்டே

எழுதினாய் உன் இலச்சினையை

என் சுயம் மறைத்து

என் விடுதலை

நீ பேசினாய்

உனது சுகங்களேதும்

சேதப்படாமல்

கமண்டலமாய் குனியும்

உன் எழுதுகோல் சொல்லாது

என் சாம்பலின் சங்கதி

உன் கலைகளெதிலும்

இல்லையென்

நிலைமையின் நிர்வாணம்

இன்றென் முனகலுக்கும்

முகஞ்சுளிப்பாய்

அறிவு போதாதெனெக்கென்பாய்

சொல்

எங்குபோய் படிக்க வேண்டும்

எனக்கு வலிக்குமிடத்தை

நான் சொல்ல...



படிப்பகம்

www.padippakam.com

# கடந்த நூற்றாண்டில் ஈழத்தில் தமிழ்த் தேசிய இலக்கியம்

– சு. வில்வரத்தினம்



ஈழத்தில் தமிழ் தேசிய சிந்தனையின் மூலவராக ஆறுமுக நாவலரைச் சிலர் இனங்காட்டுவர். ஆனால் நாவலர் யாழ்பாணத்தின் உயர் சைவ வேளாளரின் நலன்களை மட்டுமே பிரதிபலித்தவர். சைவசமயத்தின் மீளெழுச்சி தான் இவரது முழு நோக்கமாக இருந்தது. தமிழ் தேசிய சிந்தனையை மையமாகக் கொண்டே அவர் தொழிற்பட்டு இருந்தாரானால் குடாநாட்டுக்கு வெளியே கிழக்கு மாகாணத்திலும் சைவ மீளெழுச்சிக்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டிருப்பார். இலங்கைக்கு வெளியே தமிழகத்திலும் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த அவருக்கு இது புலனாகாமல் போனது விளங்காத புதிர். தமிழகத்தினோடு இவர் கொண்டிருந்த தொடர்பும் ஆதீனங்களுடனான தொடர்பாக மட்டும் மட்டுப்பட்டிருந்தது. ஆரிய- திராவிட முரண்பாட்டை மையப் படுத்தி, சைவ மீளெழுச்சியையும், தமிழ் தேசிய சிந்தனையையும் அவாவிய அறிஞர்களுடனான தொடர் பாக அது விரிவு பெறவில்லை. இந்திய தேசியத்தின் முன்னோடிச் சிந்தனையாளரான சமயவாதிகளைப் போல சாதி, பேதம் கடந்தும் இவரது நடவடிக்கைகள் அமையவும் இல்லை. யாழ்ப்பாணத்தின் உயர்சைவ வேளாண் குலத்தவரை சற்சூத்திரராகக் கண்டு அவர்களை பிராமணிய பீடத்தில் அமர்த்தி வைக்கும் சமஸ்கிருத மயமாக்கல்தான் இவரது பணியாக இருந்தது. பாடசாலைகள் நிறுவுதல் பாடநூல்கள் எழுதி வெளியிடுதல், பஞ்சப்பட்ட ஏழைகளுக்கு கஞ்சி என இவரது பணிகள் பலவும் பாராட்டத்தக்கனவே. ஆனாலும் அவற்றுக்குப் பின்னால் எத்தகைய நெகிழ்வற்ற கருத்தியலின் பின்னணி எழுப்பப்பட்டிருந்ததுவோ அப்பிற்போக்கான கருத்தியலே தமிழ் தேசிய விடுதலை குறித்த சிந்தனையில் முன்னோக்கி எழக்கூடிய பாய்ச்சலுக்கு தடையாக அமைந்திருந்தது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

நாவலரின் பாரம்பரியர் என அடையாளம் காணப்பட்டாலும் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் சைவமென்ற வட்டத்துக்கு அப்பாலும் தொழிற்பட்டார். நாவலர் போல சைவ நூல்களையே பதிப்பிக்கின்றவராக இல்லாமல் சங்க இலக்கிய நூல்களைத் தேடிப் பதிப்பிக்கத் தொடங்கினார். வீரசோழியம் பதிப்புரையில் அவர் மனம் நொந்து குறிப்பிடும் வாசகங்கள் எமது கவனத்துக்கு உரியன. "அயலான் அழிய காண்கினும் மனம் தளம்புகின்றதே? தமிழ் மாதும் தாயல்லவா? இவள் அழிய நமக்கென்னவென்று வாளாவிருக்கிறார்களா? தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம் என்று இவை இல்லாதார் பெருமையும் பெருமையாமா?" மேற்கூறிய வாசகங்களில் நாம் இரண்டு அம்சங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒன்று முதல் முறையாக தமிழ் மொழியை மதம் சாராத தமிழ் நிலைப்பட்ட பண்பாட்டின் உருவகமாக்கி தமிழ்த்தாய் என்ற படிமம் முன்வைக்கப்படுதல். இரண்டு தேசம், மதம், மொழி, மீதான அபிமானத்தை முன்நிறுத்தி தமிழ் தேசிய சிந்தனையை முன் தூண்டுதல். இவர்குறிப்பிடும் இன்னுமொரு விடயம் குறிப்பிடத் தக்கது. "தமிழ் தனிநில்லாது தத்தளித்து வட மொழி வல்லார் கைப்பட்டு அம்மைவார்த்த உடம்பு போல தேகமெல்லாமே சமஸ்கிருத தழும்பு ஏறி கொப்பளித்த திருமேனிற் கொடும் முள்ளும் ஏறியதென தென்திசை சொற்களும் மரீஇன. ஈற்றில் ஏழரை நாட்டு சனியும் பிடித்தாற்போல.." என இவர் குறிப்பிடுவதை அவதானித்தால் சமஸ்கிருத மயமாக்கலுக்கு எதிராக தமிழின் தனித் தன்மையை நிறுவும் முன்னோடியாகவும் இவரை நாம் தரிசிக்கலாம். நாவலரும், நாவலர் பாரம்பரியரும் "சமஸ்கிருதமும் தமிழும் இரு கண்கள்" எனக் கொண்டாட இவர் அவர்களின் நின்றும் வேறுபடுகிறார். "ஐந்தெழுத்தால் ஒரு பாடையென்று அறையவும் நாணுவர் அறிவுடையோரே" என்ற தமிழுக்கு எதிரான நையாண்டிக் குரலை வெகுண்டெழுந்து கண்டனம் பொழிந்த இவரை ஆரிய திராவிட முரண்பாட்டை அடியொற்றிய சிந்தனையின் ஒரு பிரதிநிதியாக நாம் இனம் காணலாம். இவரது வழிச்சுவடை பின்பற்றிய ஒருவராக விபுலானந்த அடிகளையும், வடக்கு கிழக்கு இணைந்த வரலாற்றுப் பண்பாட்டுக் கூறுகளை இனங்கண்டு எழுத முயன்ற ஒருவராக பேராசிரியர் க.கணபதி பிள்ளையையும் நாம் இனங்காண தவறக் கூடாது.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையில் தமிழ் தேசியத்தின் சிந்தனையாளர்களாக தி.த. கனகசுந்தரம் பிள்ளை, தி.த. சரவணமுத்துப்பிள்ளை ஆகிய இரு சகோதரர்களையும் குறிப்பிட வேண்டும். இருவரும் தமிழகத்தில் பட்டப்படிப்பை முடித்து பணிபுரியும் காலத்தில் தமிழகத்தின் பல்வேறு அறிஞர்களுடனும் கலந்துறவாடி உடனியங்கி வந்தனர். பல்வேறு சொற்பொழிவுகளையும் ஆங்காங்கே நிகழ்த்தினர். தி.த.கனகசுந்தரம்பிள்ளை 'தமிழ் நாவலர் சரிதை' என்னும் நூலையும், தி.த. சரவணமுத்துப் பிள்ளை 'தத்தை விடு தூது' என்னும் கவிதை நூலையும், 'மோகனாங்கி' என்னும் தமிழின் முதல் வரலாற்று நாவலையும் தமது சொற்பொழிவுகளின் திரட்டையும் வெளியிட்டார். அவர்களின் சொற்பொழிவுகளில் தமிழ் தேசிய சிந்தனைக்கான தடங்களைக் காணலாம் என்கிறார் கலாநிதி. செ.யோகராசா. இத்துடன் ஈழத்தை சார்ந்த அறிஞரான க.கனகசபைப்பிள்ளை தமிழகத்தில் வெளியிட்ட சங்கத் தமிழ் இலக்கியங்களின் வாயிலாக கண்டடைந்த பண்பாட்டு வரலாற்று கருவூலமான "1800


படிப்பகம்

www.padippakam.com

ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்" எனும் நூலின் வரவும் தமிழ் தேசிய சிந்தனையின் வளர்ச்சி பரிமாணத்தில். 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' போல முக்கியத்துவம் உடையது.

வடக்கு-கிழக்குக்கு அப்பால் தென்னிலங்கையிலும் மலையகத்திலும் தமிழ் தேசிய சிந்தனைக்கான முனைப்புகள் இருந்தன. புத்தளத்தில் வாழ்ந்த சைமன் காசிச்செட்டி இலங்கைத்தமிழர் வரலாற்று ஆய்விலும் கல்வெட்டு ஆய்விலும் ஈடுபட்டவர். 'இலங்கை விவரணக் கொத்து' "திருகோணமலை இந்து கோயில் வரலாறு' என்னும் தமிழ் நூல்களையும் Tamil Plutarch என்னும் தமிழ் புலவர்களின் வரலாறுகளின் தொகுப்பாகிய ஆங்கில நூலையும் வெளியிட்டவர். இந்நூலே பின்னால் தமிழ் இலக்கிய வரலாறு எழுதப்படுவதற்கான முன்னோடி நூலாக விளங்கியது. ஆனால் சதாசிவம் பிள்ளையின் 'பாவலர் சரித்திர தீபகம்' இதனை அடியொற்றியே விரிவாக்கம் பெற்றது. 'உதயதாரகை' என்னும் இலங்கையின் முதலாவது தமிழ் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் வெளிவந்த அதே ஆண்டில் உதயாதித்தன் என்னும் பத்திரிகையை (1841 ஜனவரி 07) இவர் வெளிக்கொணர்ந்தார். இப்பத்திரிகை மொத்தம் 13 இதழ்களே வெளிவந்தனவாயினும் இலங்கையில் இரண்டாவது தமிழ்ப்பத்திரிகையை வெளிக் கொணர்ந்த பெருமை இவருக்குரியது.

இலங்கையில் தமிழ் தேசியத்தின் காத்திரமான கருத்தியல் முன்னோடியெனக் கருதக் கூடிய முயற்சியாக நீர்கொழும்பைச் சேர்ந்த பரதவர் வகுப்பு கத்தோலிக்கரான ஜே.ஆர்.மிராண்டோவின் 'திராவிட மித்திரன்' பத்திரிகையை கருதலாம். 1910ஆம் ஆண்டில் தொடங்கப் பட்ட இப்பத்திரிகை திட்டவட்டமான தமிழ் தேசிய கருத்தியலை முதன்முதலில் இலங்கையில் வெளிக் கொண்டுவந்தது. பிசப். கோல்ட்வெல்லின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' ஏற்படுத்திய தாக்கம் ஆரிய-திராவிட கருத்தியல் முரண்பாட்டின் வழியாக தமிழகத்தில் ஏற்படுத்திய தமிழ் தேசிய சிந்தனையை அடியொற்றி ஈழத்தில் ஜே.ஆர். மிரண்டாவால் முன்வைக்கப்படுகிறது. மதவழி கடந்த மொழி வழி தமிழ் தேசியம் இவரது கருத்தியலில் வெளிப்படுவதை இவரது பத்திரிகையில் எழுதப்பட்ட முதலாவது ஆசிரியர் தலையங்கம் புலப்படுத்துகிறது. "திராவிட மித்திரன் என்பது எச்சமயத்தவராக இருப்பினும் திராவிடம் என்னும் தமிழ்ப் பாஷையை தம்பாஷையாய்க் கொண்டுள்ள சகல தமிழர்மீதும் அன்புடையவன் என்பதாம்.... திராவிடர் எனச் சொல்லப்படும் தமிழர் மீது அன்புடையவனாய் இப்பத்திரிகை வெளிப்படுவதால் தமிழர்கள் தம்மீது அன்புடையவனாய் இருக்கும் இப்பத்திர மித்திரனை அகமகிழ்ச்சியுடன் அங்கீகாரம் செய்து ஆதரித்து வருவார்கள் என நம்புகிறோம்". மேற்படி தலையங்கத்தில் "மத வேறுபாடுகளுக்கு அப்பாலான இனம்பற்றிய, இன வரலாறு பொற்காலம் பற்றிய,மொழி மேன்மை பற்றிய திட்டவட்டமான ஒரு தமிழ் தேசியவாதக் கருத்தியல் முன்வைக்கப்பட்டுள்ளது" என்று சிவராம் குறிப்பிடுகிறார்.

'திராவிட மித்திரன்' பத்திரிகை ஆசிரியரின் குறிப்பின்படி அக்காலத்தில் கொழும்பில் இருந்து 'திராவிடாபிமானி' என்னும் பத்திரிகை ஒன்றும் வெளி வந்ததாக அறியமுடிகிறது. இந்த பத்திரிகை திராவிட மித்திரனுக்கு முன் உந்துதலாகவோ ஒத்த சிந்தனை உடையதாகவோ வெளிவந்திருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. ஆயினும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த பத்திரிகைகளான 'திராவிட கோகிலா' (1900), 'திராவிட தீபிகா' என்பனவும் 'இந்து சாதனம்', 'சைவசித்தாந்தபானு', 'சைவ உதயபானு' என்னும் பத்திரிகைகள் பலவும் யாழ்ப்பாண உயர் சைவ வேளாண் குலத்தவர்களுக்குச் சார்பான கருத்தியலையே வெளிப் படுத்தின. அதாவது ஆறுமுக நாவலரின் கருத்தியல் . ஆனால் திராவிடன்,ஆதி திராவிட மித்திரன், தமிழன்,தமிழர் போதினி என வெளிவந்த பத்திரகைகள் பலவும் எவ்வகையான கருத்தியலைக் கொண்டிருந்தன என்பதனை அறிய முடியாவிடினும் அவற்றின் தலைப்புகளைக் கொண்டு நோக்கும் போது தமிழ் தேசிய சிந்தனையில் சில கூறுகளையேனும் அடையாளம் காட்டுவனவாய் இருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. இவ்வாறாக இக்கால கட்டத்தில் எண்ணிறந்த பத்திரிகைகள் ஈழத்தில் அறிவியல் பண்பாட்டுச் சூழலை உருவாக்கி ஒரு அரசியல் சூழலாக உருமாற்றம் எய்துகிறது. இத்தகைய ஓர் அரசியற் சூழல் ஒரு நாளிதழின் உருவாக்கத்தை வேண்டி நின்றது. அத்தகைய ஒரு நாளிதழ் எண்ணிறந்த பத்திரிகைகள் வெளிவந்த யாழ்ப்பாணத்து சூழலில் இருந்து அல்லாமல் யாழ்ப்பாணத்துக்கு வெளியே, தென்னிலங்கையில், மலையகத் தோட்டத் தொழிற்சங்க நடவடிக்கைகளை தொடக்கி வைத்த கோ.நடேசய்யரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது தான் இதில் ஆச்சரியத்துக்கு உரியது. தேசநேசன் என்னும் இந்நாளிதழில் 1921 செப்டம்பர் 20 இல் தினப்பதிப்பாக வெளிவர ஆரம்பத்தது. இதன் பின்னணியை சாரல் நாடன் "பத்திரிகையாளர் நடேசையர்" என்னும் நூலில் இவ்வாறு கூறுகின்றனர்.

'தேசநேசன்' தோன்றுவதற்கான அத்தகு சூழல் இலங்கையில் 1921 இல் உருவாகி இருந்தது. அன்றிருந்த சூழலில் இலங்கையில் தமிழர்களின் அரசியல் உணர்வுகளுக்கு உத்வேகம் ஊட்டவேண்டிய அவசியம் இருந்தது. இலங்கையில் இருந்த அனைத்து மக்களையும் உள்ளடக்கிய தேசிய அமைப்பாக விளங்கிய இலங்கைத் தேசிய காங்கிரஸில் தேசியம் தேய ஆரம்பித்தற்கான அறிகுறிகள் வெளிப்படையாக தெரிய ஆரம்பித்திருந்தது. தமிழர், சிங்களவர் என்ற இன உணர்வின்பாற்பட்ட குறுகிய தேசியம் முளைவிட ஆரம்பித்திருந்தது. ஜேம்ஸ் பீரிஸ், ஈ.ஜே.சமரவிக்கிரம என்போர் ஒரு புறமும் சேர். பொன். அருணாச்சலம் மறுபுறமும் முன்நின்று தமிழர் குறித்து ஒப்பந்தம் மேற்கொண்டு (1919) சமரச முயற்சியை மேற் கொள்ள வேண்டி இருந்தது.

மேற்படி ஒப்பந்தம் தான் சிங்களத் தலைமைகள் பேணத் தவறிய முதலாவது ஒப்பந்தம் ஆகும். இதனால் மனமுடைந்த சேர். பொன். அருணாசலம், பீரிஸ் முதலான சிங்களத் தலைவர்களுடன் பெரிதும் முரண்பட்டு இலங்கைத் தேசிய காங்கிரஸ் இருந்தும் விலகி தமிழர் மகாஜன சபையை ஆரம்பிக்கிறார். இவ்வாறாக தமிழ் தேசிய அரசியலைத் தொடக்கி வைத்த

www.padippakam.com

முன்னோடி சேர்.பொன்.அருணாசலமே ஆவார். இலங்கை அச்சகத் தொழிலாளர் சங்கம், மலையகத் தொழிற்சங்கம் ஆகிய வரலாற்றில் பதியப்பட்ட முற்போக்கான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட சேர்.பொன்.அருணாசலம் அவர்கள் தொடக்கி வைத்த தமிழ் தேசிய அரசியலின் வளர்ச்சியும் முற்போக்கான திசையிலேயே அமைந்திருக்க கூடிய சாத்தியம் 1923 இல் அவரது திடீர் மரணத்தினால் நின்று போயிற்று. அவரது முற்போக்கான பாத்திரத்தை ஏற்று வழிநடத்த தக்க தலைமை அப்போது தமிழர்கள் மத்தியில் உருவாகவில்லை. கண்டிய தேசியத் தலைமை களுடன் கைகோத்தவண்ணம் பிரதேச வாரியாக வென்றெடுத்திருக்கக் கூடிய சுயாட்சி உரிமை இத்தகைய தலைமை தமிழர் மத்தியில் உருவாகாமையினால் தவறிப் போயின. தமிழ் மாக்ஸியர்களும் ஒடுக்கப் பட்டவர்களுக்கான சமூக நலவுரிமை போராட்டத்தி னோடு தமிழ் தேசியத்தையும் இணைத்து தலைமையை வழங்கும் தரிசனமற்று இருந்தனர்.

இதனையடுத்து இலங்கையில் மிக முக்கியமான காலக்கட்டமாக 1930 ஆம் ஆண்டை குறிப்பிடவேண்டும். டொனாமூர் கொமிஷனின் வருகையோடு உருவாகிய தீவிரமான அரசியல் பிரக்ஞையின் காரணமாக பல நாளிதழ்கள் வெளிவந்தன. வீரகேசரி(1930), தினகரன் (1930) முதலியன கொழும்பிலிருந்தும் ஈழக்கேசரி (1930) யாழ்ப்பாணத்திலிருந்தும் வெளிவரத் தொடங்கியதோடு மலையத்திலிருந்து தேசபத்தனும் (1924) ஏற்கனவே வெளிவந்து கொண்டிருந்தது. இவற்றைவிடவும் ஆங்காங்கே பலவேறு பிரதேசங்களில் இருந்து தினத் தபால், இந்தியன் , ஜனதர்மபோதினி , தொழிலாளி, லங்கா, தமிழன் எனப்பல பத்திரிகைகளும் வெளிவந் தன. ஆயினும் இவற்றைவிட ஈழக்கேசரி தான் பிரதேச ரீதியான நவீன இலக்கிய வளர்ச்சியில் அக்கறையோடு தொழிற்பட்டது. அரசியலில் சே.பொன். இராமநாதனின் கரத்தை வலுப்படுத்தும் பிரகடனத்துடன் தான் தொடங்கி யது. அதே வேளை சேர். பொன். அருணாசலத்திற்கு சிங்களத் தலைவர்களோடு ஏற்பட்ட அனுபவத்தை மையமாகக் கொண்ட தமிழ்த் தேசிய அரசியலின் தொடர் வளர்ச்சியை பிரதிப்பலிக்காமல் இந்தியத் தேசிய காங்கிரசுக்குரிய பிரசாரசாதனமாக மாறியது. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் காந்தி, நேரு போன்றவர்களை யாழ்பாணத்திற்கு வரவழைத்து கூட்டங்களை நடத்தியது. கதர் நிதியை சேகரித்து காந்திஜிக்கு வழங்கியது. காந்தி,நேரு போன்ற இந்திய தலைவர்களின் படங்கள் யாழ்பாணத்தவரின் வீடுகளை அலங்கரிக்கத் தொடங்கி னர். அவர்களின் நிழலுருக்களாக மாறி யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தலைவர்கள் சுயமற்றுப் போயினர்.

இந்திய தலைவர்களைபோலவே இலங்கைக்கும் பூரண சுயாட்சி கோரிய யாழ் வாலிபர் காங்கிரஸ் டொனமூர் கொமிஷனின் சிபாரிசுகளின் மீது சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்ட பின் நிகழ்ந்த தேர்தலை வடபகுதியில் பகிஷ்கரித்தனர். இவர்களது பகிஷ்கரிப் புக்கு ஆதரவு தருவதாக வாக்களித்துவிட்டு சிங்களத் தலைவர்கள் வழமை போலவே சந்தர்ப்பவாத நிலைப்பாட்டை வரித்தனர். இந்தியத் தலைவர்களோடு இணைந்த போராட்டப் பாதையை ஈழத்துத் தமிழர்கள் வரித்துக் கொள்கிறார்கள் என எண்ணி பிரிட்டிஷார் சிங்களத் தலைமைகளை சலுகைகள் மூலம் கையாண்டு தமிழ்தரப்பை புறக்கணித்தனர். இதில்தான் தமிழ் தேசிய நோக்கிலும் பிரச்னைகளை காணமறுத்த யாழ். வாலிபர் காங்கிரஸின் பலகீனம் புலனாகிறது.பலகீனத்தின் பெறுமானம் இந்திய தலைவர்களில் சாய்ந்து நிற்கும் மனோ நிலையை தமிழ்மக்கள் மத்தியில் (இன்று வரை) தோற்றுவித்தது. இத்தகைய பலகீனம் தான் ஈழச்கேசரியி லும் பிரதிப்பலித்தது. இதன் பலகீனங்களின் தளத்தில் எழுப்பப்பட்ட ஈழகேசரியின் கருத்தியலில் கீழ் வரும் கூட்டுக்கலவை குடிகொண்டிருந்தது. ஒன்று நாவலர் பாரம்பரியத்தின் சைவாபிமானம். இரண்டு யாழ் வாலிபர் காங்கிரஸின் இரட்டை தேசிய உணர்வு, பிரிட்டிஷ் காலனித்துவத்திற்கு எதிராக போராடும் திறனற்ற வெறும் பிரதிநிதித்துவமான சேர்.பொன். இராமநாதன் தனம். இவற்றின் கூட்டுக் கலவையில் விடுபட்டுப்போனது தமிழ் தேசிய உணர்வு. தேசிய ரீதியிலும் தமிழினத்திற் குள்ளும் சமூக நல உரிமைகளை பேணும் விடயத்தில் முற்போக்கான பாத்திரத்தை வகித்தவாறே தமிழ்த் தேசிய உணர்வைப் பேணியிருக்க வேண்டியவர்கள் இதில் தவறிழைத்தனர். எல்லாவற்றிலும் ஈழக்கேசரியில் ஒருவகை சமரச வாதம் தான் புலப்பட்டது.

இந்தப் பின்னணியில் வைத்துப் பார்க்கும் போது ஈழக்கேசரி நவீன படைப்பாக வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்பு பாராட்டுக்குரியதாயிருந்தாலும் அதனடியில் இயலாமை கொப்பளிக்கும் ஒரு நோஞ்சான் தனம் இருந்ததாகவே படுகிறது. சாதீய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான கதைகள் வெளிவந்த ஈழகேசரியில் அதற்குத் தீர்வு காண்பதற்காக சாதிகளுக்கிடையிலான கலப்புத் திருமணம் முன்வைக்கப்பட்டதில்லை. ஆனால் தேசிய ஒருமைப்பாடு பேணுதல் என்ற ரீதியில், சிங்கள தமிழ் இனங்களுக்கிடையிலான கலியாணம் தீர்வாக முன்வைக்கப்படுகிறது. அல்லதுகாதல் தொடர்பு காட்டப்படுகிறது. 'விடிவு', 'அமர இரவு' போன்ற கதைகள் இவற்றுக்கு உதாரணமாவன. இன்னும் பல சிறுகதைகள் சிங்கள தேசத்தின் வரலாறுகளையும் பெளத்த மதக் கதைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கருத்தியல் முனைப்புகள் அங்கு இல்லை. காந்தி,நேரு போன்றோரின் வருகை இந்திய தேசியத்தை இங்கு பிரதிபலிக்க, ரவீந்தநாத் தாகூரின் வருகை எமது இலக்கியப்பார்வையில் நோஞ்சான் தேசிய உணர்வை பிரதிபலித்ததோ என ஐயுற வேண்டியுள்ளது. இந்திய தேசியத்தைப் பாடிய பாரதி "செந்தமிழ் நாடெனும் போதினிலே'' எனத் தமிழ் தேசியத்தையும் வீரஞ்செறிந்த பார்வையோடு பாடுவதாக எந்தப் படைப்பும் அமைய வில்லை. ஆனந்தக்குமாரசாமியின் பார்வையின் ஒளியில் 'திராவிடக் கட்டடக்கலை' தந்த கலைப்புலவர் க. நவரத்தினம் போல தமிழ் தேசியத் தன்மையை நோக்கிய அடையாளம் வாய்ந்த படைப்புகளை பாரதியின் பார்வையிலேனும் நிறுத்தி வீரஞ்செறிந்ததாக தந்திருக்கலாம். ஆனால் அத்தகைய படைப்புகளை, தமிழ் தேசிய உணர்வின் ஆரம்ப அருட்டல் உடையன வாகவேனும் (ஈழகேசரி பத்திரிகையில் சிறுகதைகள் 1930-1958- வரை - 513 சிறுகதைகள் வெளிவந்தன. அதுபோலவே எண்ணிறந்த கவிதைகளும்தான்). எனது


படிப்பகம்

www.padippakam.com

வாசிப்பிற்கு எட்டிய வரையில் அமையவில்லை. இதில் வெளிவந்த கவிதைகள் பலவும் இந்தியத் தேசியத் தலைமைகளையும், ஈழத்துத்தேசியத்தலைமைகளையும் ஒருங்கே போற்றின (இரட்டைத்தேசிய உணர்வு) சமூக சீர்திருத்த கருத்துக்களையும் பாடின. இந்நூற்றாண்டில் ஈழத்தில் பாவலர்துரையப்பாப்பிள்ளையும் இவ்வாறான சமூக சீர்திருத்தக் கருத்துக்களைப் பாடினார். இவற்றை விடவும் உணர்வுபூர்வமான சமூகப்பிரக்ஞை தொனிப் பவையாக ஈழகேசரிக் கவிதைகள் அமைந்தன. இத்தகைய சமூகச் சீர் திருத்த விடயங்களுள் சாதிப் பிரச்சினை முக்கியமானதொரு இடத்தைப் பிடித்திருந்தது. இதில் காந்தியத் தாக்கம், ஈழகேசரியின் செல்வாக்கு, யாழ்ப் பாண வாலிபர் காங்கிரஸின் செயற்பாடுகள் என்பன இவற்றை உணர்வுபூர்வமாகக் கையாள்வதற்கான பின்னணியாய் அமைந்தன என்கிறார் கலாநிதி. செ. யோகராசா சத்தியநாதன் என்பவரது ஈழகேசரிக் கவிதையில் இருந்து அவர் உதாரணம் தரும் வரிகள் இதோ:

தீண்டப்படாதாரென்று உலகில்
திசைமுகன் செய்ததுண்டோ?
வேண்டப்படுவதீதோ - ஐயோ
வீண்கதை பேசுகிறீர்.

உரிமை உரிமை என்பீர் - உங்கள்
எளிய சகோதரர் தங்கள்
உரிமை உரிமையென்றால் - வேத
ஏடுவிரிப் போமென்பீர்

(ஈழகேசரி 21-03-1934)

இதே காலகட்டமாகிய முப்பதுகளில் மலையகத்தில் உருவாகிய கவிதைகளோ ஈழகேசரியின் சமரசக்குரல் களாக மெலிந்தொலிக்காமல் வீறுகொண்ட பாரதியின் குரலாய் ஒலிக்கின்றன. மலையக மக்களின் தொழிற் சங்க உரிமைகளுக்காகப் போராடிய நடேசய்யரும் அவரது துணைவியரான மீனாட்சியம்மாளும் தொழிலாளர் பற்றிய பல பாடல்களை எழுதினர். தொழிலாளர்கள் என்ற ரீதியில் மட்டுமல்லாது இன ரீதியாகவும் இவர்கள் ஒடுக்குமுறைக்குள்ளானதால் மலையக மக்களின் எதிர்ப்புக் குரலாகவும் இவர்களது பாடல்கள் அமைந்தன. இதற்கு மலையக மக்களின் நாட்டார் பாடல்களில் கலந்திருந்த வெள்ளையர் இன, எதிர்ப்புணர்வும் தோட்ட முதலாளிய எதிர்ப்புணர்வும் உந்துசக்தியாக இருந் திருக்கலாம். இதை ஒட்டியே மீனாட்சியம்மாளின் பாடல்கள் எதிர்ப்புக் குரலாகவும் பொதுமக்கள் விரும்பக் கூடிய ஜனரஞ்சக மெட்டிலும் அமைந்திருந்ததாகவும் சிங்களப் பெருந் தேசிய எதிர்ப்புணர்வும் கலந்த போர்க் குரலாகவும் வெளிவந்தன. அவ்வாறான பாடல் ஒன்றின் பகுதி இது.

சிங்கள மந்திரிகள் கூற்று - மிக
சீர் கெட்டதென்று சாற்று
சங்கடமே நேருமென தோற்று - திந்திய
சமூகம் நெருப்பாய் வரும் காற்று

நன்றி கெட்டுப் பேசும் மந்திரிமாரே - உங்கள்
நியாயம் என்ன சொல்லுவீரே
இன்றியமையாதவொரு போரே - செய்ய
இடமுண்டாக்குகின்றீர் நீரே.

இன்றைக்கும் எமது தமிழ் தேசிய போராட்டச் சூழ லுக்கும் பொருந்தி வரும் இக்குரலை முப்பதுகளிலேயே யாழ்ப்பாணத்துக்கு வெளியே மலையகத்தில் கேட்கக் கூடியதாக இருந்தது. இத்தகையதொரு குரல் யாழ்ப் பாணத்தில் இருந்து எழுவதற்கு வெகுகாலம் காத்திருக்க வேண்டியிருந்தது. யாழ்ப்பாணத்தில் வெளிவந்த 'மறுமலர்ச்சி' (1946) இதழ்களிலும் இத்தகைய ஓங்கி ஒலிக்கும் குரல்கள் காணக்கிடைக்கவில்லை.

1948இல் இலங்கை சுதந்திரமெய்தியபின் சிங்களப் பெருந்தேசியவாதத்தின் ஒடுக்குமுறை தமிழர்களுக்கு எதிராக திரும்பியது. நாடாளுமன்றத்தில் தமிழர்களின் ஒட்டுமொத்த பிரதிநிதித்துவத்தில் வெட்டு விழுத்து முகமாக இந்திய வம்சாவழித் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. அத்துடன் குடியுரிமையும். இந்நிலை யில் இவை குறித்த பல்வேறு படைப்புகள் வெளிவரத் தொடங்கின. மலையகத்தமிழர்களின் பிரச்சினை குறித்து தேச பக்தன் போன்ற பத்திரிகைகளில் பல்வேறு படைப்புகள் இடம்பெற்றன. முன்பு நடேசையர், மீனாட்சியம்மாள் போன்றோர் நாட்டார் மெட்டுகளில் பல்வேறு பாடல்களை புனைந்தளித்ததுடன் அவை சிறுசிறு நூல்களாக வெளியிடப்பட்டன. இது போலவே சி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் ஆங்கிலக் கவிதைகள், வீடற்றவன் போன்ற நாவல்கள் வெளிவந்தன. மலையகத் தோட்டத்தொழிலாளிகள் மீது இலங்கை அரசு பிரயோ கித்த ஒடுக்குமுறை மூன்று வகையான பாதிப்பைக் கொண்டிருந்தன. ஒன்று அவர்கள் இந்தியர்கள் என்பது. இரண்டு தொழிலாளிகள் என்பது. மற்றைய தமிழர்கள் என்பது. ஆக இவர்கள் இம்மூன்று வகையிலும் ஒடுக்கு முறைக்குள்ளானார்கள். இதனால் இவர்களது போராட் டம் தொழிலாளர்கள் போராட்டமாக மட்டும் புரிந்து கொள்ளப்படாமல் தமிழர்களின் போராட்டமாகவும் அடையாளம் காணப்பட்டது. காட்டப்பட்டது. இதனால் இவர்கள் போராடும் பொழுதும் அது சமகாலத்தில் தொழிலாளர்களின் போராட்டமாகவும், தமிழர்களின் போராட்டமாகவும் அமைவது தவிர்க்க முடியாததாகி அதன் தொடர் வளர்ச்சி மலையகத் தமிழ் தேசியத்தை நோக்கியதாக அமைவதாகவும் தம்மை ஒரு மலையகத் தமிழ் தேசிய இனமாக அங்கீகரிக்குமாறும் கோரிநிற் கிறது. மலையகத் தமிழ் மக்கள் இத்தகைய நெருக்கு வாரத்துக்குள்ளானபோது, மலையகத்தவரோடு மலைய கத்திற்கு வெளியிலும் படைப்பாளிகளின் குரல்கள் வெளியாகின. அ.செ.மு. வின் 'காளிமுத்துவின் பிரஜா வுரிமை' என்னும் சிறுகதை மிகவும் பிரசித்தமானது.

1956ல் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் தாக்கம் ஆங்கிலமே கற்றறிந்த புத்திஜீவிகளையும் தமிழின் பால் ஈர்த்தது. தமிழ் இலக்கியங்களின் பால் அக்கறை கொள்ளச் செய்தது. ஆங்கிலத்தில் மட்டும் படைப்பிலக்கியங்கள் எழுதிய சி.வி. வேலுப்பிள்ளை 'ஒப்சேவர்' ஆங்கிலப்பத்திரிகை ஆசிரியர் குழுவில் பணியாற்றிய ஏ.ஜே. கனகரத்தினா போன்றோரை இவ் வகையினர்க்கு உதாரணமாகக் கூறலாம். ஏ.ஜே.க. தமது முதல் நூலான 'மத்து' வை சிங்களம் மட்டும் சட்டத்திற்கு சமர்ப்பித்திருந்தமை ஒன்றே இதற்கு சான்றாகும். இவ்வாறு தமிழில் ஈடுபாடு கொண்ட ஏ.ஜே.க. போன்றோர் ஓர் அறிவு நிலைக்குட்பட்ட பார்வையை

www.padippakam.com

வரிக்க காசி.ஆனந்தன் போன்றோர் உணர்வு மயப்பட்ட பார்வையை வரித்தனர். சிங்கள எதிர்ப்புணர்வு, தமிழுணர்ச்சிக் கவிதைகளை படைத்தளித்தனர். க. சச்சிதானந்தன், பரமஹம்சதாசன், யாழ்ப்பாணன் போன்றோர் தமிழுணர்வுக் கவிதைகள் பல தந்தனர் பரமஹம்சதாசனின் "வாழ்க ஈழத் தமிழகம் வாழ்க இனிது வாழ்கவே" என்ற பாடல் தமிழரசுக் கட்சியின் அரசியல் மேடைகளில் தமிழ் தேசிய கீதமாகவே ஒலித்தது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறானவர்களில் பலர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கவிஞர்கள். கிழக்கு மாகாணத்தவர் ஏற்கனவே திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களால் பாதிக்கபட்டிருந்தவர்கள். சிங்களக்காடையர்களைத் தன்னிச்சையாக எழுந்து எதிர்த்துப் பொருதியவர்கள்.இத்தகைய சூழலின் கவிஞர்கள் உணர்ச்சி மயமாக இருந்ததில் தவறில்லை. ஏற்கனவே திராவிட இயக்கங்களின் பாதிப்பும், பாரதிதாசன் போன்ற கவிஞர்களின் வாசிப்பினாலான தாக்கங்களும் உடையவர்கள் தமிழ் உணர்வால் உந்தப்பட்டு இத்தகைய தமிழ் உணர்ச்சிக் கவிதைகளைப் படைத்தார்கள். கவிஞர் முருகையன் கூட பாரதிதாசன் பாதிப்பினால் எழுதிய கவிதை ஒன்றின் வரிகளைக் கவனிப்போம்.

"இமயத்தில் கொடிவைத்தல் போல் மன
எழுகைப் பொன் சிகரத்தில் முடிவைத்தலால்
தமிழுக்கு விறல் என்றுபேர்"

இந்தவிதமேதான் பாதிப்புற்ற கிழக்கு மாகாணத்தின் நீலாவணன், பாண்டியூரன், ஜீவா. ஜீவரத்தினம், இராஜபாரதி, காசி ஆனந்தன் , எருவில் மூர்த்தி, மு.சடாட்சரன் எனப் பெரிய கவிஞர்பட்டாளமே கவிதைகளாய் வரைந்து தள்ளினர். 'சுதந்திரன்' இவர்களுக்குக் களமாய் அமைந்தது. இவர்களது கவிதைப் படைப்புகள், மொழிவழித் தேசிய உணர்வுநிலைப் பருவத்தின் தவிர்க்க முடியாத வெளிப்பாடு என்பதைப் புரிந்துகொள்ளாமல் வெறுமனே நிராகரிப்பது ஒருகாலகட்டத்தின் இலக்கிய வெளிப்பாட்டுத் தேவையையே நிராகரிப்பது ஆகும்.

'சுதந்திரன்' ஆரம்பகால தமிழ் தேசிய உணர்வு மிக்க படைப்புகளிற்கு களமாக அமைந்தது. இதன் ஆரம்ப ஆசிரியராக கடமையாற்றியவர் பலபத்திரிகைகளை தமிழகத்திலும் இலங்கையிலும் நடத்தியவரான நடேசய்யர். தமிழகத்தில் இவர் நடத்திய 'வர்த்தக மித்திரன்' பத்திரிகையை 'சுதந்திரன்' எனப் பெயர் மாற்றியிருந்தவர். அந்தப் பெயரையே இலங்கையிலும் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்க்கட்சி (தமிழ்காங்கிரஸ் - எஸ்.ஜே.வி. ஜி.ஜி. பொன்னம்பலம்) யின் பத்திரிகைக்கு சூட்டியிருந்தார். ஆயினும் இவர் ஆசிரியராகிய ஐந்து மாதங்களில் இறந்து விடவே கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அமரர். எஸ்.டி.சிவநாயகம் இதன் ஆசிரியரானார். 1956-ல் நிகழ்ந்த காலிமுகத்திடலின் சத்யாக்கிரகப் போராட்டம் (தமிழரசுக்கட்சியின்) தமிழர் மத்தியில் உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. இதன் பிரதிபலிப்பாக மு. தளையசிங்கம் 'சுதந்திரனி' ல் 1957ல் 'தியாகம்' என்ற பெயரில் ஒரு சிறுகதையை எழுதியிருந்தார். இதில் வரும் இளைஞனின் பாத்திரம் தமிழர் பிரச்சனைக்காக அகிம்சைவழியில் போராடி உயிர்துறக்கிறான். இந்தக் கதை வெளிவந்த மூன்றாண்டுகளுக்குள் கலைச்செல்வி நாவல் இலக்கியப் போட்டியில் முதலாவதாக தெரிவு செய்யப்பட்ட இவரது நாவலான 'ஒரு தனிவீடு' தமிழர் பிரச்சனைக்கான ஒரே தீர்வு தனிநாடே என்றும், அதற்கான வழிமுறை ஆயுதப் போராட்டமே என்றும் கூறியது. இதற்கு அடுத்து சிறந்த நாவலாக தெரிவு செய்யப்பட்ட தனது நாவலான 'ஞாயிறும் எழுகின்றான்' உம் தேசிய இனப் பிரச்சினையை மையமாக வைத்து எழுதப்பட்டதென சே. யோகநாதன் குறிப்பிடுகிறார். இது வெளிவராததால் அவரது கூற்றின் உண்மை நிலைப்பாடு எமக்குத் தெரியவராது மு. தவின் 'தியாகம்' சிறுகதை எழுதப்பட்ட காலத்திற்கும் 'ஒரு தனி வீடு' எழுதப்பட்ட காலத்திற்கும் இடையில் மிகக் குறுகிய காலமே இருந்ததாயினும் தமிழ் தேசியம் பற்றிய பார்வையில் ஒரு தீவிர நிலைப்பாடு எவ்வாறு எடுக்க முடிந்தது என்பது ஆச்சரியகரமானது. 1970 ல் வெளிவந்த போர்ப்பறை நூலின் முன்னுரையில் 'ஒருதனிவீடு' நாவலைப் பற்றிக் குறிப்பிடும் மு.த. "அதில் ஒரு தீர்க்க தரிசனமும் இருப்பதாக என் எண்ணம்" என்று குறிப்பிடுகிறார்.

சுதந்திரன் ஒரு தமிழ் தேசிய கண்ணோட்டமுடைய கட்சிப்பத்திரிகையாக இருந்த போதிலும் அதன் ஆசிரியர் குழுவில் அ.ந. கந்தசாமி, சில்லையூர் செல்வராஜன், பிரேம்ஜி என முற்போக்கு எழுத்தாளர்களாக அறியப்பட்டவர்களும் இருந்தனர். இதனால் டானியல், டொமினிக் ஜீவா போன்றோர்க்கும் அது எழுதுகளமாயிருந்தது. ஆயினும் இவர்களில் எவரேனும் மறந்தும் தமிழ்த் தேசிய பிரச்சினை குறித்து எழுதியதில்லை. பார்வை செலுத்தியதும் இல்லை. எஸ். பொன்னுத்துரையின் 'சடங்கு' நாவல் கூட இதில்தான் தொடராக வெளிவந்தது. இவர் கூட முற்போக்குத் தொடர்பு அற்றிருந்த காலத்திலும் பௌத்த கிறிஸ்தவ இஸ்லாமிய மதம் சார்ந்த கதைகளைப் புனைந்து 'வீ' சிறுகதைத் தொகுதியில் சேர்த்திருந்த போதிலும் இனப்பிரச்னை குறித்த கதைகள் படைத்தளிக்கவில்லை. முற்போக்கினர் தமக்கு பிற்போக்குச் சாயம் பூசப்பட்டுவிடக் கூடாது என்பதால் இனப்பிரச்சினை சார்ந்த படைப்புகளை எழுதாமல் தவிர்த்ததுபோல எஸ். பொ. வும் தமது நற்போக்கிற்கு களங்கம் ஏற்பட்டு விடக் கூடாதென்பதால் இனப்பிரச்னைபற்றி எழுதாமல் தவிர்த்தார் போலும். இவ்வாறு கோட்பாடுகளின் இறுக்கத்தால் பச்சையதார்த்தம் மூடி மறைக்கப்பட்டது மகாகவி, முருகையன், நீலாவாணன் போன்ற கவிஞர்களும் தமது கவிதைத் தொகுதிகளில் தமிழ் உணர்வு சார்ந்தோ அல்லது அவர்கள் காலத்தில் பேரின வாத ஒடுக்குமுறைகளால் தமிழ் பேசும் மக்கள் எய்திய பாதிப்பையோ, படைப்பாக்கியிருந்தால் அதனைத் தமது தொகுதிகளில் சேர்த்துக் கொள்ளாதமை குறித்து நாம் இன்று கவலைப்பட நேர்கிறது. முற்போக்கு விமர்சனங்கள் எங்கே தமக்கு பிற்போக்கு முத்திரை குத்திவிடுவார்களோ என்ற அச்சம்தான் இதற்கு காரணமாயிருந்திருக்கலாம் போலும். அப்படியென்றால் சாதிப் பிரச்சினை குறித்து அவர்கள் எழுதி அவை தொகுப்பில் வந்ததன் காரணம் தாமும் முற்போக்கு என்ற அடையாளம் பொறித்துக் கொள்ளத்தானா என்று நாம் ஐயப்பட்டால் அதுவும் தவறல்ல போலும். இந்நிலைமையில் காசி ஆனந்தன் போன்றவர் துணிந்து அந்நாளிலே உணர்ச்சிக்



படிப்பகம்

www.padippakam.com

கவிதைகளையும், 'தமிழன் கனவு' எனத் தனித்தமிழரசு வேண்டிப்பாடிய காவியத்தையும் கற்பனாவாதம் எனத் தூக்கி எறிய இவர்களுக்கு ஏது உரிமை எனக் கேட்கத் தோன்றுகிறது 1958ல் தமிழர்பட்ட துயர் கூட ஈழத்தின் மூத்தகவிஞர்களின் பதிவாக அவர்களது தொகுப்புகளில் இடம் பெறாதது விசனத்திற்குரியது. 1967ல் வெளிவந்த 'அது' கவிதைத் தொகுதியில் மட்டும் மு.பொ. அதைப்பதிவு செய்திருக்கிறார். 'ஒருத்தி மட்டும்' என்ற கவிதையின் இறுதி வரிகளில்

"ஓடு
ஒருத்திக்கே
இவ்வூரில் உண்டாம் இடம் என்று
அங்கவிழ்த்தாய் நாயை
அது பாய்ந்தென் கொங்கை சிறிய மூக்கோடு இதழ்பிய்த்து....
அவையன்றோ வீரர்க்கு அழகு" என்கிறார் மு.பொ.

1961 இல் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழக்கட்சியினர் அரச அலுவலகங்களின் முன்பாக நிகழ்த்திய மறியல் போராட்டம் பொது மக்களின் மத்தியில் மிகுந்த ஈடுபாட்டையும், அது ஓர் அறப்போர் வடிவம் என்று ஆணித்தரமான தியாகங்களுக்கு தயாரான மனநிலையையும் தோற்றுவித்திருந்தது. (தமிழ்க்கட்சியின் தலைமைகள்தான் அடுத்தகட்டத்தைத் தீர்மானிக்க முடியாதவர்களாகி, தொடர்வழிகாட்டலுக்குத் தயாரற்றவர்களாகத் தடுமாறினர்.) 'அறப்போர் தொடுப்போம்' என்ற கோஷங்களோடு மக்கள் அணி திரண்டனர். இதன் உணர்வு நிலைப்பிரதிபலிப்பை (பண்டைத் தமிழ் வீரத்துடன் பொருத்திப் பார்க்கும் வகையிலானதேனும்) சிறந்த கவிதைகளாக நீலாவணன் போன்றோர் இக்காலகட்டத்தில் எழுதினர்.

"காவினில் வந்து கருங்குயிலொன்று
கதவு திறந்திடுவீர்
ஆவணி வந்தது ஆவணி வந்தது
ஆழ்துயில் நீங்குமெனக்
கூவிய இன்னொலி காதில் விழுந்தது.
..............................................
சாவது போரினில் சர்க்கரை என்றொரு
சங்கொலி கேட்குதடா"

'வழி' தொகுப்பிலேனும் நீலாவணன் இதுபோன்ற வரலாற்று ஆவணப்படுத்தலுக்குதவும் கவிதைகளை ஏன் தவிர்த்தார் என்பது கவலையளிக்கிறது.

தமிழ் தேசிய பார்வையை உணர்வு பூர்வமானதாக மட்டும் அணுகியோர் நடுவில் அறிவார்த்தமாக, வரலாறு பூர்வமாக தீவிரப்பார்வையை வலியுறுத்தும் ஒருவராக மு.தளையசிங்கம் தமது 'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி' கட்டுரைத் தொடர் மூலம் வெளித்தெரியவருகிறார். ஏற்கனவே விமர்சகவிக்கிரகங்கள், முற்போக்கு இலக்கியம், மூன்றாம் பக்கம் எனப் பல்வேறு விமர்சனங்கள் மூலம், தேசிய இனப்பிரச்சினை குறித்து பேசுதலே ஒரு பிற்போக்கு வாதம் என்பதைத் தனியாக நின்று எதிர்த்துப் பொருதியவர் இவர். இனப்பிரச்சினையை கணக்கில் எடுக்காத முற்போக்கினரின் முடக்குவாதம் ஒரு பக்கம். சமூக முரணைக் கருத்திலெடுக்காத தமிழரசியலார் போக்கு ஒரு பக்கம் என இரு கூறுபட்ட மனப்பிளவை நோயாளி போல் தமிழ் மனம் உள்ளதை தமது விமர்சனங்கள் மூலம் முன்வைத்தார். தருமு சிவராமு போன்றோர் இங்கு நின்று எதிர்கொள்ளத் தயங்கிய சூழலில், எஸ். பொ. கூட தமிழர் பிரச்சினை பற்றியப் பேசாமல் தப்புதல் செய்து நற்போக்குக் காட்டிய சூழலில் மு.த. வினது தனிவழிப் பயணம் போலமைந்த ஒன்றே தான். ஆயினும் அதுவே இன்று பலரும் பேசுதற்கான முன்னோடிப் பயணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

விபுலாநந்த அடிகளின் மாணவரான மறைந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் மு. த வைப் போல் தமிழ் தேசிய வரலாற்றுப் பண்பாட்டுச் சூழலில் புதிது விழைந்த ஒருவராக நாம் அடையாளம் காண வேண்டும். ஈழத்து வாழ்வும் வளமும் எனும் இவரது நூல் வடக்கு-கிழக்கு இணைந்த கலை. பண்பாட்டு வளக்கூறுகளை ஆய்வு செய்து ஆக்கப்பட்ட ஒன்றாகும். வடக்கு - கிழக்கு வரலாறுகளை (தொல்லியல் ஆய்வுகளையும் மேற்கொண்டு) எழுத இவர் ஆவல் கொண்டிருந்தமை நிறைவேறவில்லை. தமிழில் நாடகத் துறையில் பேச்சு மொழி வழக்கை கையாண்டு வெற்றிகண்டவர். நாடகத் துறையில் தமிழ் தேசிய அரசியல் அரங்கை தொடக்கி வைத்தவரும் இவரே. சங்கிலி, துரோகிகள் என்ற இவரது நாடகங்கள் இதற்கு உதாரணமாவன. இவரது நாடகங்களை விபுரலானந்த அடிகள் சிறப்பித்துப் பேசியமை குறிப்பிடத்தக்கது.

1930 களில் யாழ்ப்பாணத்தின் பிரதேச பத்திரிகையாக தொடங்கிய ஈழகேசரி 1958ல் ஜுன் மாதத்தோடு நின்று போகிறது. அறுபதுகளில் 'ஈழநாடு' ஆரம்பிக்கப் படுகின்றது. இது 1961ல் நிகழ்ந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தோடு மக்கள் மத்தியில் காலை ஒரு பதிப்பு, மாலை ஒரு பதிப்பாக வெளிவந்து தன்னை வளர்த்துக் கொண்ட ஒரு பத்திரிக்கை. தீர்க்கமான ஒரு பார்வையை வரித்திருந்தால் தமிழ் தேசியம் சார்ந்த அடுத்த கட்ட வளர்ச்சிக்கு தன்னதும் பங்களிப்பை நல்கியிருக்கலாம். ஆனால் அது தனது வளர்ச்சிக்கு தங்கி நின்றதோ 'கோகிலாம்பாள் கொலை வழக்கில்' தான் என்பதால் இதுவும் தமிழ் தேசிய சிந்தனைக்கோ இலக்கிய வளர்ச்சிக்கோ ஏதும் பெரியதாய் சாதிக்கவில்லை. கே. பி. ஹரன் என்ற இந்திய பிராமணரின் ஆசிரியத்துவத்தின் கீழ் இது இன்னுமொரு படி உயர்ந்த இந்துசாதனம் பத்திரிகையாகத்தான் அமைந்தது. யாழ்ப்பாண உயர்சைவ வேளாண்குலத்தினரின் நலன்களுக்குக் குந்தகம் இல்லாமல் வெளிவந்தது. ஆனால் எண்பதுகளில் சபாரத்தினம் அவர்களின் துணிச்சல் மிக்க தலையங்கங்களால் பின்னால் புகழ்பெற்றது என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது. இவ்வாசிரிய தலையங்கங்கள் தமிழியல் வெளியூடாக நூல் வடிவத்தில் வந்தது குறிப்பிடத்தக்கது.

இக்கால கட்டத்தில் (60களில்)'சுதந்திரன்' பத்திரிகையில் உதயணன், சிற்பி, நவம், பாலேஸ்வரி, செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் என தெரியவரும் யாவரும் எழுதிய சிறுகதைகள், செங்கை ஆழியான்-செம்பியன் செல்வன் இணைந்து எழுதிய தொடர்கதை என்பன தமிழ் தேசியப் பிரச்சினைகளை மையம் கொண்டவையாய் அமைந்திருந்தன. வீரகேசரியில் எஸ்.பொ., குறமகள், சு.வே. உதயணன் என்போர் இணைந்து எழுதிய 'மத்தாப்பு' எனும் நாவலிலும் இனக்

www.padippakam.com

கலவரம் பற்றிய குறிப்புகள் விரவியுள்ளன எனினும் கதை இனப்பிரச்சனையை மையமாய் கொண்டதல்ல.

எழுபதுகளின் முன்பகுதிகளில் சில முக்கிய நிகழ்வுகள் இடம் பெற்றன. பல்கலைக்கழக புதுமுக நிலையில் பயிலும் மாணவர்களின் தேர்வில் தரப்படுத்தல் அறிமுகப் படுத்தப்பட்டமையால் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட விரக்தி நிலை போராட்ட வடிவமெடுக்கின்றது. தமிழ் இளைஞர் இயக்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இக்காலகட்டத்தில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட வேண்டுமென்ற தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இலங்கைக்கிளையினரின் தீர்மானத்திற்கு எதிராக கொழும்பில் நடத்துமாறு அரசு (சிறிமாவோ தலைமையிலான இடதுசாரிகள் உள்ளிட்ட ஐக்கிய முன்னணி அரசு) கோரிக்கை விட்டது. அது மறுக்கப்பட்ட சூழலில் அதற்கெதிரான பல்வேறு கெடுபிடிகளை அரசு மேற்கொண்டது. அதன் பின்னணியில் முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் நின்றது. யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுவது உறுதியான நிலையில் வெளிநாட்டுப் பேராளர்களுக்கான விசா மறுக்கப் பட்டது. இது அனைத்துலக தொடர்பு சாதனங்களுக் கூடாக (பி.பி.சி) அம்பலமாக்கப்படவே பேராளர்களுக்கு அரசு அனுமதியளித்தது. இந் நடவடிக்கைகளினால் ஆய்வு மாநாடு என்ற அம்சங்களை மீறி, விழா என்ற சம்பிரதாயங்களையும் மீறி, மாநாடு ஒரு தமிழ் தேசிய எழுச்சி வடிவமாகவும் மாறுகின்றது.

முற்போக்கு விமர்சகர்கள், எழுத்தாளர்கள் இதனை புறக்கணிக்கும் மிக மோசமான நிலைப்பாட்டை வரித்ததற்காக பேராசிரியர் சிவத்தம்பி பின்னால் வருத்தப்பட்டாலும் இது வரலாறு ஆகிவிட்டது. இதன் இறுதி நாள் நிகழ்வின் போது படையினரின் அத்துமீறல் நடவடிக்கைகளால் ஒன்பது தமிழ் உயிர்கள் பலியாகின. இவற்றை கண்டிக்கவும் முற்போக்கு வட்டத்தினர் முன் வர வில்லை. இதில் உயிரிழந்தவர்களிற்காக நிறுவப்பட்ட நினைவுச்சின்னங்களும் தொடர்ந்து நொறுக்கப்பட்டன. இதனால் தமிழ் மக்களிடை உணர்ச்சிக் கொந்தளிப்பு உயர்ந்து கொண்டே வந்தது. இந்நிகழ்வுகள் பற்றி எந்த முற்போக்கும், நற்போக்கும் வாய் திறக்கவில்லை. ஆயினும் தமிழ்மக்களின் உணர்வின் கொதிநிலை உயர்ந்து வந்ததை இந்நிகழ்வு சம்பந்தமாக எழுதிய 'கல்லும் அலைகளும்' கவிதையின் மூலம் யேசுராசா பதிவு செய்தது காலப் பெறுமானம் உடையது. இது போலவே 'புதிய சப்பாத்தின் கீழ்' என்ற கவிதையும் மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக தமிழ் மக்கள் அடிமைகளாய் இருந்து வருவதை அழுத்தமாய் பதிவு செய்தது.

1975இல் கொழும்பில் ஐக்கிய முன்னணி அரசுக்கு தமது விசுவாசத்தைக் காட்டும் முகமாகவும், உலகத் தமிழராய்ச்சி மாநாட்டின் மூலம் எய்திய அவமானங் களிற்கும் பதிலீடாக ஏதோ இயற்றுவதான முனைப்பைக் காட்டவும், தேசிய ஒருமைப்பாட்டு மாநாடு ஒன்றை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒழுங்கு செய்தது. அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கர் தலைமை வகித்தார். இந்த ஏற்பாடுகளின் பின்னணி முன்னணி ஊதுகுழல்களின் ஒத்து ஊதல்களின் நடுவே மாநாட்டின் அதிர்வெடி போல ஒரு குரல் தனித்து ஒலித்தது. அது சண்முகம் சிவலிங்கம் அவர்களின் குரல். கவிதை வேட்டொலியாக ஒலித்த எதிர்ப்புச் சீற்றம் அங்கிருந்த முற்போக்கினரின் இடையே அசௌகரியத்தை ஏற்படுத்தியது. ஆயினும் உண்மையின் குரலாகவும் காலத்தின் குரலாகவும் இருந்தது. இவ்வகையில் பார்த்தால் எண்பதுகளின் காலகட்ட கவிதைக் குரல்களின் பதிவாக ஆவணமாக வெளிவந்த கவிதைகளின் தொகுப்பிற்கு 'மரணத்துள் வாழ்வோம்' என்ற அவரது கவிதை ஒன்றின் (வெளியார் வருகை) வரிகள் தலைப் பாகப் போடப்பட்டமை பொருத்தப்பாடானதாகவே இருக்கின்றது.

தேசிய ஒருமைப்பாடு என்ற பிரச்னைக்குத்தீர்வல் லாத கோஷங்களின் திரைமறைவில் நாடகமாடிய முற்போக்குச் சூழலைத்தாண்டி இக்காலகட்டத்தில் மலையக எழுத்துலகப் பக்கம் எட்டிப்பார்த்தால் அங்கே ஓர் ஆரோக்கியமான சூழல் தோற்றப்படுவதை நாம் காணலாம். "1969 சிக்கன் ராஜ் எழுதிவெளியிட்ட தாயகம் என்னும் குறுநாவல் பிரஜா உரிமைச் சட்டத்தால் அநாதரவாக்கப்பட்டு, சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தால் மீண்டும் தமிழ் நாடேகும் மலையகத்தவர் வரலாற்றை சோகம் ததும்பக் கூறுகின்றது" என்கிறார் தெளிவத்தை ஜோசப். இந்த ஒப்பந்தத்தினால் தமிழ் நாடேகிய ஒரு மலையக்கவிஞராகிய வண்ணச் சிறகு எனும் சிவானந்தனின் 'சென்று வருகிறேன் ஜென்ம பூமியே' எனும் கவிதை எம் மனத் திரையில் எழுந்து சோகத்துடன் கைகாட்டி மறைகிறது.

1974ல் தெளிவத்தை ஜோசப்பின் 'காலங்கள் சாவதில்லை' வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தது. இம் மக்களிடையேயும் கண்டும் காணாமலும் இன உணர்வுப் பகைமை புகைந்து கொண்டேயிருக்கின்றது என்பதையும் வெகுவிரைவில் அது இனக்கலவரமாய் வெடிக்கும் என்பதையும் காட்டிய நாவல் காலங்கள் சாவதில்லை இனவாத நாற்றம் வீசும் பிற்போக்கு நாவல் என்று முற்போக்கு விமர்சகர்கள் விமர்சனம் கூறினார்கள். அந்த ஆண்டுக்கான சாகித்திய விருதுக்கு எடுபட்டு, இனவாதம் பேசுகின்றது சிங்களவர்கள் ஆள் கொண்டு வந்து தோட்டத்து மக்களை அடிப்பதாய் காட்டுகின்றது என்று காரணம் கூறி இறுதி நேரத்தில் சாகித்திய பரிசுக்கு லாயக்கு அற்ற நாவல் என்று ஒதுக்கபட்ட நூல்..(5) எனத் தனது நாவல் எவ்வாறு பரிசுக்குரியதல்லதாக்கப்பட்டது என விவரிக்கின்றார் தெளிவத்தை ஜோசப் இது தேசிய இனப்பிரச்சினை சார்ந்து முற்போக்கு விமர்சகர்கள் எவ்விதமான அணுகுமுறையை வைத்திருந்தார்கள் என்பதற்கு ஓர் உதாரணம்.

அதே சமயத்தில் அதற்குப் பதிலாக 1974ம் ஆண்டில் சாகித்திய பரிசு கொடுக்கப்பட்ட அருள் சுப்பிரமணியத்தின் நாவல் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். இந்நாவல் இனங்களுக்கிடையேயான பிரச்சினைக்குரிய தீர்வாக ஈழகேசரிக்காலத்திலேயே (1933- விடிவு-சிறுகதை-எஸ்.கே) முன் மொழியப்பட்ட சிங்கள-தமிழ் கலியாணங்களையே வழிமொழிந்தது. இந்த வழி மொழிதல் பிரபல முற்போக்கு விமர்சகர்களாலும் பாராட்டப்பட்டது. இந்நூல் வெளியீட்டு விழாவின் போது ஆய்வுரைகள் தொடங்கி வ. அ.வின் முறை வந்தது. இரண்டு இனங்களைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து


படிப்பகம்

கொள்வதால் மட்டும் இன ஐக்கியம் உண்டாகி விடாது என்று எடுத்த எடுப்பிலேயே ஒரு போடு போட்டு ஆய்வரங்கத்தில் ஒரு சுவையான விவாத மேடையை உண்டாக்கி விட்டார் வ.அ... திரு. கைலாசபதி நாவலை மிக உயர்வாக விமர்சித்ததோடு வ.அ. வின் குற்றச்சாட்டிற்கும் பதில் கூறினார்... என்று தமது நாவல் பற்றி அருள் சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார். இங்கே தெளிவத்தை ஜோசப்பின் நாவல் மீது முற்போக்கு விமர்சகர்கள் வைத்த குற்றச்சாட்டும் அருள் சுப்பிர மணியத்தின் நாவல் மீது வ.அ. வைத்த குற்றச்சாட்டும் அதற்குக் கைலாசபதியின் பதிலளிப்பும், பின்னால் சாகித்திய மண்டலப் பரிசு அருள் சுப்பிரமணியத்தின் நாவலுக்கு வழங்கப்பட்டதையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் யதார்த்தம் எங்கள் நெற்றிப் பொட்டில் ஓங்கி உறைக்கிறது.

காலந்தோறும் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக முற்போக்கினர் எவ்விதமான யதார்த்தத் திற்கு விரோதமான நிலைப்பாட்டை வரித்து வைத்திருக் கிறார்கள் என்பது தெளிவாகிறது. ஆயினும் இவற்றா லெல்லாம் பாதிப்புறாமல் தெளிவத்தை ஜோசப் தெளிவான பார்வை கொண்டு தேசிய இனப்பிரச் சினையை மையமாகக் கொண்ட சிறு கதைகளையும் (உ-ம்-பொட்டு) 1983 இனக் கலவரத்தைப் பின்னணி யாகக் கொண்டு எழுதி தினகரனில் தொடராக வெளிவந்த நாவலையும் (1999) எழுதியமை குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

1983 இன் பின்னணியை வைத்தெழுதப்பட்ட தெளிவத்தையின் நாவல் போலவே 1977 ன் இனவிரோதக் கலவரத்தைப் பின்னணியாக வைத்தெழுதப்பட்ட நாவல் சி.வி. வேலுப்பிள்ளையின் 'இனிப்படமாட்டேன்' என்பதாகும். 1979 ல் வெளிவந்தது தி. ஞானசேகரனின் 'குருதிமலை' மலையகத்தில் நிகழந்த காணிப்பகிர்வும், அதற்கான அரசியல் பின்னணியும் இனக்கலவரமும் இந்நாவலின் பின்னணியாக அமைந்துள்ளன. சமகாலப்பிரச்சனையை சத்தியத்துடன் பேசுவது இந்த நாவல்'' என்கிறார் தெளிவத்தை ஜோசப்.

அறுபதுகளில் ஈழக்குமார் வெளியிட்ட 'குறிஞ்சிப்பூ' மலையகக் கவிஞர்கள் பலரின் கவிதைகள் உள்ளடங்கி யவை. குறிஞ்சித் தென்னவன் சக்தி அ. பாலையா வரை பின்னால் வண்ணச் சிறகு வரையும் பல மலையகக் கவிஞர்கள் தமிழ் தேசிய பார்வை விரியத் துணைச் செய்தனர். வண்ணச் சிறகுவின் இத்தகைய கவிதைகள் ஐந்து, மரணத்துள் வாழ்வோம் தொகுப்பில் இடப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. மலையகத்தில் 'கலை ஒளி' சஞ்சிகையிலிருந்து பின்னால் வெளிவந்த 'தீர்த்தக்கரை' 'நந்தலாலா' வரையும் தமிழ் தேசியப் பார்வையிலான படைப்புகளிற்கு களம் அமைத்தவை.

வடபுலத்தில் தமிழ் தேசிய சிந்தனையை உணர்வு பூர்வமாக திட்டவட்டமாக வரித்துக் கொண்ட இதழ் களாக அலை, புதுசு என்பவற்றைக் குறிப்பிட வேண்டும். எழுபதுகளில் தொடங்கி எண்பதுகளின் இறுதி வரையும் 36 இதழ்கள் வெளிவந்த 'அலை' தேசிய சிந்தனைக்கு வலுவூட்டும் சிறந்த படைப்புக்களை தேர்வு செய்து, அதன் பார்வையை அகலப்படுத்தும் விமர்சனங்களையும் வெளியிட்டு வந்தது. அதன் ஆசிரியர் தலையங்கங்கள் தமிழ் தேசிய கருத்தியலின் வெளிப்பாடாக அமைந்தன. தமிழ் தேசிய கண்ணோட்டத்திலான போராட்டத்தையும் ஆதரிப்பனவான பல சிறுகதைகள், கவிதைகள், கட்டுரை கள் வெளிவந்தன. வ.அ.வின் 'உண்ணி' ஒன்று+ஒன்று போன்ற சிறுகதைகள், சிறீதரனின் சிறுகதை, சண்முகம் சிவலிங்கத்தினது கதைகள், ரஞ்சகுமாரின் 'காலம் உனக்கொரு பாட்டெழுதும்', 'கோசலை', குந்தவையின் சிறுகதை, இராஜேஸ்வரியின் கதைகளும் இதிலே வெளியாகின. மு.பொ. , சு.வி., யேசுராசா, புஷ்பராஜன், ஜெயபாலன் (நெடுங்கவிதை), சண்முகம் சிவலிங்கம், நுஃமான், சேரன், நிலாந்தன் எனப்பலரின் சிறந்த கவிதைகள் தேசிய இனப்பிரச்சினைசார்ந்த புதிய பரிமாணம் மிக்க படைப்புகளாக வெளிவந்தன.

தேசிய இனப் பிரச்சனை சார்ந்த புதிய மாக்சியக் கண்ணோட்டம் போன்ற சிறப்புமிக்க பிறமொழியாக்கக் கட்டுரைகள் தமிழில் ஏ.ஜே. கனகரட்னாவால் மொழிபெயர்க்கப் பட்டு பிரசுரமாயின. இவ்வாறாக பலதளங்களில் பார்வை செலுத்திய 'அலை' சஞ்சிகை நூல் வெளியீடுகளிலும் ஈடுபட்டது. ஏ.ஜே. க. வின் நூல்கள், ஜெயபாலனின் முஸ்லீம்களும் தேசிய இனப்பிரச்சனையும், சு.வி.யின் 'அகங்களும் முகங்களும்' என அதன் பணி விரிந்தது. இதே வேளையில், தமிழியல் வெளியீடுகளாக 'மரணத்துள் வாழ்வோம்' சண்முகம் சிவலிங்கத்தின் 'நீர் வளையங்கள்' எனப்பல நூல்களை பத்மநாபன் ஐயர் வெளிக்கொண்டு வந்ததையும் குறிப்பிட்டாக வேண்டும்.

'புதுசு' சஞ்சிகையும் 'அலை' போலவே தமிழ் தேசியக் கண்ணோட்டமுடைய யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சிலரால் வெளிக் கொணரப்பட்டது. சேரன், ஜெயபாலன் என பலருடன் புதிய கவிஞர்கள் பலரினது கவிதைகளின் வரவும் இதன் மூலம் நிகழ்ந்தது. ந. சபேசன், இளவாலை விஜயேந்திரன், பால சூர்யன் பலரது சிறந்த கவிதைகளும் அ.ரவி உள்ளிட்ட புதிய சிறுகதையாளர்களின் தரமான சிறுகதைகளும் இதில் வெளிவந்தன தமிழ் தேசிய போராட்டத்தில் பங்கு கொண்டிருந்த பல்வேறு இயக்கங்களின் பன்முகப் பார்வைகளும், படைப்பாற்றல்களும் சங்கமித்ததனால் முட்டி மோதி முரண்பாடுற்று, புதிய வேகம் கொண்ட ஒரு வாசகச் சூழல் விரிவடைந்த காலக்கட்டம் இது. இது கலை, இலக்கியம், பிறதுறைகள் சார்ந்த சஞ்சிகைகள் பலவும், நூல்களும் வெளிவந்தன.

மறுமலர்ச்சிக்கழக வெளியீடுகள், சுகந்தம் வெளியீடுகள், தமிழியல் வெளியீடுகள், தோழி, சக்தி, தாகம், சுதந்திரபறவை என சஞ்சிகைகளின் வரவுகள் தமிழ் தேசிய கருத்தியலின் பார்வையை அகலப்படுத்த உதவின. பல்கலைக்கழக உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் பரவலாயின.

இக்காலத்தில் கவிதைத் துறையில் சேரனின் 'இரண்டாவது சூர்ய உதயம்' தொகுப்பில் சிறியதாயினும் காலகட்டத்தின் முக்கியத்துவத்தால் பெரிதாகப் பேசப் பட்டது. தமிழ் தேசியத்தில் தொடங்கி பின்னர் 'யமன்' எலும்புக் கூடுகளின் ஊர்வலங்கள்' என ஒவ்வொரு காலகட்டங்களிலும் ஒவ்வொரு தொகுப்பாக வெவ்வேறு பார்வையினதாகி வெளிவந்து இன்று தமிழ் தேசியத் துடன் முரண்படும் நிலையில் வந்துள்ளது. தற்போதைய

www.padippakam.com

பார்வையில் சேரன் வெளிபடுத்தும் கருத்தியல் தமிழ் வாழ்வை அகன்ற பரப்பிற்கு எடுத்து செல்வதுபோல் படினும் (சேரன்-ஆறாம் திணையும் ஏழாம் திணையும் - காலச்சுவடு- ஆகஸ்ட்- செப்டம்பர்) தமிழர் வாழ்வு வேரூன்றுவதற்கான வாழ்தளம் பற்றிய பிரச்சினையை எழுப்புகிறது. அகன்று பரந்த பண்பாட்டுத்தளத்திற்குச் செல்லும் போது கூட அந்தத்தளங்களிலும் அதை விழுங்க முனையும் ஆதிக்க சக்திகளை பொருதவேண்டியதேவை எழவே செய்யும். எனவே சேரன் தமிழ் தேசியத்தை கடந்து செல்ல முயலும் சிந்தனையில் தமிழ் வாழ்விற் கான தளத்தை கரைத்து விட முயலக் கூடாது. ஈழத்தில் நாம் எதிர்கொள்ளும் யதார்த்தத்தை புலம் பெயர்ந்த சிந்தனைகள் புரிந்து கொள்ள வேண்டும்.

வ.ஐ. ச. ஜெயபாலன் இவ்வகைப் புரிதலுக்கு உரியவராக தென்படுகிறார். இத்தகைய புரிதல் உணர்வு தொனிக்கும் கவிதை ஒன்று சரிநிகர் யூலை இதழில் வெளிவந்திருந்தது. இவரது கவிதை தொகுதிகளான 'சூரியனோடு பேசுதல்' 'எனக்கென்றொரு புல்வெளி' என்பதுகளில் வெளிவந்தவற்றில் குறிப்பிடத்தக்கவை. இதே காலத்தில் வெளியாகிய கவியின் 'அகங்களும் முகங்களும்'செழியனின் 'மரணம்' ஹம்சத்வனியின் கவிதைகளின் தொகுதிகள், மு.பொ. வின் விடுதலையும் புதிய எல்லைகளும், விலங்கை விட்டெழும் மனிதர்கள்' இவையாவற்றிற்கும் முன்பே வெளிவந்த அ.யேசுராசா வின் 'அறியப்படாதவர்கள் நினைவாக' எனப் பலவும் தமிழ் தேசிய இலக்கியப் பார்வைக்கு வலுக்கூட்டு வனவாய் வெளிவந்தன.

இதிலே ஒரு சிறப்பம்சத்தை இங்கு பதிவு செய்ய வேண்டும். காலந்தோறும் தமிழ் தேசிய சிந்தனைகளின் பிரதிபலிப்புகளாகவும் சில முக்கிய நிகழ்வுகள் பற்றிய தாகவும் பல்வேறு கவிஞர்களின் கவிதைகளின் தொகுப்பு களாக வெளிவந்ததும், ஒரு கலாபூர்வமான காலப்பதிவு களாக கொள்ளப்பட வேண்டும். அறுபதுகளில் 'தமிழ் எங்கள் ஆயுதம்' எழுபதுகளில் பதினொரு ஈழத்துக் கவிஞர்களின் கவிதைகள் (இவை முற்றிலும் தமிழ் தேசிய நோக்கிலானவை அல்ல), எண்பதுகளில் 'மரணத் துள் வாழ்வோம்' (இதில் சேரன் எழுதிய முன்னுரை தமிழ் தேசிய பார்வையில் அமைந்த ஒன்றாகும்). தொண்ணூறு களில் 'காலம் எழுதிய வரிகள் ' செம்மணி என பல கவிதைகள் ஒவ்வொரு காலக்கட்டத்தில் பதிவுகளாக தொகுக்கப்பட்டு (தொகுப்புகளில் சில முழுமை யானவையல்ல) வெளிவந்தன. அத்துடன் இக்காலக் கட்டத்தில் எண்ணிறந்த இசைப்பாடல்களும், தமிழ் தேசிய நோக்கிலான நாடக மேடைப்பாடல்களும் ஒலித் தொகுப்புகளாக வெளிவந்தன. இவற்றில் பல தேவைக் கேற்ற பிரசாரத்தன்மையுடன் எழுதப்படினும் ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த போராட்ட நிகழ்வுகளை ஒட்டிய பதிவுகளாய் அமைந்தன. பெரும்பாலும் இவற்றை புதுவை இரத்தினதுரை எழுதியிருந்தார். இவரது கவிதைத் தொகுதியொன்றும் 'அழியா நினைவு கள் ' என காலகட்டத்தின் பிரதிபலிப்புகளாக வெளிவந் தது.

இசைப்பாடல்களின் மூலம் தமிழ் உணர்வை வெளிக்கொணர்ந்த கவிஞர்களில் இன்குலாப், காசி ஆனந்தன்,அறிவுமதி போன்றோரின் பங்களிப்பும் குறிப்பிடவேண்டும். கவிதைத் துறையில் தமிழ்தேசிய கண்ணோட்டம் செறிந்த காவியங்களின் வரவையும் கவனத்திற்கு எடுக்க வேண்டும். இவை பாரதிதாசனின் 'பாண்டியன் பரிசு' போன்ற காவியங்களை மட்டும் முன்மாதிரியாகக் கொண்டிராமல் இங்கு நிகழ்ந்த சில உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகவும் கொண் டவை. மட்டகளப்புக் கவிஞர் அமரர் இராஜபாரதி 1954 இல் எழுதிய 'தீயுண்ட வீரமுனை' இத்தகைய ஒரு முன்னுதாரணமான காவியமாகும். இதன்பின் காசி ஆனந்தனின் 'தமிழன் கனவு' எனும் காவியம் முழுவதும் புனைவு நவிற்சிப் பாங்கிலானது. எனினும் தமிழனுக் கென்றொரு தேசம் பற்றிய கனவாக அமைந்தது.

"துஞ்சு மேதி சுறாக்களைச் சீற
சுறாக்களோடி பலாக்கனி கீறி
இஞ்சி வேலியின் மஞ்சளிற் போய்விழும்
ஈழமண்டல நாடெங்கள் நாடே''

என்ற ஈழமண்டலப் பள்ளுப்போன்றதும், திராவிடக் கவிஞர்களினது பாணியிலான கவிதைகளினதும் கலவை யாக இவரது காவியத்தைக் கொள்ளலாம். இதன் பின் வ.ஐ.ச. ஜெயபாலனின் 'மண்ணும் மக்களும்' வன்னி நிலத்தின் வீரர், வீராங்கனைகளின் வாழ்வியலில் பின்னிப் பிணைக்கப்பட்ட காவியமாக தமிழ் தேசியப் பார்வையில் வெளிவந்தது. அண்மையில் வெளிவந்த க. சச்சிதானந்தனின் 'யாழ்ப்பாணக் காவியம்' யாழ்ப்பாணத்தில் போர்த்துக் கீசருக்கம், தமிழ் மன்னருக் குமிடையில் நடந்த வரலாற்றுப் போர்ச்சித்தரமாக வெளித்தெரிந்தாலும் தற்காலத்தில் தமிழ்மக்களின் துன்பியலையும், ஆங்காங்கே இசைவித்துச்செல்கின்றது. நல்ல கவித்துவம தொனித்தாலும் காவிய கால நடையின் சாயலைக் கொண்டிராமல் தற்கால மொழிநடையில் ஆனதாய் இருந்திருந்தால் சிறப்பாயிருந்திருக்கும் காவியம் மிகவும் நீண்டதாயிருப்பது சலிப்பைத் தருகின்ற தாயினும் வரலாற்றை அடியொற்றியது. 'காற்று வழிக்கிராமம்' என்ற சு.வி.யின் கவிதைத் தொகுப்பில் கவிதைகளின் தலைப்புகளை நீக்கிவிட்டுப் பார்த்தால் அதுவொரு குறுங்காவியம் போலமையும் என்ற சேரனின் கூற்றின்படி நோக்கினால் கவிதைகளின் தொகுப்பு முறைமையில் ஒரு இழையோட்டம் அமைந்து இருந்தால் அது காவியப் பண்புபெறும் எனலாம். அண்மையில் வெளிவந்த க.வியின் 'நெற்றி மண்' தொகுப்பு அவ்வாறான தொன்றென கருதலாம் போலும்.

காலந்தோறும் கவிதைகளின் தொகுப்பு முறைமை போலச் சிறுகதையில் வெளிவந்துள்ளனவா எனப் பார்த்தால் அவ்வாறானதொரு தொகுப்பு எண்பதுகளில் 'உயிர்ப்பு' எனும் தலைப்பில் வெளிவந்ததைக் குறிப்பிடலாம். இதில் வெளிவந்த சிறுகதைகள் பலவும் (கலாமணி, ரஞ்சகுமார், தெணியான எனப் பலர் எழுதியவை) சமகால தமிழ் தேசிய இனப்பிரச்சனை சார்ந்தோ போர்க்கால வாழ்வு குறித்தோ எழுதப்பட்டவை யாகும். இது வடமராட்சி பிரதேச எழுத்தாளர்களினது தொகுப்பாயிருந்த போதும் அப்பிரதேசத்தைச் சார்ந்த நந்தினி சேவியரின் 'அயல்க்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' என்ற சிறுகதை சேர்க்கப்படவில்லை என்பது விசனத்திற் குரியது. மார்க்சிய கோட்பாட்டை வரித்துக் கொண்டவர் களில் தேசிய இனப் பிரச்சினை சார்ந்த கண்ணோட்டத்


படிப்பகம்

www.padippakam.com

துடன் தெளிவாக எழுதியவர் நந்தினி சேவியர், 'ஈழமுரசுவில்' இவர் பணியாற்றிய காலத்தில் இவரது மறைவான பங்களிப்பு நிறைவானது.(திலீபனின் உண்ணாவிரத காலத்தில் வெளியிடப்பட்ட, அன்னை யொருத்தி அவனுக்குத் திலகமிடுவதான சுவரொட்டி யின் கீழே பொறித்திருந்த கவிதை வாசகம் இவருடை யதே. "மூத்த தமிழன்னை முகம் நிமிர்த்தித் திலகமிட பார்த்திருக்கும் பார்த்தன் இவன்". இங்கு இன்னுமொரு உண்மை பளிச்சென்று புலப்படுகின்றது. தமிழ் தேசிய போராட்டச் சூழலில் சுவரொட்டிகளில் கூட அற்புத மான கவிதைகள் வெளிவந்தன. 'சுவரொட்டி இலக்கியங் கள்' என்றவற்றைச் சொல்லலாம் போலும். இத்தருணத் தில் காசி ஆனந்தனின் 'தெருப்புலவர் சுவர்க்கவிதை' என்ற புதிய கவிதை வகை நூலின் ஞாபகமும் எழுகின்றது)

காலந்தோறும் தமிழ் தேசிய வளர்ச்சிப் பரிமாணத்தைக் காட்டக்கூடிய வகையில் வெளிவந்த சிறுகதைகளை தொகுத்து வாரந்தோறும் 'திசை' பத்திரிகையில் எண்பதுகளின் இறுதியில் யேசுராசா வெளியிட்டார். மு.பொ. வை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த அப்பத்திரிகையில் இத்தகைய பலதள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அடாவடித்தனமான அராஜகங்களின் மத்தியில், இந்திய அமைதிப்படை யினரின் பிரசன்னத்தில் இரண்டு பத்திரிகை நிறுவனங்கள் குண்டுவைத்துத் தகர்த்தப்பட்ட மோசமான சூழலின் நடுவில் 'திசை' இன் நெளிவு சுழிவான பணி தமிழ் தேசிய இலக்குப் பிறழாமல் வெளிவந்தமை பாராட்டத்தக்கது.

இக்காலகட்டத்தில் திசையில் வெளிவந்த ரஞ்சகுமாரின் கோளாறு பதிகம், சிறுகதைப் போட்டியில் தெரிவான சிறுகதைகள், புதுசு ரவியின் சிறுகதைகள், சோலைக்கிளி, சு.வி. துவிஜன் (கவிதைகள், கதைகள்) வாசுதேவன், எம்.ஐ.எ. ஜபார், மைதிலி அருளையா, சிவரமணி, எச்.எம். பாரூக், செல்வி எனவிரிகின்ற பலரதும் பட்டியல் அநேகமாக இன்றைய காலத்தும் பேசப்படும் பெயர்களாக உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. அத்துடன் இவர்களின் படைப்புகள் பலவும் தமிழ் தேசிய போராட்டகாலத்தில் மூக்கை நுழைத்த இன்னொரு ஆதிக்கத்திற்கு எதிரான பதிவுகளை வெளிக் கொணர்ந்தன.

இக்காலக்கட்டத்தில் (எண்பதுகளில்) பல கவிஞர் கள், பெண் படைப்பாளிகள் தமிழ் தேசிய கண்ணோட்டத் திலான படைப்புகளைத் தந்தனர். ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் ஒரு கோடை விடுமுறை நாவல் தமிழ் தேசிய போராட்டத்தை மையமாக வைத்தே எழுதப்பட்ட ஒன்று. இதில் நிர்மலா எழுதிய முன்னுரை யும் குறிப்பிடத்தக்கது. சொல்லப்படாத சேதிகள் என்ற தலைப்பில் வெளிவந்த சிவரமணி, செல்வி, சங்கரி, ஔவை எனப் பல கவிதைகளின் தொகுப்பு வெளிவந்து பெரிதும் பேசப்பட்டது.

தமிழ்த் தேசிய விடுதலையும், பெண் விடுதலையும் இணைந்த பார்வையிலான கவிதைகளின் தொகுப்பாக இது அமைந்தது. மைத்ரேயி, சிவரமணி, செல்வி, கிரிஷாந்தி ரட்னராஜா ஆகியோரின் கவிதைத் தொகுப்புகள் படிப்படியாக வெளிவந்தன. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுப்பட்ட போராளிகளான பாரதி, கஸ்தூரி, வானதி ஆகியோரின் கவிதைகளும் தொகுப்புகளாக வெளிவந்தன. இதிலே சிவரமணி, செல்வி, பாரதி, வானதி, கஸ்தூரி கிருஷாந்தி எனப்பலரும் இள வயதில் அகால மரணங்களை தழுவிக் கொண்டமையானது மிகப் பெரும் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் தேசிய போராட்டத்தின் உப விளைவாக அல்லது உபநீரோட்டமாக அமைந்த பெண்விடுதலைச் சிந்தனை இன்று தமிழ் வாழ்வியலின் சிந்தனை ஓட்டங்களுள் ஒன்றாக மாறி இயக்கங்களுடன் சம்பந்தபடாத தனியான பெண்ணுரிமை இயக்கங்களை தோற்றுவித்துள்ளது.

பெண், நிவேதினி பெண்ணின் குரல் எனப் பல பெண்ணுரிமை, பெண் விடுதலைக்கான இதழ்கள் வெளிவருகின்றன. இவற்றில் விஜயலட்சுமி, கொற்றவை, ஆழியாள் எனப்பல புதிய பெண்படைப்பு களின் வரவுகள் நேர்ந்துள்ள போதும் ஊர்வசி போன்ற படைப்பாளிகள் மணவாழ்வின் பின் ஒதுங்கி கொண்டுள்ளமை வேதனை அளிக்கிறது. நெருக்குவாரம் மிகுந்த இன்றைய போர்க்கால வாழ்வினிடையும் வன்னிப் பிரதேசத்தில் வாழும் தாமரைச் செல்வி, சந்திரா தியாகராஜா, யோகேஸ்வரி சிவப்பிரகாசம் போன்றோர் முனைப்புடன் ஈடுபட்டு வருவது கவனிப்பிற்குரியது. போர்கால அவலங்கள், போராளிகள் தியாகங்கள், வாழ்வை எதிர்கொள்ள ஊனமுற்றோர் காட்டும் ஊக்கங்கள் என பல தளங்களிலும் இவர்களின் எழுத்துக்கள் களங்கொண்டு விரிகின்றன. தாமரைச் செல்வியின் தாகம் நாவலும் சிறுகதைகளின் தொகுதியும் பெரிதும் பேசப்படுபவை.

1980களின் பின்னர் தேசிய விடுதலைக்காக போராடும் இயக்கங்களின் வரவிற்குப் பின்னர்தான் பெண்களுக்கான அமைப்புகள் தோன்றின என்றில்லை. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே யாழ்பாணத்திலும் கொழும்பிலும் திருகோணமலையிலும் பெண்களுக்கான அமைப்புகள் தோன்றியிருந்தன. பின்னால் தமிழர் விடுதலை கூட்டணி யினாலும் தமிழர் இளைஞர் பேரவை போல தமிழ் மகளிர் பேரவையும் ஆரம்பிக்கப்பட்டன. ஆயினும் அவை பெரும்பாலும் கட்சிகளின் துணைப்பிரிவு நடவடிக்கை களுக்காகவேதான் பயன்படுத்தப்பட்டன. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாறிய காலம்தான் பெண்களுக்கான விடுதலைக்குரல் எழுந்தது என்பது குறிப்பிடத்தகக்கது.

தமிழ் தேசிய சிந்தனைப் போக்கிலும், போராட்டத் திலும் இத்தகைய பண்பியல் மாற்றம் 1977ன் பின்னர்தான் ஏற்படுகிறது. 1958ல் தமிழ் மக்களுக்கு எதிரான கொடுமை கள் தென்னிலங்கையில் ஏற்பட்டபொழுது அவர்களைக் காப்பாற்றுவதில் அரசு காட்டிய மெத்தனப் போக்கே மேலும் மேலும் பல தமிழர்களைப் பலிகொண்டது. அப்போதும் தமிழர்ப்பட்ட அவஸ்தைகளை ஆங்கிலத் திலோ தமிழிலோ ஆவணப்படுத்தவோ கலாபூர்வமான நாவல்களாக வெளிக்கொணரவோ ஒரு தமிழ் அறிவு ஜீவியோ, படைப்பாளியோ முன்வரவில்லை. அதை பின்னணியாகக் கொண்டு மு.த. எழுதிய ஒரு தனி வீடு நாவல் கூட கலைச் செல்வி இதழில் அக்காலகட்டத்தில்

www.padippakam.com

தொடராக வெளிக்கொணரப்படவில்லை. ஆனால் தார்ஸி விதார்ச்சி என்ற சிங்கள இதழியலாளர் இலண்டன் சென்று அக்காலத்தில் தமிழருக்கு இழைக்கப்பட்டவற்றை 'எமர்ஜென்ஸி 58' என்ற நூலின் வாயிலாக ஆவணப்படுத்தினார். அந்நூல் இலங்கையில் அப்போது பண்டாரநாயக்காவினால் தடைசெய்யப்பட்டது.

ஆனால் 1977ல் நிகழ்ந்தது 'லங்காராணி' என்ற நாவலின் மூலம் ஓரளவு தமிழில் ஆவணப்பட்டது. 1958 இலும் தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்திற்கு கப்பலில் தான் சென்றார்கள். 1977லும் லங்காராணியில் சென்றார்கள். அந்த பெயரிலேயே எழுதப்பட்ட அருளரின் நாவல், நாவலின் கட்டுக்கோப்பிற்குள் அமைந்த கலைப்படையாக இல்லாவிட்டாலும் அதற்கொரு காலக்கட்ட முக்கியத் துவம் உள்ளது. 1983லும் இந்தியக்கப்பலான சிதம்பரம் வந்து அகதிகளை யாழ்பாணம் ஏற்றிச் சென்றது. இந்த கப்பல் பயணங்களே ஒரு தொடர்ச்சியான சோகச்சுமை நிரம்பிய பயணங்களின் தொடர்கதைகள். 1983ன் கப்பல் கதையும் அதன் முதன்பின்னாக நிகழ்ந்த அரச பயங்கர வாத சம்பவங்களும் காலப்பூர்வமாக பின்னப்பட்ட படைப்பாக எதுவும் வெளிவரவில்லை என்பது மனங் கொள்ளத்தக்கது. இதை காலம் தாழ்த்தியேனும் ஒரு குறுநாவலாக கொழும்பில் நிகழ்ந்த கொடுமைகளை பின்னணியாகக் கொண்டு தெளிவத்தை ஜோசப் தந்திருந்தார். தினகரனில் தொடராக இது வெளிவந்தது. விடிவிற்கு முந்திய மரணங்கள் என்றதொரு நாவல் போராளியாக இருந்த சுபாஷ் என்பவரால் எழுதப் பட்டது. கொக்கிளாய் முகாம் தாக்குதலில் பலியான பதினாறு போராளிகளின் வீரம் செறிந்த தாக்குதல் நிகழ்வை கருப்பொருளாக்கி எழுதப்பட்டதும் நாவல் வடிவில் அமைந்ததான ஓர் ஆவணப்படுத்தலேதான். புதியதோர் உலகம் போராளி இயக்கமொன்றின் (தற்போது சனநாயக நீரோட்டத்தில் கலந்துள்ளது) உள் முரண்பாடுகள் பற்றியும் தலைமையின் தவறான நடவடிக்கையின் விளைவாக போராளிகள் பலர் கொல்லப்படுவதையும், சித்திரவதை முகாம்கள் பற்றியும் இவற்றிடையேயும் தளராத நம்பிக்கை தெளிவான சிந்தனை கொண்ட பாத்திரங்களை கொண்டமைந்து, முன்னெடுக்கப்பட வேண்டிய தமிழீழ விடுதலைப் பற்றியும் பேசுகின்ற சிறந்த நாவல் ஆகும். கோவிந்தனால் எழுதப்பட்ட இதுவும் ஒரு கலாபூர்வமான ஆவணத்தன்மை வாய்ந்ததே. எனினும் ஏனைய வற்றிலும் சிறந்த கலைப்படைப்பாகும் என்பதை பலரும் ஒப்புக்கொள்வர். இதே போலவே வடமராட்சி ஒபரேஷன்-ஸ்பரேஷன் காலத்தைய பின்னணியைக் கொண்ட நாவல் ஒன்று துறையினரால் எழுதி வெளியிடப் பட்டது.

இன்னும் யாழ், வன்னி பிரதேசங்களில் இருந்து வெளிவந்த படைப்புகள் எமது வாசிப்பிற்காக தற்போதுள்ள சூழலில் கிடைக்கவில்லை. எனினும் அவற்றைப் பற்றி விபரங்களின்படி இரத்தமும் சதையுமான உண்மைத் தன்மையை பேணுவதாக உள்ளன. இவை ஒரு தேசிய போராட்டச் சூழலில் தவிர்க்க முடியாமல் உருவாகின்ற, சூழலிற்கேற்ப எழுகின்ற, சூழலை போராட்டத் திற்கேற்ப மாற்ற விழைகின்றதான பண்டைப் பேணும் இயல்பினவாக அமையவேண்டிய தேவையுள்ளது. இதனால் கலாபூர்வமான ஆவண படுத்தல்களாகவும் சமகால வரலாற்று சித்திரங்களாகவும் அமைய வேண்டியனவாய் உள்ளன. ஏற்றுக் கொள்ளப் பட்ட கவிதை, சிறுகதை, நாவல் உருவங்களிலேயே அமைகின்ற இத்தகைய படைப்புகள் காலப்போக்கில் புதிய உருவவாய்ப்புகளாகவும் எழுகின்ற தேவையும் உள்ளது.

யாழ்பாணத்தில் நிகழ்ந்த பண்பாட்டு படுகொலையை கலாநேர்த்தியான கவிதையாக செய்த நூமானின் ' புத்தரின் படுகொலை' 1983ல் வெலிக்கடை படுகொலையான பதிவு செய்த சிவசேகரத்தின் '52 ஹிட்லரின் டயரி' என்பன, வ.ஐ.ச. ஜெயபாலனின் உயிர்த்தெழுந்த நாட்கள் சேரனின் 'எலும்பக் கூடுகளின் ஊர்வலம்'. எம்.ஐ.ஏ. ஜபாரின் தரப்பட்டுள்ள அவகாசம் சிவசேகரத்தின் 'போரின் முகங்கள் ' அசுவகோஷின் 'வனத்தின் அழைப்பு' கருணாகரன் கவிதைகள் அமரதாசின் 'இயல்பினை அவாவுதல் ' சேரனின் 'வடக்கிருத்தல்', ஜெயசீலனின் கவிதைகள், கி.பி. அரவிந்தனின் முகம்கொள், கல்வயல் வே.குமார சுவாமியின் கவிதைகள், கவிஞர் முருகையனின் சில கவிதைகள் என்பனவெல்லாம் கலாபூர்வமான பதிவுகளேதான். ஜெய்சங்கர், அகிலன், பாலகணேசன் எனத் தெரியவருபவரின் கவிதை முயற்சிகளும் அவர்கள் ஈடுபாடு கொண்டுள்ள நாடகத்துறை முயற்சிகளும் (உ.ம். ஜெய்சங்கரின் தீ சுமந்தோர்) தமிழ்தேசிய வரலாற்று பண்பாட்டு பதிவுகளாகவும் அமைகின்றன. ஆனால் மண்பட்டினங்கள் எனும் நிலாந்தனின் படைப்போ கவிதையில் தொடங்கி கவிதையின் நேர்த்தி குலையாமல் நாடக எழுத்துருவிற்கான குறிப்புகள் விரவியது போலாகி சில சமயங்களில் கவிதையாகவும் சில சமயங்களில் வரலாறாகவும், சிலசமயங்களில் நாடகமாகவும் சிந்துச் சமவெளியில் ஏற்பட்ட திராவிட மூதாதையரின் முதல் புலப்பெயர்வில் இருந்து இன்றைய யாழ்ப்பாண இடப்பெயர்வு வரை நடந்து இழந்த பிரதேசங்களை மீட்கும் வெற்றிப்பாதையாக ஒலிக்கிறது. இது தமிழ் தேசிய நோக்கில் அமைந்த ஒரு புதிய வார்ப்புதான். இது போலவே இவரால் அண்மையில் எழுதப்பட்ட ஓயாத அலைகள் குறித்த ஆவணப்படுத்தலும் (இந்த வெற்றியை 1998லேயே இவரது மண் பட்டினங்கள் கட்டியம் கூறியது குறிப்பிடத்தக்கது) பாலியம்மன் பள்ளு என இவரால் எழுதப்பட்டதான படைப்பும் தொன்மையில் தொட்டெடுத்து இன்றைய வாழ்வியலும் இசைந்து துள்ளும் நவீன பள்ளு இலக்கியவார்ப்பாகும்.

கவிதையை போலவே சிறு கதைகளிலும் ஓர் ஆவணப்படுத்தல் உண்டு என்பதையும் பார்ப்போம். அந்நியமான உண்மைகள் எனும் சாந்தனின் கதை திருகோணமலையில் நிகழ்ந்த சிங்கள குடியேற்றங்கள் பற்றி பேசியது. கிருஷ்ணன் தூது தொகுப்பில் உள்ள இவரது கதைகள் சிலவும் இப்படியானவை. (ஒட்டுமா என்னும் இவரது நாவல் கூட தலைப்பிலேயே தமிழ்-சிங்கள ஒட்டுறவு குறித்து கேள்வி எழுப்பி, தமிழ் தேசிய கண்ணோட்டத்தில் எழுதப்பட்டதேயாகும். குந்தவையின் பயணம் சிறுகதை, கலாமணியின் கதைகள், சிதம்பர


படிப்பகம்

www.padippakam.com

திருச்செந்தில்நாதன், ரவிவர்மன் தாமரைச்செல்வி ஆகியோரின் சிறுகதைகள், உமாவரதராஜனின் அரசனின் வருகை, சசிகிருஸ்ணமூர்த்தியின் 'வேம்பு', கவியுவனின் 'வாழ்தல் என்பது', ஒட்டமாவடி அரபாத்தின் 'நினைந் தழுதல்', கௌரிபாலனின் சில சிறுகதைகள், சரிநிகரில் வெளிவரும் பல புதியவர்களின் சிறுகதைகள் , செங்கை ஆழியரின் 'யாழ்ப்பாணத்து இராத்திரிகள்' என்பன போர்க்கால அவலவாழ்வு, சிதைவு இடப்பெயர்வின் துயர் என்பனவற்றை எல்லாம் பேசினாலும் எல்லா மனங்களிலும் மீட்டிக் கொண்டு இருக்கும் அடி நாதம் தமிழ் தேசிய உணர்வேதான்.

இச்சிறுகதைகளின் வடி விலும் கூட சண்முகம் சிவலிங்கத்தின் சில படைப்புகள் புதிய உருவ வார்ப்பை தோற்றுவிக்கின்றன. எனினும் இவை அதீத இருண்மைத் தன்மை கொண்டவை என்ற குற்றச்சாட்டும் வரிப்பது சற்று இடறுகின்றது. மு.பொ வின் கடலும் கரையும் தொகுதியின் கதைகளில் இறுதிக் கதை மிகவித்தியாசமான வார்ப்பு. களத்தில் வெளியாகிய வெட்டு சிறுகதை தமிழ் தேசிய நோக்கில் அமைந்த சிறந்த கதையாகும். இது போலவே இவரது நோயில் இருத்தல் நாவலும் எமது தமிழ் தேசிய போரட்டத்தின் பல்வேறு கட்டத்தையும் (இந்திய அமைதிப் படையின் காலம் உட்பட) ஊடுருவி உள்ளும் புரமும் விசாரித்த வாறே நகரும் உயிர்ப்புடைய படைப்பு இதன் பின் பகுதியில் நாவலிற்கு தேவையற்ற சில விபரணங்களும் தவிர்க்கப்பட்டிருந்தால் நாவலின் கட்டுக்கோப்பு பலப்படைந்திருக்கும்.

தமிழ் தேசியம் சார்ந்த படைப்புகள் இவையென தெள்ளி எடுத்து உதாரணம் காட்டுவதில் பல்வேறு சிரமங்கள் உள்ளன. தமிழ் தேசிய கோட்பாட்டை முற்றிலும் ஏற்றுக் கொண்டு அப்பார்வையிலேயே இலக்கியம் படைப்போர் ஒரு வகையினர். போலியாக அதனை ஏற்றுக் கொண்டதுபோல் இலக்கியத்தில் பொய் முகம் காட்டுவோர் இன்னொரு வகையினர். இனப்பிரச் சனையை தமது கதை நகர்த்தலுக்காக கைச்சரக்காகப் பாவிப்போர் ஒரு வகையினர். போராட்டங்களின் போது நிகழ்கின்ற எறிகணை வீச்சுகள், குண்டு வீச்சுகள் போன்ற நிகழ்வுகளை ஆங்காங்கே இடைப்பெய்து விட்டு அவற்றை தமிழ் தேசிய பிரச்சனை சார்ந்த படைப்புகளாக, காட்ட முயல்வோர் ஒரு வகையினர் போர்க்கால நிகழ் களை கேள்விச் செவியர்களாக உள்வாங்கிக் கொண்டு யதார்த்த இலக்கியம் படைப்பதாக செயற்கைத் தனம் பண்ணி தமிழகத்தில் விலைப்படுத்தியோரையும் இலங்கை மீண்டதும் கொழும்புச்சூழலுக்கேற்ப வேறு முகம் (இவைதான் இவர்களது பழைய சொந்த முகமும் கூட) தரித்து எழுதுவோரையும் நாம் அறிவோம். ஆக ஈழத்துத் தமிழ் படைப்புலகில் போலியான உத்திகள் யதார்த்த போலிகள் செயற்கைத்தனங்கள் அற்று தமிழ் தேசியம் குறித்த தெளிவான பார்வையோடும் போலி யுற்ற அழகுணர்வோடும் எழுதப்படுபவையே எமது தேர்விற்கு உகந்தவை.

எண்பதுகளின் பின் பகுதியிலிருந்து 90களின் முன்பாதி வரைக்குள் தமிழ் தேசிய போராட்டத்தில் நிகழ்ந்துவிட்ட இடர்கள்,தடைகள், பின்னடைவுகள் இயக்க முரண்பாடுகளின் மோதல்கள், முஸ்லிம்களை வடபகுதியிலிருந்து வெளியேற்றுதல் எனப் பல விவகாரங்கள் தமிழ் தேசிய போராட்டத்தின் சகப்பயணி களாக,படைப்பாளிகள் இருப்பதில் தடங்கல்களை ஏற்படுத்தியதை குறிப்பிட்டாகவேண்டும். படைப்பாளி கள் ஒத்தோடிகள் அல்லா. சகபயணி என்பவனாக படைப்பாளி நடை பயில்கையில் அவனிடம் பயணம் குறித்த விசாரணையும் இலக்கோடு,இலக்குக் குறித்த வழிமுறைகள் மீதான அலசல்களும், பக்கவிளைவுகள், பாதிப்புகள் பற்றிப் பாராமுகமின்மையும் ,எதிர்ப்பு குரல் எழுப்புதலும் நிகழும். இவ்வாறாக மேற்குறித்த வகையில் இயங்குவதை அனுமதிப்பதென்பது போராட்டத்தினை செம்மைப்படுத்தும் அதேவேளை படைப்பாளிகளும் தமது சகபயணித்துவத்தை இழந்து விடாதிருப்பதற்காக முயல்வதோடு தமது குரல் பிசிறற்று அமைவதில் சிரத்தை கொள்வதும் அவசியமானது.

புலம் பெயர்வுகள், இடம்பெயர்வுகள் படைப்பாளி களின் அகால மரணங்கள், ஒதுங்குதல்கள் காரணமாக ஈழத் தமிழ் படைப்புலகின் ஒரு வெற்றிடம் ஏற்பட்டது. தேசிய நீரோட்டத்தில் இணைந்த குழுக்களில் பலவும் தமிழ் தேசிய உணர்வை கைவிட்டு குறித்த இயக்கத்தின் மீதான வெறுப்பையே உமிழ்வதைபோல இயக்க முரண்பாடுகளின் நிமித்தம் புலம் பெயர்ந்த படைப் பாளிகள் பலரும் இத்தகு நிலையையே வரித்துள்ளமை துயரம் தருவது. இன்றைய யதார்த்தம் எம்மை எந்ததளத்தில் சிந்திக்க வைக்கவேண்டும் என்பது குறித்த மீள் விசாரணை செய்ய தம்மை இவர்கள் அனுமதிக்கவேண்டும். விருப்பு வெறுப்பற்ற தளத்தில் இருந்து தமிழ் தேசிய சிந்தனையில், உடன்பாட்டு முறையில் இயக்க முன்வரவேண்டும். கேலியாடல், கிண்டல், நையாண்டி, இவை ஆக்கப்பூர்வமாக விமர்சன எழுத்துக்களாக மாறி அமையவேண்டும்.

1990 களின் பின்னால் 'சரி நிகர்' பத்திரிகையின் வரவு நின்று போன திசையின் இன்னொரு பயணம் போல தென்பட்டாலும் ஆரம்பத்தில் இவர்களிடம் ஒரு நிதான மான பார்வை தொழிற்படவில்லை. இவர்களிலும் பல்வேறு தளங்களிலிருந்தும் வந்தவர்கள் இணைந்திருந் தாலும் அதன் ஆசிரியரும் அவ்வாறான பாதிப்புடைய வராய் இருந்ததாலும் இவர்களது பார்வை, அணுகுமுறை, விமர்சனம் என்பன தமிழ் தேசிய போராடும் தரப்பினர் மீதான எள்ளல்களாகவும் வெறுப்புமிழ்தலுமாகவே ஆரம்பத்தில் இருந்தன. சில வரலாற்று கடமைகளை எம்தோள் மீது சுமந்திருப்பதாக நாம் கருதினால் அந்த சுமையின் அழுத்தங்கள் இறக்கிவைப்பதில் கூட ஒரு நிதானம் தொழிற்படவேண்டும். ஆயினும் காலப் போக்கில் இவர்களிடம் கடுவேகம் தணிந்து ஒரு நிதானம் அறிவு நிலை முதிர்ச்சி காரணமாக காணப்படு வது நிரந்தரமாக வேண்டும். ஆயினும் சரிநிகரின் பங்களிப்பு முக்கியமானது.

தமிழ் தேசியம் குறித்த பல் வேறு கட்டுரைத் தொடர்கள் (சிவராம், செம்பட்டான்) தேசியம் குறித்த வாத பிரதிவாதங்கள் (சரிநிகர் ஆசிரிய பீடத்தினர், நு.ஃமான், வி.ரி. தமிழ்மாறன்) எனப் பயனுள்ள பல விடயங்கள் இதில் வெளிவந்தன. இந்த ஆய்விற்கும் இவை பயன்பட்டதை குறிப்பிட்டாக வேண்டும்.. தமிழ் தேசிய போராட்டத்தில் விழுந்து விட்ட களக்கங்கள்

www.padippakam.com

குறித்த பல படைப்புகள் என புதியனவான வரவுகளிற்கு சரிநிகர் களமாகியது. தொடர்ந்து சரிநிகர் தமிழ்தேசிய உணர்வை செழுமைப் படுத்தும் சகப்பயணிகளான படைப்பாளிகளுக்கு களமாக தொழிற்பட தொடர்ந்தியங்க வேண்டும்.

கடந்த நூற்றாண்டின் சரிபாதி கூறுகளாகப் பிரித்தால் (சுதந்திரத்திற்கு முன்பின்) முற் கூற்றிலும் பிற்கூற்றிலும் தமிழ் தேசியம் சார்ந்த சிந்தனையை வளர்த்தெடுப்பதில் பத்திரிகைகள், சஞ்சிகைகளின் பங்கு அளப்பரியது. முற்கூற்றில் ஈழக்கேசரி பத்திரிகை இலங்கை முழுவதற்குமான தேசியத்திற்கு அழுத்தம் கொடுத்தது. ஆயினும் பெருந்தேசிய வாதத்தின் பேரழுத்தம் தமிழ் தேசிய வாதத்தின் தோற்றுவாய்க்கு காரணமாயிற்று. அதன் தொடர்வளர்ச்சியின் கீழ் தெளிவான சிந்தனையின் பங்களிப்பை நல்கவேண்டிய அறிஞர்கள் பலர் அதற்கு புறம்பான கருத்தோட்டங்களை உடையவர்களாயிருந்தனர். அது பிற்கூற்றில் போராட்டமாக கூர்மையடைந்த போது தமிழ் தேசியத்தின் முற்போக்கான அம்சங்களை இனங்கண்டு புதிய வளர்ச்சிக்குரிய பரிமாணங்களை காட்டாதிருந்து விட்டு இன்று தேசியவாதத்தின் பிற்போக்குத் தனம் பற்றி பிரசாரிப்பது சிறுமைத் தனமானது. தமிழ் தேசியத்தை,தமிழ் போராட்டத்தை ஆதரித்தசிலரும் இவ்வாறான நிலைப்பாட்டை வரிந்திருத்தல் விசனத்துக்குரியது. இன்றைய நிலையில் தமிழ் தேசிய வாதத்தை தெளிந்த சிந்தனையின் மூலம் வலுப் படுத்துதல் நிகழாவிடின் பேரினவாதத்தால், தேசிய வாதத்தால் விழுங்கப்படுவதற்கு நாமே வழிவகுப்பது போலாகும்.

இத்தகு சூழலில் பல்வேறு சிந்தனைகள், கருத்தியல்களுக்கு முகங்கொடுத்தவாறு இது காறும் தமிழ் தேசிய வளர்ச்சிப் போக்கில் விழுந்த கறைகளைப் போக்குவதற்கும் முயல்தல் தமிழ் ஈழப் படைப்பாளிகளின் கடமையாகும். தமிழ் தேசியம்,மலையக தமிழ் தேசியம், முஸ்லீம் தமிழ் தேசியம் என்பனவும் எழுச்சி பெறும் சூழலில் பழைய கசப்பான அனுபவங்கள் மீண்டும் தோன்றாமல் இருப்பதற்கான புரிந்துணர்வை வளர்ப்பதும் இணைந்த செயற்பாடுகளை நோக்கி முனைவதும் அவசியமானது. கலை இலக்கியத்துறைகளில் இவ்வகையினர் தமக்குள் இணைந்த தேசிய உணர்வை வலுப் படுத்துதலை வெளிப்படுத்த வேண்டும். இன்றைய நிலையில் தமிழ் பேசும் இனங்களுக்கிடையில் இடைவெளி உள்ளது. தமிழ் தேசிய இனத்தவர்களும், படைப்பாளிகளும் தொடர்பற்று,சிதறிபோன நிலையில் கூடிகலந்து தமது படைப்புகளைப் பற்றியோ, கருத்துக்களையோ பரிமாறும் நிலை அற்று போயுள்ளது. யாழ்ப்பாணம்,வன்னி, திருக்கோணமலை, மட்டக் களப்பு ஆகிய பிரதேசங்களில் இந்த நிலை ஆரோக்கியமான கருத்து நிலை உந்துதல் பெறத் தடையாக உள்ளது. இத்தடையையும் தாண்டி சாத்தியமான புதிய வாயில்களைத் தட்ட திறக்கும் மாபெரிய பணி நம்முன் உள்ள பெரிய சவால். இதை எதிர்கொள்ளும் திறனும் நம்பிக்கையும் எமக்கெல்லோருக்கும் இடையிலான பாலமாய் அமைவதாக, புதிய தமிழ் கூறும் நல்லுலகு எமக்குளதாகுக.

●●●

## அறைக்கு வெளியே

வீழ்ந்து கிடக்கும் செடியில்
பூவின் சிரிப்பு
தொலைந்த வார்த்தைகள்

புறந்தள்ளி
பாலூட்டிய மார்பில்
எச்சம் பூசி விலகும் குழந்தை

எந்த கணமும்
இறங்கி விடும் உயரத்தில்
பறந்துக் கொண்டிருக்கிறது
ஆடுகளத்தில் பறவையொன்று

அள்ளித்தெளித்த
வாசல் நீரோடு விழுகின்றன
இரவில் பட்ட ரணங்கள்

அந்தரங்க குறிப்புகள்
நினைவு
அறைக்கு வெளியே.

●●●

முழு முற்றமும்
நிலவின் ஒளியில் எரியும்
அளந்து பேசுவதில்லை
நீளாத இரவின் கரையில்

மழையின் சலசலப்பில்
சிதறி வரும் பாம்புகள்
தீயதென ஒதுங்காத கனவுகளை விழுங்க

படர்ந்த கைகளை விலக்கி
கூந்தல் பிணைப்பை
ஒரு சேர முடியும் துணையின் மடியில்
கனத்த கவிதையின் துயரம்

சீற்றம் தலைக்கேறி சிதைந்தது
பதியம் போட்ட விதையின் நுனி

முடிவுறும்
கத கதப்பில் கழிகின்றன
முழு நிலவு தினங்கள்.

- புதுவை இளவேனில்


படிப்பகம்

www.padippakam.com

# "நேற்றை" வளைத்துப் பிடிக்கும் நிகழ்காலங்கள்

(பிரபஞ்சனின் "கண்ணீரால் காப்போம்" - நாவலை முன் வைத்து)

முனைவர் க. பஞ்சாங்கம்

எழுத்து என்பது மனித வாழ்க்கையைப் புனைவுகளின் வரலாற்றிக்குள் செருக முயல்வதும், புனைவுகளின் வாழ்க்கையை மனித வரலாற்றிற்குள் செருக முயல்வதுமான துல்லியமான விதிமுறை அற்ற ஒரு வகையான தொழில்நுட்பம் என்பதாகப் படுகிறது. இந்தத் தொழில் நுட்பத்தைப் பேச்சில் சாதிக்க முடிவதை விட எழுத்தில் அதிகமாகச் சாதிக்க வாய்ப்பிருக்கிறது என்பதனால் தானோ என்னமோ 'தெரிதா' போன்ற சிதைவாக்கத் திறனாய்வாளர்கள் பேச்சை விட எழுத்திற்குப் பெரிதும் முக்கியத்துவம் அளிக்கின்றனர் போலும். 'கண்ணீரால் காப்போம்' என்ற இந்த நாவலில் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பிரெஞ்சியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த புதுச்சேரி மக்கள் வாழ்வில் நிகழ்ந்த முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளை இன்றைய தமிழ் மக்களுக்குப் புனைவாக ஆக்கித்தருகிறார் பிரபஞ்சன். எப்போதுமே படைப்பாளி என்பவன் தன் தனிப்பட்ட வாழ்விலும் சமூக வாழ்விலும் நிகழ்ந்துள்ள கடந்தகால நிகழ்ச்சிகளுக்குள் ஒரு வேட்டைக்காரன் போல ஓயாமல் ஒழியாமல் ஏதாவது கிடைக்காதா என்று நிகழ்காலத் தேவையின் அடிப்படையில் உழைக்கும் இயல்பு கொண்டவனாக விளங்குகிறான். பிரபஞ்சனும் இந்த நாவலில் இப்படித்தான் கடுமையாக உழைத்துள்ளார்.

இன்றைய நமது சமகால வாழ்வின் சகல கூறுகளிலும் கலந்து கிடப்பது எது? அதிகாரம்; அதிகாரம்! அதிகாரத்திற்கு மூளையை அடகு வைத்துவிட்டு, மனித இனம் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கும் அப்பாவித் தனத்தைப் பார்த்து எழுத்தாளன் பரிதாபப்பட்டுக் கருணையோடு மனித இனத்திற்காகச் சிந்திக்கிறான். இத்தகைய சிந்தனையின் வெளிப்பாடு தான் பிரபஞ்சனின் எழுத்தாகிறது. பிரபஞ்சன் இந்த நாவலில் நமது சமூகத்திற்கே உரிய சாதி அமைப்பிலும், ஆண்-பெண் உறவிலும், மத நிறுவனங்களிலும், காவல் துறையிலும் மண்டிக் கிடக்கும் அதிகாரத்துவக் குரலை நமது பழைய வரலாற்றிலும் தேடிப்பிடித்துப் பதிவுசெய்கிறார். இதன் மூலம் தனக்குள்ளும் தன் சமூகத்திற்குள்ளும் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது, அது எவ்வாறு மானுட இனத்திற்கே எதிரானது என்பதைக் கூட உணரச் சக்தியற்று, அனைத்தையும் ஒரு பழக்கமாக்கி மரத்துப் போய்க் கிடக்கும் சகமனிதனின் மனஉணர்வுகளைத் தட்டி எழுப்பி விழிப்புற வைப்பதற்கு முயலுகிறார். பழக்கமாகிப் போன்றவற்றுக்குள் கிடக்கும் பழக்கமாகாத புத்தம் புதுக் கூறுகளைக் கண்டு கூறுவதும், புத்தம் புதியக் கூறுகளுக்குள் பொதிந்து கிடக்கும் பழக்கமானவைகளைப் பார்த்து உரைத்து, மனிதர்களைச் சூழலுக்கு ஏற்பத் தகவமைப்பதுதானே இலக்கியத்தின் அடிப்படைச் செயலாக இருந்து வந்துள்ளது.

'கண்ணீரால் காப்போம்' என்ற இந்த நாவலில் தமிழ்ச் சமூகத்தின் புற்றுநோயாய் புரையோடிக் கிடக்கும் சாதி மனோபாவத்தின் கொடூரத்தை மிக நாசுக்காகப் புனைந்துரைக்கிறார் பிரபஞ்சன்.



இந்தியச் சாதியக் கட்டுமானத்தின் உள்ளோட்டமாக அமைந்துள்ள அதிகார சக்திகளின் மிகப் பெரிய உச்சக்கட்டத் தந்திரமாக அம்பேத்கார் உட்பட அனைவராலும் எடுத்துரைக்கப்படுவது, ஒவ்வொரு சாதியினரையும் ஒரே நேரத்தில் தாம் மற்றொரு சாதிக்குத் தாழ்வானவர்கள்; அதே நேரத்தில் இன்னொரு சாதிக்கு உயர்வானவர்கள் என்று பிளவுண்ட இரட்டை மனிதர்களாக வடிவமைத்து விட்டது தான். சாதி மதம் என்ற பேரில் இயங்கும் இந்த அதிகார சக்திகளின் கையிலுள்ள நிறுவனங்கள், தாங்கள் அடக்கி ஆளும் வெகுசன மக்களின் மனவியலை வடிவமைக்கும் முறையியல் குறித்து 'அல்தூசர்' மிகவும் நுட்பமான முறையில் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

"கொள்கையென்பது வெளியிலிருந்து திணிக்கப்படும் ஒரு மாயை அன்று; தனி மனிதனை வளர்க்கின்ற சமுதாய நிறுவனங்களால் அவன்தான் அடிமை என்ற கற்பனையைத் தன்னில் தானே உருவாக்கிக் கொள்கிறான்; பகுத்தறிவு வாதங்களால் எதுவுமே அது இருப்பது போல் தான் இருக்க வேண்டும் என்ற மூட எண்ணம் தகர்க்கப்பட்டிருந்தால் அதிகாரவர்க்கம் என்றோ கவிழ்க்கப்பட்டிருக்கும். ஆனால் குழந்தை நிலையிலிருந்தே மக்கள் அடிமை வாழ்வே அவர்கள் விரும்புகின்ற நிலையென்று கற்றுக் கொள்கிறார்கள்." *(ப. மருதநாயகம். (2001) பக். 255-256)*

அதாவது அதிகார சக்தி தனக்கான தந்திரங்களை எப்பொழுதும் திட்டமிட்டே செயல்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்பது இல்லை. ஏற்கனவே உருவாக்கப்பட்டுவிட்ட சமூகத்தின் அதிகார அமைப்பு. ஒவ்வொருவரையும் இந்தச் சமூகத்தில் பிறந்த கணத்திலிருந்து தனது மொழியால், பண்பாட்டு பழக்க வழக்கங்களால் ஆக்கிரமித்து, அவர்கள் அறியாமலேயே அவர்களுக்கு எதிரானதை அவர்களே ஏற்றுக்கொண்டு நடக்குமாறு செய்துவிடுகிறது. அல்தூசரின் மாணவரான ஃபூகோ-வும் இதை மற்றொரு கோணத்தில் தெளிவு படுத்துகிறார்.

"அடிமைத்தனம் என்பது ஒரு கற்பனையான உறவிலிருந்து யந்திர ரீதியில் பிறக்கிறது. ஒரு கைதி ஒழுங்காக நடந்து கொள்ளவோ, ஒரு பைத்தியம் அமைதியாக இருக்கவோ, ஒரு கூலியாள் முறையாக வேலை செய்யவோ, ஒரு பள்ளி மாணவன் முயன்று படிக்கவோ, ஒரு நோயாளி விதிமுறைகளைக் கடைப் பிடிக்கவோ, அவர்களைப் பலவந்தப் படுத்த வேண்டிய தேவையில்லை. பலருடைய பார்வையில் இருக்க வேண்டிய ஒவ்வொருவனும் அதனை உணர்ந்து, தானாகவே பொறுப்பை ஏற்றுக் கொள்கிறான். அதிகாரத்தின்

www.padippakam.com

எதிர்பார்ப்புகளுக்கேற்றவாறு நடந்து கொள்கிறான். அதிகாரத்திற்குக் கட்டுப்படும் அடிமைத் தன்மையை அவனே தன் மீது ஏற்றிக் கொள்கிறான்.'' (ப. மருத நாயகம், (2001) ப. 225)

மனிதர்களின் அதிகார அமைப்பு முறை, காலம், இடம் ஆகியவற்றிற்கு ஏற்ப வேறுவேறு உருத் தோற்றங்களை மேற்கொள்ளுகிறதே ஒழிய மனிதர்களை விட்டு அறவே அகலுவதில்லை. இந்த நாவலில் இந்து மதத்தில் அதிகாரம் மிக்கவர்களால் தீண்டத்தகாத வர்களாகக் கோயிலுக்கு வெளியே நிறுத்தப்பட்ட மக்கள், புதிதாக வந்த கிறித்துவ மதத்திற்கு மாறிக் கொள்வதன் மூலம் தங்கள் மேல் திணிக்கப்பட்ட இழிநிலைகளை உதறி எழுவதற்கு முயலுகின்ற முயற்சியினைக் கதை சொல்லி பதிவு செய்கிறார். 'சின்னக்குருசு' என்ற தாழ்ந்த சாதி மனிதருக்குப் பிறந்த பெண்குழந்தைக்குப் பூசை செய்து, கோயில் மணி அடிக்கவும் 'ஆண்டகை' ஒத்துக் கொண்டார் என்று கேள்விப்பட்டு வேதமாணிக்க முதலியார் ஆண்டகையை நேரே சென்று பார்த்து இப்படிப் பேசுகிறார்:

''எங்களுக்குச்சமமாக அந்த சனங்கள் வந்து பூசையில் கேட்கிறதும், வருகிறதும் போகிறதுமாக இருக்கிறதே. அது எங்களைப் போல உயர் சாதியாருக்கு, ஐயோ! தலைக்குனிவு. அதுவும் இருக்க மணி முழக்கம் வேற என்றால், அது எங்களுக்கு அவமரியாதை... கோயில் தீட்டுப்படும். நாங்கள் அவர்களை உரசவும் தொடவும் வேண்டியிருக்கிறது. இது எங்களுக்கும் கோவிலுக்கும் ஆண்டவருக்கும் பாவம் ஆண்டவரே.'' (ப. 34)

இந்தச் சாதி வெறியைப் பார்த்துப் பதறிப் போன ஆண்டகைக்கு மோட்சராதிக்க அடிகளார் யோசனை கூறுகிறார். பணக்காரர்களைப் பகைத்துக் கொண்டு இறைப்பணி செய்ய முடியாது. நாம் வசதிப் படைத்தவர் களுடன் இருப்பதுதான் நியாயம் என்கிறார். ஆனால் சின்னக்குருசுவின் மனைவி 'ரவக்கா'ளின் சகோதரி வெயிலாள் வந்து, ''ஆண்டவரே அவள் குழந்தை வரமிருந்து மண்சோறு தின்று, பாடுபட்டுப் பெற்ற குழந்தை. ஞானஸ்தானம் பண்ணி மணியடிச்சு மகிமைப் படுத்தோணும், சாமி அந்த ஜனங்கள் அடித்துத்தானே உம்மண்டை வந்தோம். நீங்களும் எம்மை அடிப்பீரோ'' (ப. 40) என்று கலங்கிக் கண்ணீர் விடுவதைப் பார்த்து விட்டு ஆண்டகை இளகி விடுகிறார். ''மகளே ஊழி புரண்டாலும் சின்னக்குருசு ஞானஸ்தானம் நடப்பது தப்பாது என்கிறார்.'' (ப. 40)

மதம் மாறினாலும் என்ன, சின்னக்குருசுவும் அவன் சகலையும் போதை காரணமாகக் குடித்தனக்காரத் தெருவில் நுழைந்து நடந்து வந்ததற்காக மேல்சாதிக் காரர்கள் தரும் தண்டனையிலிருந்து ஏது விடுதலை? அவர்கள் ''ஆடைகள் கிழிக்கப்பட்டன; மனிதர் மற்றும் மாடுகள், பன்றிகள், எச்சக்கரைசல் அவர்கள் தலையிலே ஊற்றப்பட்டன. அவர்கள் மரத்தில் கட்டிவைக்கப்பட்டு சாதி ஆசாரக்காரப் பெரியோர்களால் புளிய மிளாரு கொண்டு அடிக்கப்பட்டார்கள். இருவர் உடம்பிலும் தோல் கழண்டு ரத்தம் கசிந்தது. அது மட்டுமன்று அந்தக் குடும்பத்துக் குழந்தைகள் சிறைக்கிடங்கில் சித்ரவதை செய்யப்பட்டார்கள்.'' (ப. 50)

இதுபோலவே 'மன்னாரு' என்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் நெட்டப்பாக்கம் பள்ளியில் படிப்பதற்காகத் தன் குழந்தையைச் சேர்க்கப் போகும் போதும் சாதி உணர்வு விளையாடுகிறது. பள்ளியின் தலைமையாசிரியரே இப்படிச் சொல்லுகிறார். ''பள்ளன், பறையன் பிள்ளைகளைச் சேர்த்தால் இங்குள்ள ரெட்டி மார்கள் வருத்தப்பட ஏதுவாகும். அதுக்குத்தான் சொல்லு கிறேன்'' என்கிறார். (ப. 239)

இவ்வாறு மனிதர்களின் மனவியலுக்கு அடிப்படை யாகத் தேவைப்படும் கோயில், கல்வி நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து பெரும்பான்மையான மக்களை ஒதுக்கி வைக்கப்படும் கொடுமையை- வரலாற்றை- எழுத்தாகப் புனைந்து காட்டுவதில் பிரபஞ்சன் கைதேர்ந்த கலைஞராக வெளிப்படுகின்றார்.

சாதி போலவே மத வேறுபாடுகளும் சமூகத்தின் ஒற்றுமையைக் குலைப்பவைகளாகத் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பதையும் கதைசொல்லி இந்த நாவலில் பதிவு செய்கிறார். கிறித்தவரான சவரிராயலு நாயக்கர் இந்துக்கள் வாழும் தெருவில் வீடுகட்டிக் குடிவரும் போது எதிர்கொண்ட சிக்கல்களைக் கதை சொல்லி பதிவு செய்துள்ளார். மதம் மாறிய அவருடைய அக்காள் பெண் இறந்த போது இடுகாட்டில் புதைத்து விட்டு எங்கே இந்துக்கள் கொடுமை செய்து விடுவார் களோ என்று அவர் பட்டபாட்டை கதைசொல்லி கீழ்க் கண்டவாறு நாயக்கர் மூலமாகச் சொல்லிவிடுகின்றார்.

''தாயம்மாள் என்கிற அந்தக் குழந்தையை அடக்கம் பண்ண மாட்டேன் என்றார்கள். இந்த ஊர்ப்பாவிகள் - என் மாமா, குழந்தையை இங்கேதானே புதைத்தார் - புதைத்து விட்டு, எங்கே சடலத்தை இந்த ஜனங்கள் தோண்டி விடுவாரோ என்று காவல் காத்துக் கொண்டு பழி கிடந்தார் தெரியமா? நாயும், நரியும், பேயும், பெரும் பூதமும் சஞ்சாரம் பண்ணுகிற அந்த மயான பூமியில் ஐந்து இரவுகள், பகலுகள் நான் மாமாவுடன் இருந்திருக் கேனடா ஆணையா! யோசித்துப்பார். அப்போ நான் 14 வயதுப் பையன். பேயா? பிசாசா? மனுஷ்யர்களை விட அவைகள் நல்லவைகளடா. நான் அழுது மரியாள் முன்னே கண்ணீர் விட்டேனடா. அன்னை மரியாள் என்னைக் கைவிடுவாளோ? குவர்னர் மனசுக்குள்ளே, சம்மனசுகளை அனுப்பி குவர்னர் இருபது குழி நிலம் ஒதுக்கி கிறிஸ்துவர்களுக்கே கல்லறைத் தோட்டம் தந்தார் பார்.'' (ப.44)

அதிகாரத்தில் அருவருக்கத்தக்க முகம் வெளிப்படு கின்ற மற்றொரு களம் ஆண்-பெண் உறவாகும். ஆணாதிக்கச் சமூகத்தின் தந்திரமான அதிகார அரசியல் செயல்பாட்டின் காரணமாகப் பெண்கள் குறித்த மனோ பாவம் இங்கே எவ்வாறு கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கதைசொல்லி 'லஷார்' என்ற தன் பாத்திரத்தின் மூலம் பதிவு செய்கிறார். ''அணைந்த கரிக்கட்டை; வெந்நீர் அடுப்புக் கறுப்புத்துணி; கல்லுக்கும் கீழ்வாழ் பூரான்; விரியன் பாம்பின் பெண் இணை.'' (ப.9) மேலும் சண்டாளர்களை விடக் கேவலமாகப் பெண் இங்கே அடிமையாக நடத்தப்படுகிறாள் என்பதையும் கதைசொல்லி கூறிவிடுகிறார்.


படிப்பகம்

www.padippakam.com

''பெண்கள் என்றாலே, அடிமைகள் என்றுதான் பேர். இந்தத் தேசத்தில் அடிமைப்படுகிற எல்லா ஆண்களும், தாங்கள் அடிமை செய்ய பெண்களைக் கொண்டிருக்கிறார் கள். தாய், மனைவி, சகோதரி, அண்ணி, கொழுந்தி என்று என்னபேர் இட்டு அழைத்தாலும், பெண்டுகளில் மொத்த பேர் அடிமை என்பது தான்'' (ப.37) அதிகாரம் இவர்களை அடிமையாக்குவதற்கு மதத்தையும், அறியா மையையும் பயன்படுத்தியது என்பதையும் கதைசொல்லி பாத்திரங் களின் உரையாடல் வழியாகப் புனைந்து விடுகிறார்.

''பெண்கள் படித்தால் அவர்களுக்கு நாணம், மரியாதை போய்விடுமாம். திங்குதிங்கென்று நடப்பார் களாம். படிக்க, வயது முதிர்ந்து கிழமாகி விடுவார்களாம். கலியாணத்துக்கு ஏற்ற மனசு வாய்க்காதாம். புருஷர்களை இளக்காரம் பண்ணு கிறார்களாம். ஏறெடுத்தும் பார்க்க மறுக்கிறார்களாம். வெள்ளைக்காரிச்சிகளைப் போல, கற்பொழுக்கம் மறந்து போவார்களாம். மகான்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்து மதத்துக்கு நாசம் வந்துவிடுமாம். நாசகாலே விபரீத புத்தி என்கிறாற் போலே, படிச்ச பெண்கள் விபரீத புத்தி கொண்டு விடுவார்களாம். அடுப்பங்கரை எட்டியாகுமாம். தீட்டு, துடக்கெல்லாம் வேம்பாகுமாம். கல்வியோ கலியோ என்கிறார் முதலியார்.'' (ப.95) ஒரு நூற்றாண்டுக்கு முந்திய ஒரு நிகழ்ச்சியை பிரபஞ்சன் இப்படி வர்ணிக்கிறார்.

அதிகாரம் கொடிகட்டிப் பறக்கும் இடங்கள் அரசாங்க அலுவலகம் மற்றும் காவல் நிலையங்களாகும். இந்த அலுவலக அதிகாரிகளைக் குறித்து ஆணையன் என்றும் கரும ஞானியின் கூற்றாகக் கதைசொல்லி ''முடிச்ச விழ்க்கி, மொல்லமாறிகள், ஊர்த்தாலியை அறுக்கிற களவாணிகள்'' (ப.45) என்று தன் கோபத்தை வெளிப் படுத்துகின்றார்.

இதுபோலவே ''லஞ்சம் வாங்கி இன்ஸ்பெக்தேர்'' என்று பெயர் பெற்று விட்ட ஒரு காவல் அதிகாரி பொது மரங்களை வெட்டி இரவோடு இரவாகப் பிறந்த வீட்டிற்கு அனுப்பி வைக்கும் கொடுமையையும் பதிவு செய்கிறார். மேலும் கிண்டலாகப் போலிஸ்காரர் குறித்து இவ்வாறு எழுதுகிறார். '' முகம் முழுக்க மஞ்சள் பூசியது மாதிரி ஒரு மடமைத்தனம் பூசியிலிருந்து அவனுக்கு. கண்களில் குரூரம், கபடம், வஞ்சகம் எல்லாம் வெளிப்பட்டது. மதமதவென்று அறிவு விகாசம் சுத்தமாக அற்று அவன் வளர்ந்திருந்தான். இப்படிப்பட்டவன் போலீசுக்காரனாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர் உள்மனது சொல்லியது.'' (ப.14) மேலும், ''போலீசோடு நாய்களை ஒப்பீடு செய்யாதேயும் . பாவம் நாய்கள் நம்பகமானவை'' (ப.174) என்று ஓரிடத்தில் கூறுவதன் மூலம் அதிகாரத்தைக் கையில் வைத்திருக்க வாய்ப்பு கிடைக்கும் மனிதர்கள், எந்த அளவிற்கு இழிந்தவர்களாகி விடுவார்கள் என எடுத்துரைக்கின்றார் கதை சொல்லி. இப்படிப் பல இடங்களில் அதிகாரக் குரலின் அடையாளமாக விளங்கும் போலீஸ்காரர்களைக் கிண்டல் செய்து கொண்டே போகிறார் ஆசிரியர்.

மனிதர்களுக்குள் அதிகார மனோபாவத்தை வடிவமைப்பதில் பெரிதும் ஆற்றல் வாய்ந்தவையாக விளங்குவது நாடு, மொழி, இனம் என்ற அடிப்படையில் வந்தமையும் தேசிய அடையாளமாகும். இத்தகைய தேசிய அடையாளத்தினால் நமது காலத்தில் பூமிப்பரப்பு முழுவதும் அதிகார வெறிகொண்டு அலைந்தவைகளில் குறிப்பிடத்தக்கவை பிரிட்டனும் பிரான்சும் ஆகும். உலகம் முழுவதும் கட்டி ஆள முயன்றதன் மூலம் ஐரோப்பிய வெள்ளை இனம், மனித சமுதாயத்திற்குச் சொல்லொணாக் கொடுமைகளை விளைவித்திருக்கிறது. இந்தக் கொடுமைகளை எல்லாம் புதுச்சேரி மண்ணும் எவ்வாறு அனுபவித்தது என்ற வரலாற்றுச் செய்திகளை மிக அற்புதமான மொழியில் இந்த நாவலில் பதிவு செய்துள்ளார். பாரதியார், வ.வே.சு. ஐயர், அரவிந்தர், காந்தி, திலகர், சுப்புரத்தினம், வாஞ்சிநாதன், மாடசாமி, சுப்பையா என்று இந்த மண்ணில் உலவிய மாபெரும் மனிதர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளை நாம் இன்று கண்கொண்டு பார்க்கப் படைத்துள்ளார் பிரபஞ்சன். ''அட! மேலைக் கள்வனே..! வெள்ளை அநியாயமே!'' என்று இந்த ஆதிக்க வெறியர்களைக் காட்டும் கதைசொல்லி அங்கிருந்து இங்கே வந்து எப்படி சுகபோகமாகச் சுரண்டிப் பிழைக்கிறார்கள் என்பதை மிக அழகாக எடுத்துரைக்கின்றார். ''புதுச்சேரிக் குவர்னராக உத்தியோகம் வாங்கிக் கொண்டு வருவது, பரலோகத்து இன்பங்களை இகலோகத்திலே அனுபவிக்கிறதுக்கு அல்லவா? வயித்துப் பிள்ளையைத் தவிர அவன் வைத்த சட்டத்துக்கு உடன்படாதார் யார்? சம்பளம், சுயமான தொழில், அந்த வரவு, இந்த வரவு, பொன்,பெண், மண் ஆகிய ஆசைகள் அனைத்தும் நிறைவேறிய பின் குறை என்ன, குற்றம் என்ன? இந்த மோட்ச சுகங்கள் அனுபவிக்கிறதுக்காக அல்லவா இந்த குவர்னர்கள், பிரான்சு ராஜாக்கள், பிரபுக்கள், மந்திரிகள், பெரிய மனுஷர்களின் வைப்பாட்டிகளின் கால்களிலே விழுந்து பணம் கொடுத்து இந்தப் பதவியைப் வாங்கிக் கொண்டு கடையிலே புகையிலைக் கொத்து வாங்கினாற் போல வாங்கிக் கொண்டு கப்பல் ஏறுகிறார்கள். இந்தக் குவர்னர்கள் வருகிறபோது பிருஷ்டத்திலே கிழிந்த சராய் அணிந்து வருகிறதும், இங்கே சில ஆண்டுகள் ராஜாங்கம் பண்ணி மூட்டை மூட்டையாய்ப் பணம் பண்ணிக் கொண்டு கப்பல் ஏறுகிறதையும் நாம் பார்க்கிறது உண்டுதானே?'' (பக் 67-68)

நாவலின் போக்கின் ஊடே அரசியல்வாதிகளின் ஈவுஇரக்கமற்ற விளையாட்டினையும் தின்று உடுத்திக் கொழுக்கும் ஈனத் தனத்தினையும் (ப98) ஜோசியப் பித்துப் பிடித்து அலையும் ஏமாற்று வித்தைகளையும், அடியாள் அரசியல் நடத்தும் அக்கிரமங்களையும் கதைசொல்லி போகிற போக்கில் சொல்லிக் கொண்டே போகிறார். மேலும் சாதியும் வர்க்கமும் இங்கே ஒன்றை ஒன்று பிரித்துப் பார்க்க முடியாதபடி எவ்வளவு இறுக்கமாகப் பிண்ணிக்கிடக்கின்றன என்பதையும் அதிகாரத்திற்கு எதிரான கம்யூனிஸ்டுகளின் போராட்டம் இந்தப் புதுச்சேரி மண்ணில் தோன்றி வளர்ந்த வரலாற்றினையும் நாவலாகப் புனைந்துள்ளார். நவீன புதுச்சேரி வரலாற்றின் ஆன்மாவாக வாழ்ந்து முடிந்த சுப்பையாவின் எழுச்சியைக் கூறுவதோடு ''தொழிலாளர் பாதுகாப்புக் கழகம்'' என்ற பெயரில் தொடங்கிய அமைப்பின் தோற்றத்தோடு இந்த நாவல் முடிகிறது. பதினாறு மணி நேர வேலைக் கொடுமையிலிருந்து விடுதலை பெற்று 8 மணி நேர வேலையாகச் சாதிப்பதற்காகப் புதுச்சேரியில் நடந்த சுதேசி மில்

www.padippakam.com

போராட்டத்திற்கான சூழல் கனிந்த காட்சியோடு நாவல் முடிகிறது. தொழிலாளர்களுக்கான உலகம் மலர இருக்கிறது என்ற நம்பிக்கையோடு புனைவு முற்றுப் பெறுகிறது. நம்பிக்கைகளை வார்த்தெடுப்பது தானே கலைஞனின் வேலை.

மொத்தத்தில் இந்த நாவலில் மனிதர்களின் நேற்றைய வரலாற்றை எந்த அளவிற்குப் புனைவுகளின் வாழ்க்கையோடு அழகாகப் பொருத்தி இணைத்துள்ளார் என்பதுதான் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. மொழியைக்கூட அன்றைய மக்கள் மொழியில் வடித்து எடுத்திருப்பது பிரபஞ்சனின் ஆற்றலுக்கு ஒரு சான்று. இதைக் கேட்பாரில்லையா? என்று இன்றுநாம் பேசுவதை 'இதைக்கேழ்ப்பார்' இல்லையா? என்று பாத்திரத்தைப் பேசவைக்கிறார். வாஞ்சிநாதன் ஆஷ் துரையைச் சுட்டுவிட்டுத் தற்கொலை செய்து கொள்ளும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியை, உடனுக்குடன் படம் பிடித்துத் தயாரிக்கப்பட்ட ஒரு தகவல் படம் போல நுணுக்கமாகச் சித்தரித்துள்ள எழுத்து முறை நம்மை அதிசயத்துக்குள் ஆழ்த்துகிறது.

கலையின் வெற்றியே அதிசயங்களை உற்பத்தி செய்து கொண்டே இருப்பது தானே. அந்த அதிசயங்கள் மூலம் மனித மனத்தைக் குழந்தை நிலையிலேயே தக்க வைத்துக் கொள்ள துணை நிற்பதுதானே. பிரபஞ்சன் மானுடத்திற்குத் துணையாக நிற்கிறார். சுண்டு விரலைப் பிடிக்கக் கொடுத்து உடன் அழைத்துச் செல்கிறார். ●

## பயணம்



ஆசிரியர் : க. பஞ்சாங்கம் (பஞ்சு)
வெளியீட்டாளர்:
செல்வன் பதிப்பகம் (காசி இல்லம்)
25, 20-வது தெரு
அவ்வை நகர், புதுச்சேரி - 8.
விலை: ரூ.35/-

**சுந்தர முருகன்**

"A tree is known by the fruit it bears". ஆம். இந்தப் பயணக் கவிதைகளிலிருந்து நாம் இக் கவிஞனை அடையாளம் காண முடிகிறது. பாரதி, பாரதிதாசனுக்குப் பின், கவிதையின் அத்தனை வரிகளும் அனைவருக்கும் புரியும் வகையில் புதுச்சேரியில் வடிக்கப்பட்ட வசன கவிதை நூல், பயணம் குறியீடு இல்லாமல் இல்லை. இருண்மை போன்ற புதிய புரியாமை உத்திகள் இல்லாமல் இருப்பது அருமை.

தகவல் தொழில்நுட்பப் புரட்சி யுகத்தில் பயணித்துக் கொண்டிருக்கிற மனித இனத்தைச் சற்றே ஆழமாக அலசுகிறார் கவிஞர். அறிவியல் முன்னேற்ற காலத்திற்கு முன்பிருந்த நட்புணர்வு, அன்புணர்வு வேகமான கால மாற்றத்தினால் மாறிவந்திருக்கிறது என்பதைப் படம் பிடித்திருக்கிறது. தோள்மேல் கைபோட்டு நடந்துபோன பொழுதுகளில் இருந்த தோழமை... விமானத்தில் பறந்த போது பறந்தே போய்விட்டது. மனித உறவுகளின் ஆழ அகலப் பரிமாணங்கள் சக்கரங்களின் வேகத்திற்கேற்ப நிர்ணயமாகின்றன.

போர் முண்ட இருநாட்டுப் படை வீரர்களும் மடிந்து குவிந்த பின்னர் போர்நிறுத்தத்தினால் பயன் தான் என்ன? வாழுகின்ற மக்களுக்கு நல்லவை செய்வதுதான் ஆட்சி செய்யும் அரசின் கடமை. இறந்துபட்ட பின்னர் எத்தனைச் செல்வமிருந்தும் அதனை அவரா நுகர முடியும். அரசை எதிர்பார்த்து வாழும் மக்களுக்குச் சேவை யாற்றும் அரசாங்கமே இன்று தேவை என்பதை, மக்கள் நல அரசாங் கம் நடக்கிறது என்கிறார்கள். சாலை விபத்தில் இறந்தால் பிணங் களின் தராதரத்திற்கேற்ப ஐம்பதாயிரம், ஒரு லட்சம் தருவதாக அறிவிப்பு நிகழ் கிறது. மக்கள் சாவு நல அரசாங் கம் சொல்வது காதில் விழுகிறது, எனக் கவிஞர் வலியுறுத்துவது அவரின் முற்போக்குச் சிந்தனையைத் தெளிவுறுத் துகிறது.

மக்களுக்காகத் தீட்டப்படுகிற எந்தத் திட்டங்களும் உரியவருக்குப் போய்ச் சேருவதில்லை. எழுத்து வடிவிலேயே அவை விளம்பரமாக இருக்கின்றனவே தவிர அவை நடைமுறைப் படுததபபடுவதில்லை என்பதை, அறிவிப்புகள் மட்டும் அழகான எழுத்துக்களால் பெரிய செலவில் எழுதப்படுகின்றன என நியாயமான தன் கோபத்தை வெளிப்படுத்தியிருப்பது அவருக்கிருக்கும் சமுதாய அக்கறையைப் பறைசாற்றுகிறது.

நிற்கும் களிமண்ணில் தாவணி தேவையற்ற பாட்டி காலியான இடத்தில் காட்டினாலும் உட்கார மாட்டாளம் நான் ஆணாம்; அவள் பெண்ணாம் கவிதை வரிகளின் வாயிலாக, ஆண் பெண் என்ற வேறுபாடு இன்றி விளையாடும் சிறு பெண், பருவம் எய்தியவுடன் இப்படித்தான் இருக்கவேண்டும் என ஆணாதிக்கச் சமுதாயப் பெரியவர்கள் கூறும் அறிவுரை மொழிகளே, பின்னாளில் அப்பெண் வயது முதிர்ந்த பின்பும் கூட, பாலினரீதியாக இருபாலினருக்கும் இடையே சமமற்ற ஒரு பெரிய வேறுபாட்டினை உருவாக்கிவிடுகிறது என்பதைக் கவிஞர் எடுத்துக்கூறி வருந்துவது ஆண் / பெண் பாகுபாடற்ற சமதர்மச் சமுதாயத்தில் அவருக் கிருக்கும் விழைவை வெளிப்படுத்து கிறது.

புனைவுகள் உண்மைகளை விட உயர்ந்து நிற்கிற தன்மையையும் நிஜத்தைவிடவும் ஒப்பனைக்கு உரியதல்லாத மரியாதை கிடைக்கும் தன்மையையும் சாடுகிறார். மொத்தத்தில் இன்றைய நடைமுறைச் சிக்கல்களை எடுத்து கூறுவதில் கவிஞர் எள்ளளவும் தவறவில்லை. மனிதர்கள் பால்,சாதி, இன மத,நாடு,மொழி போன்றவற்றால் வேறுபட்டுக் கிடப்பதைக் கவிஞர் விரும்ப வில்லை. மனிதர்களின் ஒற்றுமையை நாடும் அவர், மனிதர்கள் மனிதர்களாய் இல்லை என ஆதங்கப்படுவது அவருடைய நவீன சிந்தனைகளைத் தெரிவிக்கிறது.

இலக்கியமானது வாழும் மனிதர்களின் வாழ்க்கைப் பதிவுகள் என்பது உண்மை. அவற்றை மிக அழகாக நேர்த்தியாகப் பதிவு செய்திருக்கிறார் கவிஞர். தம் கவிதை வரிப் பொற்காசுகளில் செல்லாக் காசு ஒன்றேனும் இல்லை. வாழ்க்கைப்பயணங்களின் பலவகையினை தம் அனுபவத்தின் வாயிலாகப் பறைசாற்றுகிறார். பரந்து கிடக்கிறார்கள் மனிதர்கள்; ஆனாலும் ஆசையாய்ச் செல்ல ஓரிடம் இல்லை. நாகரீக யுகத்தில் பயணம் வறட்சி மிக்கதாயிற்று.; மனித வரலாறு சுய நலத்தின் வரலாறு என்று தாம் உணர்ந்தவற்றை வாசிப்போரிடம் பகிர்ந்து கொள்கிறார். கண்டிப்பாக நாம் ஒவ்வொருவரும் சென்று மீள வேண்டிய பயணம்.

●●●



படிப்பகம்

www.padippakam.com

# எகத்தாளம்

❒ பாமா ❒



வாய்தாவுக்கு வந்த ஆம்பளைகளும் பொம்பளைகளும் பஸ்ஸ்டாண்டுல கூட்டமா ஒக்காந்துருந்தாக. ராசம்மாவும் அவாகூட படுச்ச பிள்ளைகளும் ஒரு ஓரமா ஒக்காந்துருந்தாக. ஊருக்குப் போற வண்டிக்காக ரொம்பா நேரமாக்காத்துக் கெடந்தாக. காலைல இத்தனிக்கஞ்சி குடுச்சுட்டு வந்தது. இப்ப சாயங்காலம் ஆகிப்போச்சு. கஞ்சி தண்ணி எதுவுமில்லாமெ அம்புட்டுப் பேரும் கெறங்கிப் போயி இருந்தாங்க.

அந்நியாரம் பள்ளிக் கொடத்துப் பிள்ளைக கொஞ்சப்பேரு யூனிபாமோடெ பஸ்ல இருந்து எறங்கிப் போனாக. இதப்பாத்த ராசம்மாளும் மத்த பிள்ளைகளும் மனசுக்குள்ள நெனச்சாக, ''நம்மள மட்டும் போலிசுக்காரனுக புடுச்சு ஜெயிலுக் குள்ள போடெமெ இருந்துருந்தா, நம்மளும் பள்ளிக் கொடம் போயி, பரிச்ச எழுதி இருக்கலாம். இப்ப எல்லாம் போச்சு'',

பசிக் கெறக்கத்துல பொம்பளைக ஒவ்வொருத்தரா முந்தானைய விருச்சுப் படுத்துட்டாக.

''உண்டெனத் துட்டு இருந்தா ஒரு காபித்தண்ணியாவது குடிக்கலாம். இந்த ஊர்லதான் பச்சத் தண்ணியக்கூட தாளுல அடச்சுக் கிட்டு விக்கிரானுகளே. என்னத்த சொல்ல?'', படுத்துக்கிட்டே பொலம்புனா கன்னியம்மா.

'' ஒரு வெத்தல பாக்கு வாங்கிப் போடக்கூட வழி இல்ல'', கொட்டாவி உட்டுக்கிட்டே ஆராயிப் பாட்டி சத்தமாச் சொன்னா.

ராசம்மா பக்கத்துல இருந்த போலிசுக்காரனுகளயே உத்துப் பாத்துக்கிட்டுருந்தா. அசுக பக்கத்துல இருந்த பலகைல எழுதி இருந்தத வாசுச்சா.

''மே ஐ ஹெல்ப் யூ? ' காவலர் உங்கள் நண்பன்' - செவப்பு எழுத்துல இருந்த இந்த வாக்கியங்கள வாசுத்துட்டு அவளுக்குப் பழைய நெனவுக வந்துச்சு. நாலஞ்சு மாசத்துக்கு முன்னால ஊர்ல நடந்த சம்பவங்க பூராம் தொடர்ச்சியா மனசுக்குள்ள ஒடுச்சுது.

அப்ப ராத்திரி பத்துமணிக்கு மேல இருக்கும் லிங்கம்பட்டி தலித்துக தெருவுல ஒரே கூப்பாடும், கதறலுமாக் கேட்டுச்சு. தடதடன்னு போலிசுகாரனுக தெருவுக்குள்ள ஓடுறதும், வீட்டுக்கதவுகள ஒடைக்கிறதும், கைல ஆப்பட ஆம்பள பொம்பள அம்புட்டுப் பேத்தயும் அடுச்சு புடிக்கையில் அடி தாங்க மாட்டாமெ அந்தச் சனங்க அலறுன சத்தமும் கேக்கக் கேக்கக் கொலையே நடுங்குச்சு.

ஒறக்கத்துலருந்து அரக்கப் பரக்க எந்துருச்ச வேதமுத்து, கெட்டுன வேட்டியோடெ, பொண்டாட்டி பார்வதியயுங்க கூட்டுகிட்டு கெழக்க பாத்து ஓடுனாரு. அவருக்கு முன்னால பத்து பதனஞ்சு பேத்துக்கு மேல ஓடிக்கிட்டு இருந்தாக. பாதித் தொலவு ஓடியாந்தப் பெறகுதான், சட்டப் பையில வச்சிருந்த ரூவாய எடுத்துக்கிட்டு வந்துருக்கலாமேன்னு தோணுச்சு. பார்வதிக்கு தொடந்து ஓட முடியல. இந்தச்சாகப் போற வயசுல இந்தப் பாடுபட்டு ஓடனுமான்னு நெனச்சுக்கிட்டு மூச்செரைக்க ஓடுனா.

ரெங்கசாமியோடெ வயக் காட்டத்தாண்டயில தெருவுக்குள்ள இருந்து அலறல் சத்தங்க கேட்டுச்சு.

''ஐயய்யோ... அம்மா... உட்ருங்கய்யா... அவள உட்ருங்க சாமி... பச்ச ஒடம்புக்காரி... அடி தாங்கமாட்டா... கொழந்த பெத்து ரெண்டு வாரந்தான் ஆகுதுய்யா... இந்த ஊரு இல்லையா... வள்ளி கொளத்துக்கு வாக்கப்பட்டுப் போயிட்டு பேறுகாலத்திற்காக இங்க வந்தவா சாமி. ஒங்களுக்குப் புண்ணியமாப் போகுது... அவள உட்ருங்க சாமி''.

கல்நெஞ்சயும் கரைக்கும் அந்த கதறலக் கேட்ட பார்வதி சொன்னா,

**அவள உட்ருங்க சாமி...**
**பச்ச ஒடம்புக்காரி...**
**அடி தாங்கமாட்டா...**
**கொழந்த பெத்து**
**ரெண்டு வாரந்தான்**
**ஆகுதுய்யா...**

''அடக் கருமாந்துரமே... அந்தக்கா சந்தம்மாளோடெ சத்தம்ல இது. அவா மகாதான் பிள்ளப் பெத்துக் கெடந்தா. இந்தச்சாமத்துல பச்ச மண்ணத்தூக்கிக்கிட்டு எங்குட்டு ஓட முடியும்? தாயும் பிள்ளையுமா மாட்டிக்கிட்டாக பொறுக்கோ''.

''யே... நீ கொஞ்சம் மெதுவாப் பேசுத்தா. சத்தங்கேட்டு வந்தாம்னா.. அம்புட்டுத்தான். கூண்டோட கைலா சந்தான் எப்பிடியாச்சும் விடியமுன்ன தட்டுத் தடுமாறி கெஞ்சம்பட்டி போயிச்சேந்தரனும். அங்க நம்மாளுக நெறய்யா இருக்காங்க'', வேதமுத்து சொல்லவும் நடைய இழுத்து வச்சுப் போனாக.

அடுக்குப் பானைக்குள்ள வச்சிருந்த ரூவாயத் தேடிக்கிட்டு இருக்கும்போதே தெருவுக்குள்ள போலிசுக்காரனுக மொழஞ்சிட்டானுக. அருளம்மாளுக்கு என்ன செய்றதுன்னு புரியல. சடார்னு கீழ படுத்துகிட்டு எரிக்ககட்டி வச்சிருந்த மொளகா மார எடுத்து மேல பரப்பி உட்டுக்கிட்டு ஆடாமெ அசையா மெக் கெடந்தா. வீட்ல கரண்டு லைட்டு இல்லாததுனால சட்டுனு கண்டு பிடிக்கமாட்டாகன்னு நெனச்சுக்கிட்டா. அவா வீட்டுக்குள்ளவும் திமுதிமுன்னு போலிசு மொழஞ்சு, மத்து வீடுகள்ள செஞ்சது கெணக்கா, இருக்கற சாமாஞ்சட்டுகள அடுச்சு நொறுக்கித் தள்ளுனாக. மொளகா மாரோடெ நெடி மூக்குக்கு ஏற ஏற அவளுக்குத் தும்மல் வர்ர மாதிரி இருந்துச்சு. ரொம்பக் கஸ்டப்பட்டு அடக்கிக்கிட்டு அராமுத்துக் கெடந்தா, போலிசுக் காரனுக போகவும் எந்துருச்சு வாய்ல சீலய அமிக்கிக்கிட்டுத் தும்மித் தும்மிக் கண்ணீராக் கொட்டுச்சு. நெஞ்ச அடைக்கிற மாதிரி இருந்துச்சு. உசுர வெறுத்துட்டு துணுஞ்சு ஓடியாந்தா.

www.padippakam.com

கெழக்கால உழுந்தடுச்சு வந்து, ஏற்கனவே ஓடிக்கிட்டுருந்தவுகக் கூட சேந்துக்கிட்டா.

''எப்பிடித்தாதப்புச்செ? பயங்கர மாச் சத்தங் கேட்டுச்சு?'' வேதமுத்து கேட்டாரு.

''அத ஏங் கேக்கறெ? மொளகா மாத்த மேல அன்னிப் போட்டுக் கிட்டு மறஞ்சு கெடந்துட்டு, தும்ம முடியாமெ நாம் பட்ட அவஸ்த! சே.. நானு எப்பிடியோ ஓடியாந் துட் டேன். பாவம்... சாந்தம்மா மதினி யும் அவா மகளும் மாட்டிக் கிட்டாக. ஒறக்கத் துல இருந்ததுனால ஏகப் பட்ட சனங்க மாட்டிருச்சுக. இத்தி னிக்கூட நெஞ்சுல ஈரமில்லாத பெயல்களா இருக்கானுக. கதறக் கத்றப் புடுச்சு அடிக்கானுக. அவுக வீட்ல ஆம்பள பொம்பள அம் புட்டுப் பேரும் மாட்டிக் கிட்டாக. அந்தப் பள்ளிக்கொடத்துல ரெண் டோ மூனோ படிக்குதே ஒரு சின்னப் பிள்ள, அது மட்டும் கெடந்து அழு துட்டு கெடக்குது பாவம்.''.

இவுக பேசிக்கிட்டு வேகமா நடந்துக்கிட்டு இருக்கயில நல்ல முத்து வேர்க்க விறுவிறுக்க ஓடியாந் தாரு.

''ஊரச் சுத்தி போலிசுக்காரனுக நிக்கானுக. மேற்க சத்தங் கேக்கயில நானு எந்தருச்சு ஓடியாந்தேன். அந்தத்த கொறக்காலி வீட்டுக்கிட்ட வரயில போலிசு வந்துட்டான். நானு சரசரன்னு அங்ன நின்ன வேப்ப மரத்துல ஏறிட்டேன். ஆனா ஏம் பொண்டாட்டியும் மக்களும் மாட் டிக்கிட்டாக. ஏங்கண்ணு முன்னால அவுக பட்ட இம்சயப் பார்த்துட்டு எறங்கிரலாம்னு இருந்துச்சு. மனசக் கல்லாக்கிக்கிட்டு இருந்தேன். மேல இருந்து பாத்தினா ஊருக்குள்ள எங்ன பார்த்தாலும் போலீசுதான். மேகலக் குடி ஆளுக நாலஞ்சுபேரு போலிசுக் காரனு களுக்கு நம்ம வீடுகள அடையா ளங்காட்டிக் குடுத்துட்டு, நம்பளப் பத்திய அம்புட்டு வெவரத் தயும் சொல்லிக் குடுத்துப் புடிக்கச் சொல்லுறானுக. அதுமட்டுமில் லாமெ இந்தச் சுத்து வட்டாரத்துல நமக்குச் சொந்த பந்தங்க எந்தெந்த ஊருகள்ள இருப்பாகன்னும் சொல்லிக் குடுக்கானுகளாம். நம்ம எங்குட்டாச்சும் தூரந்தொலவு ஓடிப் போகனும்''.

●●●

**நானு சரசரன்னு அங்ன நின்ன வேப்ப மரத்துல ஏறிட்டேன். ஆனா ஏம் பொண்டாட்டியும் மக்களும் மாட்டிக்கிட்டாக. ஏங்கண்ணு முன்னால அவுக பட்ட இம்சயப் பார்த்துட்டு எறங்கிரலாம்னு இருந்துச்சு.**

●●●

''நீ என்னனு எறங்கி ஓடி யாந்தொ?''

''அதான். அவனுக பூராம் மேற்க போகுந்தண்டிக்கும் ஒக்காந்துக் கிட்டே இருந்தேன். நம்மள அடுச்சுப் புடிக்கிறவனுக்கெல்லாம் மேகலக்குடி ஆளுக தெருவுகள்ள நல்ல கவனிப்பு. சாப்பாடு, காப்பி, சிரெட்டு எல்லாங் குடுத்து கவனிக்கா களாம். மரத்துமேல இருந்து பாக்க யில ஒவ்வொருத்தரையும் புடுச்சு அடிக்கிறது நெஞ்சாங்கொலையலச் சம்மட்டி கொண்டி அடிக்கிறது கெனக்கா இருந்துச்சு. இந்த அடி வாங்குறதுக்கு நாம என்ன குத்தஞ் செஞ்சுட்டோம்னு ஆத்துரமாவும் இருந்துச்சு. ஆத்துரப்பட்டு என்ன செய்ய? அவனுக மேற்க போகவும் துணுஞ்சு எறங்கிட்டேன். எறங்கி குனுஞ்சிக்கிட்டே பம்மிப்பம்மி நடந்துபோயி ராசராமோடெ பம்பு செட்டு ரூம்புகிட்ட போகையில யாரோ பேசற சத்தங் கேட்டுச்சு... ரூம்பு செவத்தோடெ செவரா ஒட்டி நின்னுக்கிட்டு உத்துக் கேட்டேன். கெணத்துக்குள்ள இருந்ததுதான் என்னமோ சத்தங்கேட்டுச்சு. அம்புட் டுத்தான். பேயோ பெசாசோன்னு பயந்துபோயி, அப்படியே ஒக்காந் துட்டேன். ஓடனும்னு நெனச்சாக் கூட ஓடமுடியல. பயத்துல அப்பிடியே ஈரத்துணி கெணக்காக் கெடந்தேன். வேர்த்து ஊத்துது. போலிசு கைல தப்புச்சு வச்சு இங்க பெசாசுகிட்ட மாட்டிட்டோம்னு நடுங்கிப்போயிக்கெடந்தேன்''

''அந்தக் கெணத்துல எந்தப் பேயிடா இருக்கு? பயத்துல நீ கண்ட மானிக்க நெனச்சிருப்ப'', பார்வதி சொன்னா.

''இல்ல. இல்ல.. அதுல கன்னி கழியாத கொமரி உளுந்து செத்துப் போயிருக்கா?'', ரோசம்மா சொன்னா.

''சரிதாம் போடா... இந்தப் போலிசுக்காரப் பெயல்க கைல சிக்கி அடி வாங்கிச் சாகுறதவிட பேயிக கைல சிக்கிக்கிறது நல்லது'', வேத முத்து சொன்னாரு.

''அதுசரிதான் நாந்தான் மரத்து மேல இருந்து பாத்தனே.. மனுசன அடிக்கிறது கெணக்காவா அடிக் கான்? அடங்காத சண்டி மாட்டக் கூட நாம அந்த அடி அடிக்க மாட்டோம். செத்த நேரத்துல கெணத்துக்குள்ள இருந்து நம்ம நடுத்தெரு ராச மாணிக்கம், அவனோட சம்சாரம், பிள்ளகுட்டிக, மேலத்தெரு பாக்கி யராசு, மணிவேலு மாமா எல்லாரும் மேல ஏறி வந்தாக. அவுகளப் பாத்தாப் பெறகுதான் எனக்குப் போன உசுரு திரும்பி வந்துச்சு.

''கெணத்துக்குள்ள என்னத்துக்கு போயிக் கெடந்தாக?''

''அத ஏங் கேக்குற! தப்புச்சு ஓடியாந்துருக்காக. ஓடியாந்தா ராசா ராமரு தோப்புக்குள்ளருந்து ரெண்டு போலிசு வந்துக்கிட்டு இருந்தா களாம். அம்புட்டுத்தான். அங்னக் குள்ள வேற ஒளியரதுக்கு என்ன எடமிருக்கு? அதான் நடக்கிறது நடக் கட்டும்னு கெணத்துக்குள்ள போயிக் கெடந்திருக்காக. இப்பத் தான் தெக்க அவுகம்மா ஊருக்குப் போறாக''.

கிட்டதட்ட இருநூறு பேருகிட்ட ஜெயிலுக்குள்ள கெடந்துட்டு சாமீன்ல வந்தாக. தப்புச்சு ஓடுனவுக நாடோடிக கெணக்கா அலஞ்சுட்டு கொஞ்சங் கொஞ்சமா இப்பத்தான் ஊருக்குள்ள தல காட்டுறாக. எத்தன பொம்பளைகள கைப்பிள்ளை களோடெ செயிலுக்குள்ள போட் டாக' அந்தப் பிள்ளைக என்னை செஞ்சதுக? படிக்கிற பிள்ளைக ஆணும், பொண்ணுமா இருவது பேத்துக்கு மேல அடச்சுப்போட்டு, அம்புட்டுப் பேரு படிப்பும் போச்சு. ஊரே சுடுகாடாப் போச்சு. ஒருசனம் இல்ல. நடக்கமாட்டாத ரெண்டு கெழவிகளும் கண்ணு தெரியாத மொட்டுக்கன்னு தாத்தாவும் மட்டுந் தான் தெருவுக்குள்ள ஆளுன்னு இருந் தது. அவுககூட பாவம் அன்னந் தண்ணி ஆகாரமில்லாமெ சாகப் பொழைக்கக் கெடக்காக.

சாமீன்ல வெளிய வந்தவுக செயிலுக்குள்ள பட்ட வேதனையச் சொல்லி அழுகையிலே போலிசுக்


படிப்பகம்

www.padippakam.com

காரனுக மனுசமக்களுக்குப் பெறந்த வனுகதானான்னு சந்தேகமா இருக் குது. செயிலுக்குக் கொண்டு போகை யில தன்னடையா நடந்து போன அருளாயி பெரியம்மா, திரும்பி வரயில தானா நடந்து வர முடியல. லத்திக் கம்புட்ட மானாவாரிக்கு அடுச்சு பிட்டாணி போயி, கைகாலும் வெளங்காமப் போனா. நாலஞ்சு பேரு சேந்துதான் அவளத் தூக்கி யாந்து போட்டாக. அவுந்து கெடந்த முடிய அள்ளிக் கெட்டக்கூட அவ ளுக்கு கை மேல ஒசரல. என்னமோ நரம்பு அந்து போச்சாம். பேச்சுக்கூட சரியா பேசமுடியல. என்னத்தக் கேட்டாலும் பேயறைஞ்சது கெணக்கா மலங்க மலங்க முழிக்கா. அவா மக முத்தும்மாளும் செயிலுக் குள்ள அட்பட்டு வந்தா. அவுகம்மய

**“ அங்கங்க தனித் தொகுதிகள்ளயே இவஞ்சாதிக்காரனுக நிக்க முடியாமெ கெடக்கயில... இவனுகளுக்கு எம்புட்டுக் கொழுப்புன்னா பொதுத் தொகுதில, அதுவும் நமக்குப் போட்டியா நிப்பானுக இப்பத் தெரியும்ல ”**

பாத்துப் பாத்து தெனமும் அழுகதான்.

''செயிலுக்குள்ளயே செத்துப் போயிருந்தாலும் தூக்கிப் பொதச் சுட்டு வந்துருக்கலாம். இப்ப இப்படி நடக்க மாட்டாமெ, பேசமாட்டாமெ கெடக்குறதப் பாக்கையில எப்பிடி இருந்த எங்கம்மெ இப்பிடிப் போனா ளேன்னு இருதயமே வெடிச்சிரும் போல இருக்குது. ஒரு சீக்கு நோக் குனு கெடந்து பிமோத்துரம் அன்னிப் போட்டாலும் மனசு ஆறிப் போகும். நல்லா இருந்தவளக் கொண்டு போயி அடுச்சு, இடுப்ப ஒடுச்சுப் போட்டுட் டானுகளே''.

அனந்தம்மா சித்திக்கு ஒடம்பு பூராங் கண்ணிப் போயிக் கெடந் துச்சு. அவா செவத்த ஒடம்புக்கு அடி வாங்குன எடம் பூராம் நீட்ட நீட்டாமா அடையாளங் கெடந்துச்சு. என்னன்னுதான் அம்புட்டு அடிகளத் தாங்குனாளோ...

மாராப்பெ எடுத்து உட்டுட்டு அழுதுகிட்டே சித்தி சொன்னா,

''ஊருக்குள்ள பிடிபட்டதல இருந்து சும்மா அடிதான். வண்டியில ஏத்தயில அடி; எறக்கறியல அடி; செயிலுக்குள்ள அடைக்கயில அடி; வெளில உடும்போது அடி. எப்பப் பார்த்தாலும் டம்டம்னு அடிதான். நம்மள மாதிரி ஏழபாழைகள அடிக்கு துக்குத்தான் அரசாங்கம் அவனு களுக்குச் சம்பள குடுக்குது... இவனு கள்ளாம் என்ன சாவு சாவானுகளோ. கடவுளே...'' அவா அழுகுறதப் பாத்துட்டு ஊருச்சனமே அழுதுச்சுக.

அவா பேரனும் கேவிக் கேவி அழுதுகிட்டு கேட்டான்,

''எதுக்கு பாட்டி இப்பிடி அடுச்சாக? எதுக்கு செயிலுக்குள்ள போட்டாக...?''

''எல்லாம் ஒங்க மாமெ தங்கராசு செஞ்ச வேலதான். எலக்சன்ல நின் னாம்ல. அதுக்குத்தான். அவனுக்கு எத்தன தவடப் படுச்சுப் படுச்சுச் சொன்னேன் கேட்டானா? மேகலக் குடி ஆளுகளுக்குப் போட்டியா வேண்டாண்டான்னு எத்தன பேரு சொன்னோம். கேட்டானா? இன் னைக்கு அவெம்பேருல கொலக்கேசு போட்டு உள்ள வச்சுட்டானுக''.

''நம்ம தேர்தல்ல நிக்கக் கூடா தாக்கும் பாட்டி? தேர்தல்ல நின்னா அடிப்பாகளாக்கும்?''

''நம்ம ஓட்டுமட்டுந்தான் போட னும் போல. நமக்கு ஓட்டுக் கேட்டு எலக்சன்ல நிக்கக் கூடாதுங் குறானுக.''.


மேகலக்குடிகாரனுகளுக்கு எம்புட்டுத் திமுருனா, அவனுக எகத்தாளமாச் சொன்னானுகளாம்.

''அங்கங்க தனித் தொகுதி கள்ளயே இவஞ்சாதிக்காரனுக நிக்க முடியாமெ கெடக்கயில... இவனு களுக்கு எம்புட்டுக் கொழுப்புன்னா பொதுத் தொகுதில, அதுவும் நமக் குப் போட்டியா நிப்பானுக இப்பத் தெரியும்ல''.

ராசாம்மாளுக்கு யோசிக்க யோசிக்க வெறித்தனமா வந்துச்சு. நம்மளப் பாத்தா எல்லாத்துக்கும் எகத்தாளமாகத்தான் இருக்குது.

இவ்வளவு மிருகத்தனமா அடுச்சு கொண்டு போயி அடச்சுட்டு, காவலர் உங்கள் நண்பர்னு வேற போர்டு மாட்டுக்கிட்டு இருக் கானுக... வெக்கங்கெட்ட பெயல்க. இப்பிடிக் கண்ட மாணிக்க நெனச்சுக் கிட்டே காறி அந்த போர்டுமெல துப்புனா. ஊருக்குப் போற வண்டியும் வந்துருச்சு. ■

## “காகம் கலைத்த கனவு”



*யார் பார்த்தார்*
*மான அவமானங்களை*
*பிச்சைதான் இன்னும்*

*வந்து விழும்*
*எச்சில் பருக்கைகளுக்கு*
*கையேந்திய படியே*
*கடந்து கொண்டிருக்கிறது*
*காலம்.*

*வலிகளின் சுருக்கம்*
*சருமங்கள் தோறும்..*

**-மகரந்தன்**

புகைப்படம் :
செந்தமிழினியன்

www.padippakam.com

# திரைப்படத் தமிழ்

முனைவர் த. பரசுராமன்

எழுத்து வழக்கு உள்ள எந்த மொழியாயினும் அந்த மொழியில் எழுத்து வழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் சிறிதளவாவது வேறு பாடு இருக்கும். ஆனால் இப்படிப்பட்ட எல்லா மொழிகளை யும் இரட்டை வழக்கு மொழிகள் எனச் சொல்வதில்லை. இரண்டு வழக்குகளுக்கும் இடையே நல்ல வேறுபாடும் அவற்றைப் பயன்படுத் தும் களங்களில் வேறுபாடும் இருந்தால் அப்போது அந்த மொழியை இரட்டை வழக்கு மொழி என்பார் கள். இங்க நாம் எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு எனச் சொல்வது எழுதப்படுவது மட்டுமே எழுத்து வழக்கு, பேசப்படுவது மட்டுமே பேச்சு வழக்கு என்ற பொருளில் இல்லை. எழுத்து வழக்கும் பேசப்படலாம், வழக்கும் எழுதப்படலாம். எடுத்துக்காட்டாக வகுப்பறையில் பேசும் பேச்சையும் கதைகளில் எழுதும் எழுத்தையும் (குறிப்பாக வட்டார இலக்கியங் களில்) சொல்லலாம். இந்த வழக்குகளை உயர் வழக்கு, இழிவழக்கு என்றும் செந்தமிழ், கொடுந்தமிழ் என்றும் இலக்கிய வழக்கு, மக்கள் வழக்கு என்றும்கூடச் சொல்வதுண்டு.

இந்திய மொழிகளில் தமிழ் இரட்டை வழக்கு மொழியாகத் தெளிவாக அறியப்பட்டிருக்கிறது. வகுப்பறையில், மேடைப் பேச்சில், கதை கட்டுரையில் எழுத்து வழக்கை யும் மற்ற இடங்களில் பேச்சு வழக்கையும் பயன்படுத்துவது மரபாக இருந்தது. இந்த அடிப்படை யில்தான் நாடகங்களிலும் திரைப் படங்களிலும் எழுத்து மொழி பயன்பட்டது. பேச்சு வழக்கு மக்கள் மொழி என்றும் எழுத்து வழக்கு ஆதிக்க சக்திகளின் கருவி, அது மக்களை அடிமைப்படுத்தி வைக்கவே செயல்புரிகிறது என்னும் சிந்தனை எழுந்தது. மேலும் நிறைய வாசகர்களைப் பெறவேண்டும். என்ற (வியாபார) நோக்கில் மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் மொழியை அல்லது அதற்கு நெருக்க மான மொழியை இதழ்கள் பயன் படுத்தத் தொடங்கின. வகுப்பறை யிலும் மாணவர்களுக்கும் புரிய வைக்கும் உத்தியாகப் பேச்சுத் தமிழ் மெல்ல மெல்லப் பயன்பாட்டுக்கு வரத் தொடங்கிவிட்டது வட்டார இலக்கியங்களில் அந்தந்த வட்டாரத் திற்கு உரிய மொழியை பயன் படுத்தத் தொடங்கியதால் பேச்சு மொழி முக்கிய இடம் பெற்றது விளைவு மக்கள் தொடர்பு சாதனங் கள் பெருமளவில் பேச்சு மொழியைக் கையாண்டன. திரைப் படங்களும் இதற்கு விதிவிலக்காக இல்லை.

திரைப்படங்கள் பேசாத படங்க ளாக இருந்த நிலையிலும் பேசத் தொடங்கியபோதும் பெரும்பாலும் நாடகங்களாக நடிக்கப்பட்ட புராணக் கதைகளே படங்களாயின. அவற்றில் பயன்பட்ட மொழியும் செந்தமிழ் நடையில் இருந்தது. புராணப்படங்கள் குறைந்து சமூகப் படங்கள் பெருகிய நிலையிலும் அவற்றின் மொழி மட்டும் பேச்சு மொழியாக மாறவில்லை. மாறாக இளங்கோவன், அண்ணா, கலைஞர் போன்றோரின் தமிழால் செந்தமிழ் செழித்தோங்கியது. இருப்பினும் நாளடைவில் மற்ற பாத்திரங்கள் செந்தமிழ் பேச நகைச்சுவை நடிகர் கள் மக்களைச் சிரிக்க வைக்க வேண் டும் என்பதற்காகப் பேச்சுத் தமிழில் பேசத் தொடங்கினர். குறிப்பாக வட்டார வழக்கில் பேசினர்.

நீண்ட வசனங்கள் தேவையா யிருந்த காலத்தில் அவற்றை மனப் பாடம் செய்வது தவிர்க்க முடியாதது. ஏனென்றால் அடிக்கடி நிறுத்தி நிறுத்திப் படம் எடுக்க இயலாது. படத்தை எடுத்துவிட்டுப் பிறகு பேச்சைச் சேர்த்துக் கொள்ளும் தொழில்நுட்பம் அப்போது இல்லை. அவ்வாறு நீண்ட வசனம் பேசுவதற்கு எழுந்துத் தமிழே எளிதாக இருக்கும். நூல்கள் அந்த நடையில் இருந்தாலும் பள்ளிக் கல்வியில் அந்த நடையே பயன்படுத்தப்பட்டதாலும் அதில் ஓரளவு பழக்கம் இருக்கும். அந்தப் பழக்கத்தின் அடிப்படையில் எழுத்து நடை வசனத்தை மனப்பாடம் செய்ய இயலும். ஆனால் பேச்சு வழக்கில் நீண்ட வசனங்கள் எழுதினால் அவற்றை மனப்பாடம் செய்வது எளிதல்ல சான்றாகப் பேசப்படுகிற நடிகர் தஞ்சாவூர்க்காரராக இருந்து வசனம் கோவைத் தமிழில் இருந் தால் அதை மனப்பாடம் செய்து பேசு கிறபோது அவருடைய தஞ்சைப் பேச்சுத் தமிழ் இடையில் வந்து தொல்லை தரும். இது வும்கூடத் திரைப்படத்தில் உயர் வழக்கு வெகுகாலம் பயன்பாட்டில் இருக்கக் காரணமாயிருந்திருக்கலாம்.

நாடகங்கள் பெரும்பாலும் மக்கள் நன்கு அறிந்த புராணக் கதைகளையும் பிற கதைகளையும் அடிப்படையாகக் கொண்டே நடத்த பட்டன. தெரிந்த கதை என்பதால் வசனம் தங்களுக்கு அந்நியமான எழுத்து வழக்கில் இருந்தாலும் பெரும்பாலான மக்கள் படிக்காதவர் களாக இருந்தும் அவர்களால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் திரைபடங்கள் எடுக்கத் தொடங்கிய வுடன் எவ்வளவு காலத்திற்குத்தான் மக்கள் அறிந்த கதைகளை பட மாக்கிக் கொண்டி ருக்க முடியும்? புதுப்புதுக் கதை களையே படமாக்கி னர். அப்போது எழுத்துநடையைப் பெரும்பாலான மக்கள் புரிந்து கொள் ளும் வகையில் எளிமைப் படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த எளிமையாக்கல் மெல்ல மெல்லப் பேச்சுத் தமிழை நோக்கித் திரைப் படங்களை இட்டுச் சென்றது.

முதலில் நகைச்சுவை நடிகர் களால் பேசப்பட்ட பேச்சு வழக்கு மெதுவாக மற்றவர்களாலும் பேசப் பட்டது. இந்தப் பேச்சு மொழியும் இரண்டு வகையானது. ஒன்று எல்லோராலும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய எந்த ஒரு வட்டாரத்திற்கும் மட்டும் சொந்தம் என்று சொல்லமுடியாத பொதுப் பேச்சு மொழி. மற்றொன்று குறிப் பிட்ட வட்டாரத்திற்கு உரிய வட்டார வழக்கு. இந்த வட்டார வழக்குகளில் சென்னைக் கீழ்த்தட்டு மக்களால் பேசப்படும் தமிழ் பெரிதும்



படிப்பகம்

www.padippakam.com

திரைப்படங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இன்னும் சொல்லப் போனால் இந்த வழக்கைச் சற்று மிகைப்படுத்திக்கூடப் பயன்படுத்தி கிறார்கள் எனச் சொல்லலாம். வட்டார வழக்கைச்சில பாத்திரங்கள் மட்டும் பயன்படுத்தாமல் அதையே முழுப் படத்திலும் பயன்படுத்திய படமாக 1957 இல் "மக்களைப் பெற்ற மகராசி" வெளிவந்தது. இதில் கொங்குநாட்டுத் தமிழ் பயன் படுத்தப்பட்டது. இன்னும் திரைப் படங்களில் அதிகம் பயன்படுத்தப் படுகின்ற வட்டார வழக்குகளுள் கொங்கு நாட்டுத் தமிழும் ஒன்றாக உள்ளது.

வட்டார வழக்கைப் பயன் படுத்தும்போது வசனம் எழுதுபவர் பெரும்பாலும் அந்த வட்டார வழக்கைப் பேசுபவராக இருப்பார். அல்லது அதை நன்கு அறிந்தவராக இருப்பார். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பகுதியை மட்டும் வேறு யாராவது ஒருவர் எழுதுவார். இவ்வாறு இருக்கத் திரைப்படத்தில் தான் அறியாத ஒரு வட்டார வழக்கைப் பயன்படுத்த வேறொரு எழுத்தாளரின் நூலைப் பயன் படுத்தியது 'அச்சமில்லை அச்சமில்லை' படத்தில் தான். கே. பாலசந்தர் இப்படத்தில் கி. ராஜநாராயணன் எழுதிய வட்டார வழக்குச் சொல் அகராதியை பயன்படுத்தி வசனம் அமைத்தார்.

திரைப்படத்தமிழ் எழுத்து நடையிலிருந்து பேச்சு நடையை நோக்கி நகன்றது ஒரு பக்கம் இருக்க மற்றொரு பக்கம் திரைபடங்களில் பேச்சின் தேவையே குறைந்து வருகிறது. முன்பே குறிப்பிட்டது போல் நாடகங்களே தொடக்கத்தில் திரைப் படங்களாயின. மக்களும் நாடகங் களைப் பார்த்துப் பழக்கப் பட்டிருந்தனர். திரைப்படத் தொழில் நுட்பமும் பெரிதாக வளர்ந்திருக்க வில்லை. எனவே நாடகங்களைப் படம் பிடித்து வெளியிட்டது போலவே திரைப்படங்கள் இருந்தன. இதனை நாடகங்களில் சொற்களாலேயே பெரிதும் கதையை நகர்த்திச் செல்ல வேண்டிய நிலையிலும் மக்களால் பெரிதும் வரவேற்கப் பட்ட நிலையில் நீண்ட வசனங்கள் தேவையாயிருந்தன. காலப் போக்கில் தொழில்நுட்பம் வளர்ந்தது. இதனால் இரவு, பகல் எந்நேரமும் படம் பிடிக்க முடிந்தது, எங்கு சென்றும் படம் பிடிக்க முடிந் தது. எனவே காட்சிகளுக்கு முக்கியத் துவம் கூடியது, நீண்ட வசனங்க ளுக்கு உரிய தேவை குறைந் தது. பல நேரங்களில் அவையே இடையூறாக வும் அமைந்தன. விளைவு திரைப் படங்களில் பேச்சின் பயன் பாடு குறைந்தது. இன்று மிகக் குறைந்த அளவு உரையாடல் உள்ள திரைப் படம் சிறந்த படமாகக் கருதப் படுகிறது.

●●●

## விதை நெல்



ஆசிரியர் : தடா நல்லரசன்
வெளியீட்டாளர்: தமிழியா வெளியீட்டகம்
5-ஏ. பகவதி அம்மன் கோயில் வீதி.
வில்வ நகர், கடலூர் 1.
விலை : ரூ. 40/-

**பாண்டியன்**

சமூக அக்கறை உள்ள படைப்பு கள் கலகத்தை விளைவிக்க தவறுவ தில்லை. படைப்பாளிகளின் அடிமன தில் கனன்று கிடக்கும் கோபம், ஆவே சம், ஆக்ரோஷம், எல்லாவற்றையும் உறிஞ்சுக் கொண்டு தலைக்காட்டுகிற படைப்புகள் ,அந்த படைப்பாளியை ஒரு போராளியாக அடையாளப் படுத்தி விடுகின்றன.

சிறைச்சாலை எண்ணற்ற எழுத் தாளர்களையும், வரலாற்று நாயகர்க ளையும் உருவாக்கிய களம், சமூக அவ லங்களை உடைத்தெறிய தடைகளை தாண்டிட வீறு கொள்ளும் போராளிக ளுக்கு சிறைக் கம்பி கள் புதிய பரிமா ணத்தை தேடித் தருகின்றன.

சிறை வாழ்க்கையின் போது தனது எழுச்சி மிகு கருத்துக்களை கவிதைக ளின் வாயிலாக வெளிப்படுத்திய தடா. நல்லரசன், அவற்றை "விதை நெல்" லாக வாழ்க்கைக் களத்தில் விதைக்க வந்திருக்கிறார். ஒரு போராளியாக மட் டுமல்லாமல் ஒரு கவிஞராகவும் கூட .

'ஒருகுறுகிய கூட்டின்
குழிக்குள் பதுங்கிக் கொண்டு
அரசு இயந்திரத்தின் அடிமையாக
நான் இருந்திருக்கவேண்டும்.
இது தானம்மா உன் ஆசை?'

அரசாங்க வேலை குறித்து துல்லிய மாக மதிப்பீட்டை வெளிப்படுத்து கின்றன இந்த வரிகள்,

இதைபோலவே, அரசு அதிகாரிக ளின் சொரணையை சோதிக்கிறது "எச் சரிக்கை"சமூகம்,பெண்ணியம் மட்டு மல்லாது சுற்று சூழலின் மீதான தனக்குள்ள அக்கறையையும் பதிவு செய்துள்ளார்.

'சாதிகள் சொல்லி
சண்டைகள் மூட்டி
எரியும் தீயினில்
குருதி கொப்பளிக்க
கொடுமைகளை அனுபவித்து
வெட்டுப்பட்டு வீழவும்
சாதிக் குட்டுப்பட்டு வாழவும்
இனியும் என்னால் முடியாது.'

சாதிச் சாக்கடையில் குதூகலமாக நெளியும் அற்ப புழுக்களுக்கு இந்த கவிதை சவுக்கடி. முற்போக்கு இலக்கிய தடங்களை பாழ்படுத்தும் 'சாதிய கவி'க் களுக்கு தடா நல்லரசனின் இந்த பதிவு வெட்கத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி.

'கருத்த இருட்டறைக்குள்
இதயம் மூச்சுமுட்டும்
கம்பிக்குள் கிடந்தும்
நெஞ்சம் கவிதை கட்டும்'

தூக்கம் தொலைத்த ஒரு இரவில் உருவான எண்ணத்தின் பிரதிபலிப்பே இது. மரம் சும்மா இருந்தாலும் காற்று அதை விடுவதில்லை என்ற மாமேதை மாவோ கூற்றுப்படி தடா நல்லரசன் உணர்ச்சி பிழம்பாய் கொப்பளிக்கி றார்.விதை நெல் வாயிலாக பதிவு செய் யப்பட்டது புதுக்கவிதைகளா? மரபுக விதைகளா? என்று ஆராய்ச்சி செய்ய முடியாத அளவிற்கு ஒரு புரட்சிகார னின் எண்ணங்களின் வெளிப்பாடாக அமைந்துள்ளன கவிதைகள்..

புரியாத வார்த்தைகளில், தொக்கி நிற்கும் வாக்கியங்களில் புதிய இசங் கள் பல பேசும் படைப்பாளிகள் சிலரின் மத்தியில் தடா நல்லரசனின் விதை நெல் பல்லாயிரக் கணக்கான ஆரோக்கியமான 'நெல் மணி'களை குவிக்க போவது உறுதி. ●

www.padippakam.com

# "சுவரில் சாய்ந்து கொண்டு தலைவிரி கோலமாக இருந்தார்"



**செஞ்சியிலுள்ள சக்கராபுரம் காலனியைச் சேர்ந்தவர் ஏகாம்பரம். தலித் சமூகத்தை சேர்ந்த ஏகாம்பரம் தன் சமூகப் பெண் ஒருவரை காதலித்ததால் சந்தித்த கொடுமைகள் ஏராளம். செஞ்சி சிறையில் பாலியல் கொடுமைக்கு உள்ளான ரீட்டாமேரி வழக்கில் முக்கிய சாட்சி. இதற்காக கடும் தாக்குதலுக்கு உள்ளாகி உயிர் தப்பியவர். அவரது வாக்குமூலம்...**

வணக்கம். நான் தற்சமயம் என் சகோதரி சுமதி க/பெ.ஜோதி வீட்டில் இருந்து வருகிறேன். மேற்படி பொருள் குறித்து பார்வையில் குறிப்பிட்ட புகார் மனுக்களின் தொடர்ச்சியாகவும், எனக்கு நீதி கிடைக்கும் பொருட்டு,எனக்கு இழைக்கப்பட்ட புகார் மனுக்களின் கொடுமைகள் குறித்து விரிவாக இந்தப் புகாரை தங்களுக்கு எழுதவேண்டியுள்ளது.

என்னுடைய சொந்த ஊர் செஞ்சி அருகில் உள்ள செல்லப்பிராட்டி கிராமம் ஆகும். 8வது வகுப்பு வரை படித்து வந்த நான் சென்னை திருவல்லிக்கேணியில் வசித்து வந்த என்னுடைய தாய் மாமன் சுப்ரமணி என்பவரின் மேற்பார்வையில் 12 ஆம் வகுப்பு வரை சென்னையிலேயே படித்து வந்தேன். பின்பு ஜாம்பஜார் மார்க்கெட்டில் என் மாமாவோடு பழ வியாபாரம் செய்து வந்தேன். அவ்வப்போது நான் செஞ்சியில் இருக்கும் என் மூத்த சகோதரி வீட்டிற்கு வந்து செல்வது வழக்கம். சென்ற ஆண்டு நவம்பர் மாதம் என் தாயார் இறந்த சமயத்தில் நான் செஞ்சி ரோட்டில் உள்ள ஏ. இராமு என்பவரின் பூக்கடையில் வேலை பார்த்து வந்தேன். அதன் அருகில் என்னுடன் இளமையில் பயின்ற சரவணன் என்பவர் சலூன் கடை வைத்துள்ளார். நான் அடிக்கடி அங்கு போய் வரும்போது தான் சிவா என் வீட்டிற்கு வந்து அவசரமாக வேலூர் செல்ல பணம் தேவைப்படுவதாகவும் அதற்காக அவன் வைத்திருந்த டி.வி.எஸ்.50 வாகனத்தை என்னிடம் கொடுத்து விட்டு என்னிடம் இருந்து ரூ.1200/-ஐ கடனாக பெற்றுச் சென்றார். ஆனால் இதை அறிந்த என் சகோதரி சுமதி என்பவர் ஏன் இந்த வண்டியை வாங்கினாய் என்று என்னை திட்டினார்கள். அதற்கு நான் வண்டியைக் கொடுத்த சிவா நல்லவன் தான் என்றும், விரைவிலேயே பணத்தைக் கொடுத்துவிட்டு வண்டியை பெற்றுக் கொள்வான் என்றும் கூறினேன்.

பின்பு மேற்படி டி.வி.எஸ் 50 வண்டியை அக்கா வீட்டில் விட்டு விட்டு சென்னை சென்று என் மாமா சுப்ரமணியோடு பழ வியாபாரம் செய்து வந்தேன். சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு சாலை விபத்தில் என் மாமா இறந்து விட்டார். பின்பு நான் சொந்தமாக ஜாம்பஜார் என்கிற அதே இடத்தில் என் அண்ணன் ஏழுமலை என்பவரோடு பழவியாபாரம் செய்து வந்தேன். சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்பு எனக்கு குடுமையான வயிற்று வலி வந்தது. அப்போது நான் செஞ்சிக்கு வந்து என்னுடைய அக்கா வீட்டில் ஒரு வாரம் தங்கி நாட்டு வைத்தியர் ஒருவரிடம் மருந்து சாப்பிட்டு வந்தேன். அப்போது தான் என் அக்கா வீட்டிற்கு அடுத்துள்ள வீட்டில் குடியிருக்கும் அசோகன் - லட்சுமி தம்பதியரின் மூத்த மகள் சுதா - வயது 18 என்பவருடன் அறிமுகம் ஆனேன். ஒரு நாள் சுதாவின் சித்தி மகளும் அவர்கள் வீட்டிலேயே தங்கியிருப்பவருமான கனிமொழி - வயது 12 என்னிடம் வந்து என் அக்கா உங்ககிட்ட பேச வேண்டும்... என் அக்கா உங்கள விரும்புறாங்க, என்று கூறினாள். அந்த சமயத்தில் அவர்கள் வீட்டில் பெரியவர்கள் யாரும் இல்லை. நான் போய் பேசினேன். ஒருவருக்கொருவர் பெயரைக் கேட்டுக்கொண்டோம். என்ன படித்திருக்கிறோம் என்பதையும் கேட்டுத் தெரிந்து கொண்டோம். அடுத்த நாள் மேற்படி சுதா , அவளுடைய இரு தம்பிகள் கனிமொழி ஆகிய நான்கு பேருடன் நான் சினிமாவுக்கு போய் வந்தேன். திரையரங்கில் வைத்து சுதா என்னை விரும்புவதாக கூறினாள். நானும் பதிலுக்கு அவளை காதலிப்பதாக கூறினேன். அடுத்த நாள் வெளியே போய் என்னிடம் தனியாக பேசவேண்டும் என்று சுதா கூறினாள். அதன்படி நாங்கள் இருவரும் செஞ்சிக்கு அருகே உள்ள காரிய மங்கலம் போனோம். அப்போது சுதா தன் விருப்பத்திற்கு மாறாக தனக்கும் தன் உறவினர் பையன் பொன்னுசாமி என்பவருக்கும் கல்யாணம் செய்து வைக்க ஏற்பாடு நடக்கிறது என்றும், எனவே தன்னை விரைவில் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்று என்னிடம் சொன்னாள். நான் எப்படியும் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சுதாவிடம் உறுதி அளித்தேன்.

ஒரு வாரம் கழித்து நான் பழ வியாபாரத்திற்காக சென்னை சென்று விட்டேன். நான் சென்னை சென்று ஒரு வாரத்திற்குள்ளாகவே மேற்படி சுதா என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உடனே செஞ்சி வந்து தன்னை அழைத்துக் கொண்டு செல்லும்படி கூறினாள். மேலும் அவள் கூறும்போது செஞ்சிக்கு வருகையில் வீட்டிற்கு வராமல் லாட்ஜில் தங்கும்படியும், மறுநாள் தன்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி எதிரில் உள்ள பிள்ளையார் கோயிலில் 10 மணிக்கு வந்து சந்திக்கும்படியும் சொன்னாள். நானும் அன்று பழக்கடையில் தனசேகர் என்பவரிடம் கூறிவிட்டு, அன்று இரவே சென்னையில் இருந்து புறப்பட்டு மறுநாள் 23.7.2001 விடியற்காலை செஞ்சி வந்து ஆர்.கே.ஜி. லாட்ஜில் அறை எடுத்து தங்கினேன். அன்று காலை 10.30 மணிக்கு மேற்படி பிள்ளையார் கோயிலுக்கு போனேன். அப்போது சுதா, பெயர் தெரியாத ஆனால் அடையாளம் தெரிந்த ஒரு பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்தாள். நான் சென்றதும் அந்த பெண் போய் விட்டாள். சுதா என்னை காதலிப்பது அவள் பெற்றோர்க்கு தெரியவந்து அவளைத் திட்டியதாகவும், அதனால் வெறுப்புற்ற சுதா தனது காலில் தானே சூடு போட்டுக் கொண்டதாகவும்கூறி,காலில் அந்த இடத்தையும் என்னிடம் காண்பித்தாள். எனக்கு வேண்டிய முனியன் வயது 25 என்பவரை அனுப்பி காலில் உள்ள தீக்காயத்திற்கு மருந்து வாங்கி கொடுத்தேன். பின்பு மறுநாள் (24.7.2001) காலை 11.00 அளவில் சுதா கே.ஆர்.ஜி. லாட்ஜில் நான் தங்கியிருந்த அறைக்கு வந்தாள். வந்தவுடன்


படிப்பகம்

www.padippakam.com

தன்னை அழைத்துக்கொண்டு உடனே சென்னைக்குப் போகும்படி கூறினாள். இருவரும் அன்று பகல் சுமார் 12 மணி அளவில் செஞ்சியிலிருந்து சென்னைக்கு புறப்பட்டுச் சென்றோம்.

அன்று மாலை பழ வியாபாரம் மூலம் பழக்கமான குதிரை உரிமையாளர் சுப்ரமணி - வயது சுமார் 28 என்பவரை கடற்கரைக்கு போய் சந்தித்து தங்குவதற்கு வீடு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறினேன். அவர் உதவியோடு நாங்கள் இருவரும் மத்திய சிறைச்சாலை அருகில் உள்ள கல்லறை என்ற ஊரில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தோம். பின்பு 26.07.2001 அன்று ( ஆடி மாதம் 10 ஆம் நாள்) மாலை 6.00 மணி அளவில் வடபழனி சென்று அங்கு வெளியே நின்று கொண்டிருந்த 50 வயது மதிக்கத்தக்க ஒரு ஐயரிடம் நாங்கள் வெளியூரில் இருந்து வந்திருக்கிறோம் ; எங்களுக்கு கல்யாணம் செய்து வையுங்கள் என்று கேட்டோம். அவர் முதலில் முடியாது என்று சொன்னார் பின்பு அவரிடம் ரூ.250/- கொடுத்து நாங்கள் ஏற்கனவே வைத்திருந்த மெட்டியையும் தாலிக்கயிற்றையும் எடுத்துக் கொடுத்தார். நான் சுதாவுடன் கோயிலுக்குள் சென்று ஓரமாக ஒரு இடத்தில் வைத்து கழுத்தில் தாலிக் கட்டினேன்.

அன்று இரவு, தங்குவதற்காக வளசரவாக்கத்தில் கொத்தனார் வேலை செய்யும் என் நண்பன் முரளி த/பெ.கன்னையன் என்பவரை பார்க்கப் போனோம். சரியான முகவரி இல்லாததால் முரளியை பார்க்க முடியவில்லை. பின்பு வளசரவாக்கம் காமாட்சி நகரில் உள்ள ஒரு தலைவரை சந்தித்தோம். அவர் உதவியில் அன்று இரவு அவர் வீட்டுக்கு எதிரே உள்ள ஒரு புதிய வீட்டில் ஒரு அறையில் தங்கினோம். என்னுடைய கஷ்ட நிலையை நன்கு புரிந்து கொண்ட மேற்படி தலைவர் எனக்கு கட்டிட வேலைக் கிடைக்க உதவியதோடு, அதே இடத்தில் 10 நாட்கள் தங்கியிருக்கவும் உதவினார். வேலைக்கு போனதில் கிடைத்த சம்பளம் மற்றும் கையில் இருந்த பணத்தை வைத்து மதுரவாயில் ஏரிக்கரையில் தனலெட்சுமி நகர், 8வது தெருவில் 1 ஆம் நம்பர் வீட்டில் நாங்கள் இருவரும் குடியிருந்தோம். தொடர்ந்து கட்டிட வேலை செய்தது என் உடம்புக்கு ஒத்து வராததால் டிபன் வியாபாரம் செய்ய ஆரம்பித்தேன். காலையில் வீட்டில் இருவரும் டிபன் தயாரித்து பார்சல் பண்ணிக் கொள்வோம். பின்பு நான் அந்த பார்சல்களை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு எடுத்துச் சென்று வியாபாரம் செய்வேன். பிற்பகலில் ஊதுவத்தி வியாபாரம் செய்து வந்தேன். இவ்வாறாக நானும் என் மனைவி சுதாவும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம்.

என் மனைவிக்கு உடம்பெல்லாம் படைப்படையாக இருந்ததோடு அதில் அரிப்பும் இருந்தது. நான் வளசரவாக்கத்தில் உள்ள கவிதா பாலாஜி மருத்துமனையில் உள்ள பெண் டாக்டரிடம் என் மனைவி சுதாவை அழைத்துக் கொண்டு போய் மருத்துவம் பார்த்தேன். மூன்றாவது முறையாக மருத்துவமனை சென்று வந்த போது தான் என் மனைவி கர்ப்பமாக இருக்கிறாள் என்று டாக்டர் சொன்னதாக என்னிடம் கூறினாள். நான் ஒரு குழந்தைக்கு தகப்பனாக போகிறேன் என்று மகிழ்ச்சியடைந் தேன். என் மனைவியும் நானும் ரொம்பவும் மகிழ்ச்சி அடைந்தோம்.

மழைக்காலம் ஆரம்பித்ததால் டிபன் வியாபாரம் குறைந்து விட்டது. எனவே நான் கோயம்பேடு மார்க்கெட்டில் பாண்டுரெங்கன் என்பவருடைய பழக்கடையில் வேலைக்குச் சேர்ந்தேன். நான் தங்கியிருக்கும் இடம் தெரிந்து என்னுடைய தம்பி நாராயணன் வயது-21, தனக்குத் தெரிந்த முஸ்லீம் குடும்பத்தினருடன் என்னுடைய வீட்டிற்கு இரண்டு முறை வந்து போனார்கள். எனக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமான, கொத்தனார் வேலை செய்து வரும் முரளி என்பவரும் என் வீட்டிற்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வந்து போவார். நானும் என் மனைவியும் எங்கள் வீட்டிற்கு வந்து போகிறவர்கள் வீட்டிற்கு சென்று வந்திருக்கிறோம்.

எனக்கும்,சுதாவுக்கும் வடபழனி கோயிலில் திருமணம் நடந்தவுடனேயே, வெளியே வந்து சுதா தன் தாயாருக்கு 04145-23412 என்ற எண்ணுள்ள தொலைபேசியில் தொடர்புக் கொண்டு எங்கள் திருமணத்தைப் பற்றி தெரிவித்தார். பின்பு வளசரவாக்கத்தில் இருக்கும்போது மூன்று முறையும், மதுவாயில் வந்த பின்பு பலமுறையும் தன் தாயாருக்கு தொலைபேசியில் பேசியிருக்கிறாள். ஒவ்வொரு முறையும் சுதாவின் அம்மா, நாங்கள்தங்கியிருக்கும் முகவரியை கேட்டபோது, எங்களை பிரித்து விடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக எங்கள் முகவரியை சுதா தன் தாயாருக்கு தெரிவிக்கவில்லை. நானும் கூட ஒருமுறை தொலைபேசி மூலம் சுதாவின் சித்தி மகள் கனிமொழியோடு பேசியிருக்கிறேன். ஒருமுறை என்மனைவி சுதா, அவளுடைய பெற்றோருக்கு அவள் எழுதுவது போல் ஒரு கடிதமும், என்னுடைய அக்கா வீட்டிற்கு நான் எழுதுவது போல ஒரு கடிதமும் எழுதி அனுப்பினாள்.

26.10.2001 அன்று இரவு சுமார் 12 மணியளவில் செஞ்சியின் அப்போதைய குற்றப்பிரிவு உதவி ஆய்வாளர் செல்வராஜ், தலைமைக் காவலர் லோகநாதன் மற்றும் நடராசன் ஆகிய மூவரும் என் மனைவியின் அப்பா அசோகன் மற்றும் அவளின் சித்தப்பக்களான காசி, இருசன் ஆகியோருடன் ஒரு டாடா சுமோ வண்டியில் சென்னைக்கு எங்கள் இருப்பிடம் தேடி வந்தனர். உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் என் வீட்டில் புகுந்து லட்டியாலும் கையாலும் என்னை மிரட்டியும் காலால் எட்டி உதைத்தும் அடித்தனர். தலைமை க் காவலர் என்னை "திருட்டு தேவடியா நாயே பெண்ணை கடத்திட்டு வந் தியா?" என்று திட்டினார். அப்போது என் மனைவி "நான் விருப்பப் பட்டுத்தான் அவரோடு வந்தேன் .. அவரை ஏன் அடிக்கிறீர்கள் " என்று கூறிக் கொண்டே போலீசாரை தடுத் தாள். உடனே லோகநாதன் என் மனைவியை பார்த்து "அப்பனை விட உனக்கு வந்தவன் தான் ரொம்ப முக்கிய ஆளாயிட்டானா?" என்று சொல்லிக் கொண்டே கையால் சுதாவின் கன்னத்தில் ஓங்கி ஒரு அடி அடித்தார். வெளியே வந்து எட்டிப்பார்த்த எதிர்த்த வீட்டுக்கார பெண்ணை லோகநாதன் அச்சுறுத்தி அசிங்கமாக திட்டினார். பின்பு என்னை மேற்படி லோகநாதன் இழுத்துக் கொண்டு போய் டாடா சுமோ வண்டியின் பின்புறம் ஏற்றினார். நான் பயத்தில் எதுவும் கூறவில்லை. சுதாவின் அப்பாவும் சித்தப்பாமார்களும் என் வீட்டு பண்ட பாத்திரங்கள், புதிதாக வாங்கிய மிக்சி, மின் விசிறி மற்றும் துணிமணிகள் எல்லாவற்றையும் வண்டியின் பின்புறம் ஏற்றினார்கள். உதவி ஆய்வாளர் , ஒட்டுநர் அருகே உள்ள இருக்கையிலும், அடுத்தாற்போல மத்தியில் உள்ள இருக்கையில் காவலர் நடராசன்,மேற்படி காசி, அதை அடுத்து சுதா, அடுத்து அவள் அப்பா

www.padippakam.com

ஆகிய நால்வரும் அமர்ந்திருந்தனர். வண்டி தாம்பரம் வரும்வரையிலும் லோகநாதன் என்பவர் நான் எதுவரையில் படித்திருக்கிறேன் என்றும், மேலும் இதற்கு முன்பு பெண்களை கடத்தி வித்திருக்கிறாயா என்றும் கேட்டுக் கொண்டு வந்தார்.

தாம்பரம் வந்ததும் வண்டியை நிறுத்திய ஓட்டுநர், "தாம்பரம் வந்துவிட்டது" என்று கூறினார். உடனே வண்டியிலிருந்த உதவி ஆய் [illegible] மேற்படி அசோகன் மற்றும் காசி ஆகிய நான்கு பேரும் சாலையின் வலப்புறம் ஒரு மதுக்கடைக்குச் சென்றனர். சுமார் 1/2 மணி நேரம் கழித்து நான்கு பேரும் மீண்டும் வண்டிக்குள் வந்து ஏறினர். என் அருகில் லோகநாதன் ஒரு குவாட்டர் பிராந்தி பாட்டில் மற்றும் ஒரு பாக்கெட் தண்ணீருடன் அமர்ந்தார். வந்து அமர்ந்தவுடன், லோகநாதன் என் முதுகில் ஓங்கி கையால் அடித்தார். [illegible] வண்டி போய்க் கொண்டிருக்கும் போதே முன் இருக்கையில் ஓட்டுநர் அருகில் இருந்த ஆய்வாளர் என்னை திருப்பி பார்த்துக் கொண்டு அந்த பொண்ணு ஐம்பதாயிரம் பணம், 15 பவுன் நகை கொண்டு வந்ததா... அத என்ன பண்ணினாய் என்று கேட்டார். அப்படி எதுவும் எடுத்து வரவில்லை; வேண்டுமானால் அவளையே கேளுங்கள் என்ற சொன்னேன். இதற்கு சுதா இவர்கள் பொய் சொல்றாங்க நான் காசு எதுவும் எடுத்து வரவில்லை; எல்லாம் அவருடைய பணம் தான் நான் கம்மல் மற்றும் ஒரு மோதிரத்தோடு தான் வந்தேன். என்று கூறினாள். அப்படியானால் அவையெங்கே என்று உதவி ஆய்வாளர் கேட்கவும், தனக்கு உடல்நலமில்லாது இருந்த போது அவற்றை அடகு வைத்தாக சுதா கூறினாள்.

தாம்பரத்தை தாண்டி கொஞ்ச தூரம் வந்த பின்பு சுதாவின் சித்தப்பா காசி என்பவர் என் மனைவியிடம் கழுத்தில் இருந்த தாலிக்கயிற்றை கழற்றச் சொன்னார். அதற்கு அவள் மறுக்கவே காசி தன்கையால் தாலிக் கயிற்றை கழட்ட முயன்றார். என் மனைவி அதை தடுக்க முற்பட்ட போது பின்னால் இருந்த அவளுடைய மற்றொரு சித்தப்பா இருசன் என் மனைவியின் கையைப்பிடித்துக் கொள்ள காசி தாலிக்கயிற்றை அறுத்து விட்டார். முன்னால் உட்கார்ந்து இருந்த செல்வராஜ், லோகநாதனைப் பார்த்து, 'அந்த தேவடியாபயல இரண்டு போடுங்க' என்று சொன்னதும் லோகநாதன் என்னை தன் கையால் முதுகில் ஓங்கி ஓங்கி அடித்தார். நான் அடிக்காதீங்க ஐயா என்று கையெடுத்து கும்பிட்டேன். உடனே சுதா பின்பக்கம் திரும்பி பார்த்தாள். உடனே மேற்படி செல்வராஜ் இந்த தேவடியாள இரண்டு போடனும்.. இவ தான் ஓழ்வெறியெடுத்து அவன் கூட ஓடிபோயிட்டா ... வெறி ஏறிப்போன நாய்மாறி இருக்கிறா பாருமென்று சொன்னார். இதைக் கேட்ட சுதாவின் அப்பா தன் கைகளால் முகத்தை மறைத்துக் கொண்டு ஓவென்று கதறி அழுதார். உடனே செல்வ ராஜ் சுதாவின் அப்பாவைப் பார்த்து ஏய் அசோகா .. இப்படி அழுதால் நான் இறங்கி பஸ்ஸில் வருகிறேன். செஞ்சியில் வந்து பார்த்துக் கொள்கிறேன் என்றார். மேலும் அவர் கூறுகையில், நான் அவனையும் அடிப்பேன்இவளையும் திட்டுவேன்.. சம்மதமா இருந்தா வண்டியில வருகிறேன்.. இல்லை எனில் இறங்கி விடுகிறேன் என்றார். பின்பு மேற்படி அசோகன் அழுகையை நிறுத்திக் கொண்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் வண்டி செங்கல்பட்டு நகருக்குள் வந்தது. அங்கு ஒரு இசுலாமியர் வீட்டுக்குச் சென்று செஞ்சி மஸ்தான் பாயிக்கு சொந்தமான ஒருவர் பற்றி விசாரித்தனர். பின்பு வண்டியை பிரதான சாலையில் திண்டிவனம் நோக்கி ஓட்டிவந்தனர். ஓட்டுநரைத் தவிர கிட்டத்தட்ட எல்லாருமே தூங்கிக் கொண்டு தான் வந்தனர்.

நாட்டார்மங்கலம் அருகே ஓட்டுநர் வண்டியை நிறுத்திவிட்டு இனிமேல் 'எந்தப் பக்கம் போகவேண்டும்' என உதவி ஆய்வாளரிடம் கேட்டார். அதற்கு அவர் இடதுபுறம் முடையூர் ரோட்டில் போகும்படி சொன்னார். இடதுபுறம் அந்த ரோட்டில் சுமார் 4 கி.மீ சென்ற பின்பு ஒரு கிராமத்திற்குள் வண்டி சென்று அங்குள்ள தண்ணீர் டேங்க் அருகே நிறுத்தினர். வண்டியிலிருந்து மேற்படி லோகநாதன், நடராசன் ஆகிய இருவர் மட்டும் இறங்கி பேட்டரியுடன் எங்கேயோ சென்றனர். சுமார் 1 மணி நேரம் கழித்துமேற்படி இருவரும் இரண்டு டி.வி.எஸ்.50 வண்டிகளை தள்ளிக் கொண்டு வந்து வண்டி முன்பு நிற்க வைத்தனர். அப்போது அங்கு முன்னாள் ஊர்த் தலைவரும் வந்தார். அவரிடம் உதவி ஆய்வாளர் இந்த இரண்டு வண்டிகளையும் காலையில் போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு வந்து விடவேண்டும் என்ற கூறினார். அதற்கு அந்த தலைவரும் ஒப்புக் கொண்டார். அப்போது உதவி ஆய்வாளர் என்னைபார்த்து அந்த இரண்டு வண்டிகளை நீ தான் திருடினாய் என்று வழக்கு போடப் போகிறேன் என்று கூறினார். அதற்கு நான் அந்த வண்டி பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று கூறினேன். உடனே வண்டிக்குள் இருந்த தலைமைக்காவலர் லோகநாதன், 'திருட்டு பறத்தேவடியா நாயே' என்று திட்டிக் கொண்டே செருப்புக் காலால் உதைத்தார். காலை 7.00 மணி அளவில் செஞ்சி காவல் நிலையம் வந்தோம். என்னை மட்டும் காவல் நிலையத்திற்குள் அழைத்துச் சென்றார்கள்.

பின்பு காவல் நிலையத்திற்கு பின்புறம் உள்ள ஒரு தூணில் இரு கைகளையும் சேர்த்து கைவிலங்கிட்டு உட்கார வைத்தனர். நடராசன் என்ற காவலர் என் கால் முட்டிகள் மீது ஏறி நின்றார். தலைமைக் காவலர் லோகநாதன் லட்டியால் என் பாதத்தில் சரமாரியாக அடித்தார். அதில் லட்டி உடைந்து போனது. வலி தாங்க முடியாமல் நான் கத்தினேன். கத்தி அழுதேன். உடனே என் கை விலங்கை அவிழ்ந்து விட்டு உதவி ஆய்வாளர் என் கையை தூக்கச் சொல்லி இரண்டு பக்கம் தொடையிலும் லட்டியால் ஓங்கி ஓங்கி அடித்தார். கையால் தடுத்தபோது கையிலும் அடி விழுந்தது. அடித் தாங்காமல் நான் மயங்கி விழுந்தேன். பிறகு அங்கு வந்த என் மனைவியின் தகப்பனார் என் முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பினார். குடிக்க தண்ணீர் கொடுத்தார். அவர் வாங்கி வந்த இட்லியை என்னால் சாப்பிட முடியவில்லை.

அன்று காலை 9.00 மணி அளவில் உதவி ஆய்வாளர் செல்வராஜ் மற்றும் காவலர் நடராசன் என்னை கையில் விலங்கிட்டுக் கொண்டு ஒரு ஆட்டோவில் ஏற்றி ஏ.எஸ்.பி. அலுவலகத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு என் மனைவி சுதா, அவள் பெற்றோர்கள், சித்தப்பா காசி, மேற்படி பொன்னுசாமி ஆகியோர் ஒரு ஆட்டோவில் என் பின்னாலேயே வந்து சேர்ந்தனர். ஏ.எஸ்.பி. அறைக்குள் செல்லும்போதுமட்டும் என் கை விலங்கை கழட்டினர். முதலில் ஏ.எஸ்.பி., சுதாவின் அப்பாவான அசோகனை கூப்பிட்டு விசாரித்தார். அவர் மேற்படி அசோகன் என்பவரைப் பார்த்து 'பொண்ணும் பையனும் வந்து விட்டார்கள். சமாதானமா போறீங்களா' என்ற கேட்டார். அதற்கு அவர், தம்பி என்ன சொல்கிறானோ


படிப்பகம்

www.padippakam.com

அப்படித்தான் செய்யவேண்டும் என்றார். உடனே ஏ.எஸ்.பி அவர்களிடம் அவனை ஆறுமாதமோ அல்லது ஒரு வருஷமோ உள்ள உட்கார வைக்கணும்; இப்ப செலவு ஆனதுக்கு மேல் இன்னும் எவ்வளவு வேணும் என்றாலும் பார்த்துக் கொள்கிறேன்; அவனை வெளியே விடாதிங்க .. அவனுக்கு அவன் அக்கா தான் வருவாள்; வேறு யாரும் வரமாட்டார்கள் என்று கூறினார். பின்பு என் மனைவி சுதாவின் அம்மா லட்சுமியை கூப்பிட்டு ஏ.எஸ்.பி. விசாரித்தார். அந்த அம்மாவும் அவனை கட்டாயம் உள்ளே வைக்கவேண்டும் என்று ஏ.எஸ்.பியிடம் கூறினார். பின்பு என் மனைவி சுதாவை கூப்பிட்டு ஏ.எஸ்.பி. விசாரித்தார். பின்பு அவர் சுதாவிடம் எத்தனை மாதம் குடும்பம் இருந்தீங்க... எந்த ஊர்ல இருந்தீங்க என்றெல்லாம் விசாரித்தார். பின்பு அவர் சுதாவிடம் 'நீ கர்ப்பமா இருக்கிறாயா' என்று கேட்டார். அதற்கு அவள் 'ஆம்' என்று கூறினாள். அடுத்து அவ்வளவு பேர் முன்னிலையிலும் ஏ.எஸ்.பி. என் மனைவியை பார்த்து ஒரு நாளைக்கு உன்னை அவன் எத்தனை தடவை ஒப்பான், என்று பச்சையாக கேட்டார். அதற்கு அவள் பதில் ஏதும் கூறுவில்லை. பின்பு ஏ.எஸ்.பி. அவளை மிரட்டும் தொனியில் 'எத்தனை தடவை போவான்' என்று என்று கேட்டார். '4 தடவை போவானா? 3 தடவை போவனா' என்று அவர் கேட்டபோது அவள் லேசாக ஆட்டினாள். மேலும் அவர் விசாரிக்கையில் 'நீ அவனிடம் விருப்பப்பட்டு போனீயா அல்லது விருப்பம் இல்லாமல் போனீயா' என்று கேட்டார். அதிற்கு அந்தப் பெண் என்னை வலுக்கட்டாயம் பண்ணிக் கூட்டிப்போனான் என்று கூறினாள். பிறகு ஏ.எஸ்.பி. என்னை கூப்பிட்டு விசாரித்தார். அவர் விசாரிக்கையில் அந்தப் பெண்ணை வலுக்கட்டாயப்படுத்தி கூட்டிக்கொண்டு போனாயா? அல்லது விருப்பப்பட்டு கூட்டிக் கொண்டு போனாயா? என்று கேட்டதற்கு நாங்கள் இருவரும் விருப்பப் பட்டுதான் போனோம் என்று கூறினேன். பிறகு என்னை பார்த்து அவர் அந்த பெண்ணிடம், 'ஒரு நாள் எத்தனை முறை படுப்ப' என்று கேட்டார். எப்பாவது ஒரு முறை என்று கூறினேன். அவளே சொல்கிறாள் 'ஒரு நாளைக்கு மூன்று முறை' என்று... நீ என்னடா பொய் சொல்ற என்று என்னை மிரட்டவும் நான் பயந்து கொண்டு 'ஆம்' என்று கூறினேன். பின்பு சுதாவை மீண்டும் கூப்பிட்டு என் முன்னால் விசாரித்தார். அப்போதும் அவள் என்னை வலுக்கட்டாயமாகத் தான் கூட்டிக்கொண்டு போனார் என்று கூறவே, ஏ.எஸ்.பி. உதவி ஆய்வாளர் செல்வராஜ் என்பவரை கூப்பிட்டு இவன கொண்டு போய் நல்ல கவனிங்க என்று கூறினார்.

பின்பு என்னை மீண்டும் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து அன்று காலையில் சித்திரவதை செய்து அடித்தது போல என்னைக் கட்டி வைத்து கால்மேல் ஏறி நிற்க 'ஒருவர் பாதத்தில் லட்டியால் அடிக்க' பின்பு விலங்கை அவிழ்த்து விட்டு எகிறிக் குதிக்கவைத்தல் என இந்த மாதிரி ஆறுமுறை திரும்ப திரும்ப சித்ரவதை செய்தனர். மேற்படி உதவி ஆய்வாளர் செல்வராஜ், லோகநாதன், நடராசன் ஆகிய மூவர் மட்டுமே என்னை சித்ரவதை செய்தனர். அப்போது அங்கு வந்த மேற்படி காசி என்பவர் காவலர்களைப் பார்த்து "என்ன சார் மிளகா வெடி வெடிக்குது, சத்தம் நல்லா கேட்கணும்... நீங்க அடிக்கிறது சத்தமே கேட்கவில்லை" என்று கிண்டலாக பேசினார். மதியம் சுமார் ஒரு மணி அளவில் சிவா என்பவரை போலீசார் அழைத்து வந்தனர். அப்போது காவல் நிலையத்தில் இருந்த ஒரு டி.வி.எஸ்.50 வண்டியைக் காண்பித்து விசாரித்தபோது அந்த வண்டியை சிவா என்பவர் திருடியதாக ஒப்புக் கொண்டார். அந்த வண்டியை ரூ.1200/-க்கு நான் சிவாவின் சொந்த வண்டி என நம்பி அடகுக்காக வாங்கிக் கொண்டேன் என்று நான் ஒப்புக் கொண்டேன். பிறகு காவல் நிலையத்திற்குள் இருந்த பல டி.வி.எஸ்.50 வண்டிகளைக் காண்பித்து இதையெல்லாம் நீங்கதான் திருடியதாக ஒப்புக் கொள்ளுங்கள் என்று எங்கள் இருவரையும் பார்த்து உதவி ஆய்வாளர் கேட்டார். அதற்கு சிவா ஒத்துக் கொண்டான். மேலும் சிவா போலீசாரிடம், தான் அண்மையில்தான் சிறையில் இருந்து வெளிவந்ததாகவும், தான் திருடிய இடங்களை எல்லாம் காண்பிக்கிறேன் என்றும் கூறவே அவனை அவர்கள் யாரும் பின்பு அடிக்கவில்லை. நான் திருடியதாக ஒப்புக் கொள்ளவில்லை. பிறகு என்னை மேற்படி செல்வராஜ் கடுமையாக லட்டியால் அடித்தார். வலிதாங்க முடியாமல் நான் அவர் காலில் விழுந்து நான் ஒத்துக்கொள்கிறேன் என்று சொல்லி கும்பிட்டேன். பின்பு அவர் என்னை அடிக்கவில்லை. பின்பு எங்கள் இருவரையும் சேர்த்து கைகள், கால்களில் விலங்கிட்டு ஒரு தூணில் கட்டிப்போட்டனர். பிற்பகல் 3.00 மணி அளவில் எங்கள் இருவருக்கும் லெமன் சாதம் வாங்கிக் கொடுத்தார்கள். பின்பு எங்கள் அருகிலேயே காவலுக்காக மேற்படி லோகநாதன் உட்கார்ந்து இருந்தார். இரவு 9.00 மணி அளவில் இருவருக்கும் இட்லி வாங்கிக் கொடுத்தார்கள். விலங்குடனேயே இருவரும் அன்று இரவு முழுவதும் கட்டிப் போடப்பட்டிருந்தோம்.

மறுநாள் 28.10.2001 அன்று உதவி ஆய்வாளர் செல்வராஜ், தலைமைக் காவலர் லோகநாதன் மற்றும் நடராசன் ஆகிய மூவரும் என்னையும், சிவாவையும் விலங்கிட்டு திருவண்ணாமலை அவலூர்பேட்டை அப்பம்பட்டு மற்றும் செஞ்சி அருகில் உள்ள மேலச்சேரி ஆகிய ஊர்களுக்கு சென்னைக்கு வருவதற்கு பயன்படுத்திய அதே டாடா சுமோவில் அழைத்துச் சென்றனர். அங்கெல்லாம் எந்தெந்த இடங்களில் டி.வி.எஸ்.50 வண்டிகளை திருடினார் என்பதை சிவா காவலர்களிடம் காண்பித்தார். என்னிடம் நீயும் திருடியதை ஒப்புக்கொள் என்று கேட்டனர். நான் அதற்கு மறுத்தேன். அப்போது மேற்படி செல்வராஜ் என் சாதிப் பெயரைச் சொல்லி இழிவாகத் திட்டினார். பிறகு அன்று பிற்பகல் எங்கள் இருவரையும் மீண்டும் செஞ்சி காவல் நிலையத்திற்கு கொண்டுவந்து விலங்கோடு காவல்நிலையத்தின் பின்புறம்உள்ள வராண்டாவில் உட்கார வைத்தனர்.

29.10.2001 அன்று காலை செய்தியாளர்களை அழைத்து வந்து எங்களை தனியாகவும் பின்பு எங்கள் இருவரையும் 4 டி.வி.எஸ்.50 வண்டிகளின் அருகில் உட்கார வைத்து வண்டிக்குப்பின்னால் மேற்படி செல்வராஜ், லோகநாதன், நடராசன் மற்றும் சில காவலர்கள் நிற்க புகைப் படம் எடுத்து பின்பு பத்திரிகையிலும் வெளியிட்டனர். அன்று மாலை 7.30 மணி அளவில் என்மீது செஞ்சி காவல் நிலையக் குற்றஎண்.646,647,648/28-10-2001ல் இவைகளில் இ.த.ச.பிரிவு 379லும், கா.நி.கு.எண்.652/01 ல் பிரிவு கு.வி.மு.ச.பிரிவு 41 மற்றும் 102லும் வழக்கு பதிவு செய்யப்பட்டு செஞ்சி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தினர். அங்கு என் மனைவி சுதாவும் ஆஜர்படுத்தப் பட்டார். அப்போது என் மனைவி நீதிமன்றத்தில் கூறும்போது தன்னை

www.padippakam.com

வலுக்கட்டாயமாக நான் கூட்டிச் சென்றதாகக் கூறினார். அப்போது தலைமைக் காவலர் லோகநாதன் என்பவர் என்முதுகில் தன்கையால் அழுத்திக் கொண்டு குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தினார். நான் நீதித்துறை நடுவர் மன்றத்தில் இரண்டு பேரும் விருப்பப்பட்டுதான் சென்றோம் என்றும், டி.வி.எஸ்.50 வண்டியை சிவாவிடம் இருந்து அவன் வண்டி என நம்பி அடகுக்கு வாங்கியது உண்மைதான் என்றும் சொன்னதோடு நான் எந்த வண்டியையும் திருடவில்லை என்றும் சொன்னேன். பிறகு அன்று இரவே என்னையும் மேற்படி சிவா இருவரையும் ரிமாண்டு செய்து செஞ்சி சிறையில் அடை த்தனர்.

நானும் மேற்படி சிவா என்பவரும் 11-ஆம் எண் உள்ள அறையில் அடைக்கப்பட்டோம். எங்களோடு அந்த அறையில் மொத்தம் 6 பேர் அடைக்கப்பட்டிருந்தனர். அன்றுதான் தற்சமயம் பரவலாகப் பேசப்படுகிற ரீட்டாமேரி என்பவரும் எங்களுக்குப் பிறகு அந்த செஞ்சி சிறையில் அடைக்கப்பட்டார். நாங்கள் அடைக்கப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் மேற்படி ரீட்டாமேரி ஒரு பச்சைநிற பிளாஸ்டிக் குடத்தில் நீர்த்தொட்டியில் இருந்து தண்ணீர் எடுத்துச் செல்வதைப் பார்த்தேன். அப்போது அவர் நீலநிற உடை அணிந்திருந்தார். இரண்டு நாட்களாக செஞ்சி காவல் நிலையத்தில் சித்திரவதைக்குள்ளான எனக்கு உடல்வலி காரணமாகவும் என் அறைக்கு முன் குண்டு பல்பு எரிந்து கொண்டிருந்தாலும் அன்று இரவு தூக்கம் வரவில்லை. நாங்கள் சிறைக்குள்ளே போகும்போது அன்று இரவு தலைமைக் காவலர் லாசர், காவலர்கள் அன்பழகன், ராமசாமி ஆகியோர் பணியில் இருந்தனர். அன்று இரவு சுமார் 11 மணி அளவில் காவலர் ஜெயபால் என்பவர் சிறைக்குள் வந்து என்னிடம் உங்கள் அறையில் எத்தனைபேர் இருக்கிறீர்கள் என்று விசாரித்தார். மறுநாள் காலை சுமார் காலை 6.30 மணிக்கு யசோதை என்பவர் சிறைக்குள் வந்தார்.. காலை என்னுடைய அறை சுமார் 7 மணி அளவில் திறக்கப்பட்டது. அறைக்குள் இருந்து நாங்கள் வெளியே வந்து கணக்கெடுப்பதற்காக அமர்ந்தோம். அப்போது திறந்திருந்த 16ஆம் எண் அறையினுள் மேற்படி ரீட்டாமேரி தனியாக உட்கார்ந்திருந்தார். அப்போது அவர் கஞ்சி வாங்கும்போது அவர் அணிந்திருந்த சிம்மியில் நிறைய இரத்தக்கறை இருந்ததைப் பார்த்தேன். காலை 8 மணிக்கு மீண்டும் அறைக்குள் அடைக்கப்பட்ட பின்பு அன்று காலை சுமார் 10.30 மணி அளவில் செடிக்கு தண்ணீர் விடுவதற்காக நானும் சரவணன் என்பவரும் அறைக்குள்ளிருந்து வெளியே கொண்டுவரப்பட்டோம். அப்போது கந்தவேல் குமார், சேகர், ஜெயபால் ஆகிய சிறைக் காவலர்கள் பணியில் இருந்தனர். 16 ஆம் எண் அறை எதிரில் உள்ள செடிக்கு கீழாக மேற்படி ரீட்டாமேரி முதல்நாள் அணிந்திருந்த நீலநிறதுணி சுருட்டப்பட்டு கிடந்தது. அதனை மேற்படி யசோதை எடுத்து ரீட்டாமேரி அறைக்குள் போட்டார். பின்பு நாங்கள் இருவரும் மீண்டும் அறைக்குள் அடைக்கப்பட்டோம்.

மீண்டும் மதிய உணவுக்காக நாங்கள் அறையில் இருந்து திறந்து விடப்பட்டோம். மேற்படி ரீட்டாமேரி வாந்தி எடுத்ததைப் பார்த்தேன். மேலும் அவர் காலை கஞ்சியையும், மதிய உணவையும் சாப்பிடவில்லை. அன்று மாலை 4.30 மணி அளவில் வலிதாங்காமல் ஐயோ, அம்மா என்று கத்திக் கொண்டிருந்த ரீட்டாமேரியை யசோதை கைத்தாங்கலாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். உடன் மேற்படி காவலர் சேகரும் சென்றார். அன்று இரவு சுமார் 9.00 மணிக்கு மீண்டும் ரீட்டாமேரி அறைக்குள் கொண்டுவரப்பட்டு 10வது அறையில் அடைக்கப்பட்டார். இரவு பணிக்கு வந்த கண்ணம்மா ரீட்டாமேரிக்கு பன்னும் டீயும் வாங்கிக் கொடுத்தார். இரவு முழுவதும் ரீட்டாமேரி அய்யோ -அம்மா- தாங்க முடியலையே, எரியுதே என்று கத்திக் கொண்டிருந் தார். அன்று சிறைக்குள் இருந்த எங்களால் தூங்க முடியவில்லை. காவலர் மனோகர் அந்தப் பெண்ணுக்கு ஆறுதல் கூறினார். மேற்படி லாசரும், ஜெயபாலும் ஒருவருக்கொருவர் திட்டிக் கொண்டிருந்தனர். லாசர் திட்டும் போது 'உன்னால்தான் அந்தப் பெண்ணுக்கு இப்படியாச்சு' என்று சொன்னார். அதற்கு ஜெயபால் லாசரைப் பார்த்து உனக்கு இப்ப டூட்டி இல்லை. 'நீ ஒட்டக் குடிசைக்கு போடா' என்று சொன்னார். அதற்கு லாசர், நான் ஒட்டச்சிக்கிட்ட போறேன். பறைச்சிக்கிட்டே போறேன்.. உன்னமாரி விபச்சார விடுதி வைச்சு நடத்தல என்று பதிலுக்கு கூறினார். பின்பு லாசர் படுத்து தூங்கிவிட்டார். ரீட்டாமேரி தொடர்ந்து கத்திக் கொண்டிருந்த சத்தம் கேட்டது. அடுத்தநாள் 31.10.2001 அன்று காலை பார்க்கும்போது ரீட்டாமேரி காலை நீட்டிக்கொண்டு சுவரில் சாய்ந்துகொண்டு தலைவிரி கோலமாக இருந்தார். முகமும், இடது முழங்காலும் வீக்கமாக இருந்தது.

நான் 29.10.2001 அன்று சிறைக்குள் அடைக்கப்படும்போது தலைமைக் காவலர் லாசர் உனக்கு காயம் ஏதும் இருக்கிறதா என்று கேட்டார். காவல் நிலையத்தில் வைத்து போலீசார் அடித்ததில் வலியாக இருந்த இடங்களை எல்லாம் காண்பித்தேன். 30ந்தேதியும் லாசர் அவர்களிடம் உடம்பெல்லாம் வலிக்கிறது என்று கூறினேன். அதற்கு அவர் காயம் இருந்தால் காட்டு, ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் செல்கிறேன் என்றார். பிறகு அவர் ஒரு வெள்ளை மாத்திரை கொடுத்து சுடுதண்ணீரும் கொடுத்தார். 31ம்தேதியும் உடல்வலி அதிகமாக இருந்தது. வலிதாங்காமல் அழுது கொண்டிருந்தேன். அன்று ரீட்டாமேரியை சிறையிலிருந்து ஒரு பெண் காவலர் அழைத்துச் சென்றார். அப்போதுதான் நானும் விலங்கிடப்பட்டு தேவநாதன் மற்றும் அன்பழகன் என இரு காவலர்களுடன் சிகிச்சைக்காக செஞ்சி அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப் பட்டேன். சிறைக் கதவுக்கு வெளியே முன்னால், ரீட்டாவும், பெண் காவலரும் செல்ல, நான் அவர்களுக்கு பின்னால் சிறைக் காவலர்களுடன் சென்றேன். அப்போது அங்குள்ள புங்கமரத்தடியில் இருந்து மேற்படி ஜெயபால் ஒரு மோட்டார் சைக்கிளில் ஒருவரை ஏற்றிக்கொண்டு புறப்பட்டபோது, ரீட்டாமேரி அவர்களை நோக்கி, " இதோ போறன் பாரு ... இதோ போறான் பாரு அவந்தான்..." என்று பெண் காவலரிடம் கூறினாள். எதிர்த்தார்போல் என் அண்ணன் மூர்த்தி, என் அக்கா சுமதியும் வந்தனர். அன்று செஞ்சி மருத்துவமனையில் என்னை உட்கார வைக்கும்போது கை கால் நடுங்கியது; குளிர் சுரம் இருந்தது; எனக்கு இரண்டு ஊசி போட்டார்கள். என் அக்காவிடம் உடம்புவலிக்கு தைலம் வாங்கி கொடுக்கும் படி கேட்டேன். பின்பு என் அக்காள் கேட்டுக் கொண்டதின் பேரில் சிறைக் காவலர்கள் எனது விலங்கை கழட்டி விட்டனர். பின்பு நான் சிறைக்கு கொண்டு வரப்பட்டேன். அன்று இரவு சுமார் 8.00 மணி அளவில் சிறைக் காவலர் அன்பழகன் மூவ் தைலம் கொண்டு வந்து கொடுத்தார்.

1.11.2001 அன்று காலை சுமார் 10 மணி அளவில் செஞ்சி காவல்நிலையத்தைச் சேர்ந்த ஆறுமுகம், கிருஷ்ண



படிப்பகம்

www.padippakam.com

மூர்த்தி ஆகிய இரு காவலர்களின் பாது காப்போடு நான் ஆண்மை பரிசோதனைக்காக விலங்கிடப்பட்டு விழுப்புரம் அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு ரீட்டாமேரியை மேற்படி பெண் காவருடன் பார்த்தேன். என்னுடன் வந்த காவலர் ஆறுமுகம், ஏதாவது அசம்பாவிதம் நடந்ததா என்று கேட்டதற்கும் நடக்கவில்லை என்று கூறினேன். இதையெல்லாம் ஆர்.டி.ஓ. அருகில் ஒருவர் தட்டச்சு செய்து கொண்டிருந்தார். இறுதியில் மூன்று பிரதியில் என் கையெழுத்தை வாங்கிக் கொண்டார்கள். பின்பு என்னை செல்லுக்குள் அடைத்துவிட்டனர். பின்பு ஜெயபால் என்னிடம் வந்து நான் சொன்னபடி நீ சொல்லிவிட்டாய் என்றும் உனக்கு ஏதும் ஆகாதபடி நான் பார்த்துக் கொள்கிறேன் என்றும் கூறினார். அதற்குப் பின் ஜெயபால் கொஞ்ச நாட்களாக பணிக்கு வரவே இல்லை.

எனக்கு தொடர்ந்து உடம்பு வலி இருந்துகொண்டு இருந்தது. ஏற்கனவே என் அக்காள் வாங்கிக் கொடுத்த மூவ் பாட்டில் தீர்ந்ததால் கண்ணம்மா மூலம் மற்றொரு மூவ் தைலம் வாங்கி பயன்படுத்தி வந்தேன். இருந்தும் உடம்பு வலியும், சுரமும் இருந்து கொண்டேதான் இருந்தது. ஒருநாள் செஞ்சி மருத்துவமனை டாக்டர் இளங்கோவனிடம் காண்பித்தனர். அன்றைக்கும் எனக்கு சுரம் இருந்தது. டாக்டர் இளங்கோவன் விசாரிக்கும்போது என்னை செஞ்சிகாவல் நிலையத்தில் சித்ரவதை செய்ததுபற்றி எல்லாம் அவரிடம் கூறினேன். பின்பு எனக்கு ஊசி போட்டுவிட்டு, சிறைக்குள் கொண்டுவந்து அடைத்தனர்.

என்னை என் அக்காவும், அண்ணனும் வந்து பார்த்த போதெல்லாம் ஜாமீனில் வெளியே எடுக்கும்படி கூறினேன். 12.11.2001 அன்று முற்பகல் கொடம்பாடி சுப்பிரமணி என்ற வழக்கறிஞர் என்னை சிறையில் வந்து விசாரித்தார். அப்போது அவர் என்னை மீண்டும் நீதிமன்றத்தில், அன்று ஆஜர்படுத்தப் போவதாகவும், அப்போது போலீசார் சொல்கிறபடி சொல்லாமல், ஏற்கனவே நான் நீதிமன்றத்தில் கூறியபடியே கூறவேண்டும் என்று சொன்னார். அப்போது சிவா மேற்படி வழக்கறிஞரிடம் எங்கள் மேல் போடப்பட்டுள்ள வழக்குகளின் தேதியை சொல்லமுடியுமா? என்று கேட்டார். மேலும் அவர் கூறுகையில் என்னிடம் வண்டியை கொடுத்து விட்டு போனதிலிருந்து தொடர்ந்து வேலூர் மத்திய சிறையில் இருந்து வந்ததாகவும், அண்மையில்தான் சிறையில் இருந்து வெளிவந்ததாகவும் கூறினார். எனவே எங்கள் மீது போடப்பட்டுள்ள திருட்டு வழக்கில் அந்த சமயத்தில் சம்பந்தபட்டிருக்க முடியாது என்று வாதிடமுடியும் என்று கூறினார். வழக்கறிஞர் சென்ற பின்பு மேற்படி சிவா என்னிடம், நான் வெளியே சென்று 10 நாட்களுக்குள் அவனை பிணையில் வெளியே எடுக்காவிட்டால் உன்னை எல்லா திருட்டு வழக்கிலும் சேர்த்து பழி வாங்கிவிடுவேன் என எச்சரித்தான். பின்பு அன்று 1.00 மணி அளவில் நானும் சிவாவும் செஞ்சி நீதித்துறை நடுவர் மன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டோம். அப்போது 26.11.2001 வரை எங்களுடைய நீதிமன்றக்காவல் நீட்டிக்கப்பட்டது. மீண்டும் மேற்படி வழக்கறிஞர் 16.11.2001 அன்று காலை 10.00 மணி அளவில் என்னை வந்து பார்த்தார். அப்போது அவர் என்னிடம் வழக்கறிஞர் கட்டணம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்று கூறினார். நான் வெளியே வந்ததும் கொடுத்து விடுகிறேன் என்று அவரிடம் சொன்னேன். சிறிது நேரத்தில் சிறைக்காவலர் ஜெயபால் சில நாட்கள் கழித்து அன்றுதான் சிறைக்கு வந்தார். வந்தவர் என்னைப் பார்த்து அன்று ஏ.எஸ்.பி. விசாரிக்க வரப் போவதாகவும், அவர் அவருக்கு வேண்டியவர் தான் என்றும் ஆர்.டி.ஓ விசாரணையில் சொன்னதுபோல் ஏ.எஸ்.பி அவர்களிடமும் சொல்ல வேண்டும் என்றும் மற்றதை எல்லாம்அவர் கவனித்துக் கொள்வதாகவும் கூறினார். அன்று பிற்பகல் ஏ.எஸ்.பி சிறைச்சாலைக்கு வந்தார். விசாரணைக்காக என்னை அழைக்கும்போது மேற்படி லாசர் என்பவர் ஜெயபால் நினைத்தால் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்றும் எனவே ஆர்.டி.ஓ. விசாரணையில் சொன்னதுபோல் ஏ.எஸ்.பியிடமும் சொல்ல வேண்டும் என்று கூறினார். ஏ.எஸ்.பி அவர்கள் அனைத்து சிறைக்காவலர்கள் முன்னிலையில் என்னைக் கூப்பிட்டு அந்த பெண்ணுக்கு இங்கு ஏதாவது நடந்ததா என்று மட்டும் கேட்டார். நான் அதற்கு அப்படி எதுவும் நடக்கவில்லை என்று கூறவே மீண்டும் நான் சிறையில் அடைக்கப் பட்டேன்.

அன்று மாலை 6.00 மணியளவில் நான் செஞ்சி சிறையிலிருந்து பிணையில் விடுதலை ஆனேன். 17.11.2001 அன்றிலிருந்து நான் தினமும் செஞ்சி நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு கையெழுத்து போட்டு வந்தேன். வெளியே வந்ததும் நான் என் அக்கா, உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் ரீட்டாமேரி செஞ்சி சிறைக்குள் வைத்து கற்பழிக்கப்பட்டது உண்மை தான் என்று கூறி வந்தேன். ஐ.ஜி திலகவதி அவர்கள் விசாரணைக்காக செஞ்சிச்சிறைக்கு வந்தது நன்கு தெரியும் இருந்தாலும் அவர்களிடம் போய் உண்மையைச் சொல்வதற்கு எனக்கு பயமாக இருந்தது. என்னைப் பற்றி எப்படியோ தெரிந்துக் கொண்ட வழக்குரைஞர் பி.வி. லூசி என்பவர் 1.12.2001 அன்று நான் நீதிமன்றத்தில் கையெழுத்து போட்டுவிட்டு திரும்பும்போது, சக்கராபுரத்தைச் சேர்ந்த ராஜா மூலம் என்னை சந்தித்தார். அவர்களிடம் சிறைச்சாலைக்குள் நடந்த உண்மைகளையெல்லாம் கூறினேன். பின்பு அவர்கள் எனக்கு உண்மையை கூறுவதற்கு தைரியம் சொன்னார்கள். பின்பு பி.வி.லூசி மூலம் திருவண்ணாமலையில் வழக்குரைஞர் இ.எஸ்.ஜோஸ் அவர்களை சந்தித்தேன். பின்பு அவர்கள் இருவரின் உதவியோடு சென்னை சென்று ஐ.ஜி. திலகவதியை 3.12.2001 அன்று அவர்களுடைய அலுவலகத்தில் சந்தித்து எனக்கு தெரிந்த உண்மைகளையெல்லாம் கூறினேன். மேலும் என்னையும் என் மனைவி சுதாவையும் பிரித்து வைத்து என் மீது பொய் வழக்கு போட்டு செஞ்சி காவல் நிலையத்தில் சித்ரவதை செய்ததையும் அவர்களிடம் கூறினேன். அவர்கள் என்னையும் என் மனைவியையும சேர்த்து வைக்க முயற்சிப்பதாகக்கூறினார்கள். அடுத்து 6.12.2001 அன்று திண்டிவனம் வீராணம் இல்லத்தில் சி.பி.சி.ஐ.டி. காவல் அதிகாரிகள் என்னிடம் விசாரித்தனர். அன்று மாலை செஞ்சி சிறைக் காவலர்கள் ஜெயபால், லாசர், ராமசாமி, அன்பழகன், சேகர் ஆகிய ஐவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதாக கேள்விப்பட்டேன். 6.12.2001 அன்று நான் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த புகார் மனுவை விழுப்புர மாவட்ட ஆட்சியருக்கும், விழுப்புர மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும் பதிவு தபாலில் அனுப்பி வைத்தேன்.

9.12.2001 அன்று நான் வழக்குரைஞர் இ.எஸ். ஜோஸ் அவர்களுடன் செஞ்சி நீதிமன்றம் அருகில் வந்தேன். அங்கு நான், பேராசிரியர் பா. கல்யாணி, ஆசிரியர் மு. கந்தசாமி, புது

www.padippakam.com

வையிலிருந்து வந்திருந்த கோ. சுகுமாரன், அவலூர்பேட்டையிலிருந்து வந்திருந்த பி.வி. லூசி ஆகியவர்களோடு செஞ்சி மதிமுக பிரமுகர் திரு. குமார் அவர்களை சந்தித்தேன். அவர்கள் அனைவரிடமும் என் மனைவி சுதாவுடன் நான் மீண்டும் வாழ்வதற்கு உதவும்படி வேண்டினேன். அப்போது திரு. குமார் அவர்கள் அங்கிருந்த அனைவரிடமும் மேற்படி என் மனைவியின் பெற்றோர்கள் மற்றும் சித்தாப்பாக்களிடம் பேசி முயற்சிகள் மேற்கொள்வதாக உறுதி அளித்தார். மேலும் என் மனைவி சுதாவுக்கு அவளுடைய பெற்றோர்கள் வேறு திருமணம் செய்து வைக்க முயற்சி நடப்பதாக கூறினேன். அதற்கும் மேற்படி மதிமுக பிரமுகர் அவர்கள் அவ்வாறு திருமணம் எதுவும் நடந்துவிடாமல் தடுப்பதற்கு ஆவன செய்வதாக கூறினார்கள்.

*11.12.2001* அன்று காலை மேற்படி குமார் அவர்கள் பேராசிரியர் பா. கல்யாணி அவர்களை தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு பேசியுள்ளார். அப்போது என்னுடைய திருமணம் தொடர்பாக *16.12.2001* அன்று பஞ்சாயத்து பேசலாம் என்றும், அதற்கு பெண்ணின் பெற்றோர் மற்றும் சித்தாப்பாக்கள் ஒத்துக் கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார்கள். மேலும் பெண்ணின் சித்தாப்பா காசி என்பவரே மேற்படி குமார் மூலம் பேராசிரியர் கல்யாணியிடம் தொலைபேசியுள்ளார். அப்போது அவர் என்னைப்பற்றி அவதூறான கருத்துக்களை கூறியுள்ளார். இருப்பினும் பேராசிரியர் கேட்டுக் கொண்டதற்கிணங்க *16.12.2001* அன்று பஞ்சாயத்து பேச ஒப்புக்கொண்டதாக காசி கூறியதாக பேராசிரியர் கல்யாணி என்னிடம் கூறினார்.

*11.12.2001* அன்று நான் பார்வையில் குறிப்பிட்டுள்ள புகார் மனுவுடன் வழக்குரைஞர் இ.எஸ்.ஜோஸ் என்பவருடன் பகல் சுமார் 12 மணி அளவில் செஞ்சி உதவி காவல் கண்காணிப்பாளர் தினகரன் அவர்களை அவருடைய அலுவலகத்தில் போய் பார்த்தேன். நான் முதலில் எனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் தொடர்பான புகார் மனுவை மேற்படி காவல் அதிகாரி அவர்களிடம் கொடுத்தேன். புகார் மனுவை படித்துப் பார்த்துவிட்டு முன்பின் தெரியாத ஒருவர் கொடுத்த வண்டியை நீ எப்படி வாங்கலாம் என்று என்னிடம் கேட்டார். கிரையத்துக்கு வாங்கவில்லை என்றும் அடமானமாகத்தான் வாங்கினேன் என்றும் கூறினேன். பின்பு அவர் அன்று அந்தப் பெண் என் முன்னிலையில் என்ன சொன்னாள் என்று கூறினேன். மேலும் நான் கூறுகையில் அவளுடைய பெற்றோருக்குப் பயந்தும், மேலும் எனக்கு யாரும் ஆதரவு இல்லை என்ற எண்ணத்தில் தான் அவள் அப்படி கூறினாள் என்று கூறினேன். பின்பு என்னை வெளியில் இருக்கும்படி மேற்படி அதிகாரி சொன்னதின்பேரில் நான் வெளியே வந்துவிட்டேன்.

மேற்படி ஜோஸ் அவர்கள் சுமார் 2 மணி நேரம் மேற்படி காவல்அதிகாரி அவர்களிடம் பேசிவிட்டு வெளியே வந்தார். வெளியே வந்தவர் என்னிடம் கூறுகையில், மனிதாபிமான அடிப்படையில் இந்தப் பிரச்சனையை அணுகவேண்டும் எனவும், உண்மையிலே அந்தப் பெண் சுதா இந்தப் பையனை விரும்பவில்லையா என்பதை அந்த பெண் ஒரு சுதந்திரமான சூழ்நிலையில் இருக்கும்போது கேட்டு அறியவேண்டும் என்று கூறியதாகவும் கூறினார். மேலும் கூறுகையில், ரூ.1200/-ஐக் கொடுத்து மேற்படி சிவா என்பவரிடம் அடமானமாகக்கூட வண்டியை வாங்கியது சட்டப்படி வேண்டுமானால் ஒரு குற்றமாக இருக்கலாம் என்றும் மேலும் அவர் மீது போடப்பட்ட மற்ற திருட்டு சம்பந்தமான வழக்குகள் அனைத்தும் புனையப்பட்டவையே என தெளிவாக தெரிகிறது என்றும், கூறியதாக என்னிடம் ஜோஸ் கூறினார். மேலும் ரீட்டா வழக்கில் தானே முன்வந்து உண்மைகளைச் சொல்லும் ஏகாம்பரம் நியாயத்திற்காக நிற்பவராகத் தெரிகிறது என்றும் அவர் நிச்சயமாக இதுபோன்ற திருட்டு சம்பவங்களில் ஈடுபடமாட்டார் என வாதாடியதாகவும் கூறினார். மேலும் அவர் கூறுகையில் ஏகாம்பரம் மீதுள்ள வழக்குகள் அனைத்தையும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும் கூறினார்.

மேற்படி காவல் அதிகாரி அவர்கள் ஏகாம்பரம் கொடுத்த புகாரின் அடிப்படையில் பார்க்கும்போது ஏகாம்பரத்தை காவல் நிலையத்தில் வைத்து துன்புறுத்தியிருக்கலாம் என்பதைத் தான் ஒப்புக் கொள்வதாகவும் ஆனால் திருட்டு வழக்குகளில் இப்படித்தான் செய்தாக வேண்டியிருக்கிறது என்றும் இதுபோலத்தான் தமிழ்நாட்டில் எல்லா காவல் நிலையங்களிலும் நடைபெறுகிறது என்றும் கூறியுள்ளார். மேலும் அவர் கூறுகையில், எனக்குக் கீழே உள்ள காவல் அதிகாரிகள் நல்லெண்ணத்தோடு நடவடிக்கைகள் எடுத்துள்ளபடியால் நான் அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். சித்திரவரை தொடர்பாக நீங்கள் நடவடிக்கை எடுக்க மேல் அதிகாரிகளை அணுகினால் நான் பெண் கடத்தல் தொடர்பான வழக்கில் கடுமையாக இருக்க வேண்டிவரும் என்று கூறியுள்ளார். சுதா கர்ப்பம் கலைத்தது தொடர்பான விசயத்தை நீங்கள் கொண்டுவந்தால் ஏகாம்பரம் மேல் கற்பழிப்பு வழக்கை போடவேண்டி வரும் என்று அவர் வழக்குரைஞர் ஜோஸ் அவர்களிடம் கூறியுள்ளார்.

*13.12.2001* அன்று நானும் செஞ்சி சிறையில் வேலைபார்த்த யசோதை என்பவரும் திண்டிவனம் நீதித்துறை நடுவர் மன்றம் - II க்கு அழைத்து செல்லப்பட்டு, அங்கு நீதிபதி முன்பு ரீட்டாமேரி கற்பழிப்பு சம்பவம் தொடர்பாக எங்களுக்குத் தெரிந்த உண்மைகளை வாக்குமூலமாக அளித்தோம். அன்று மாலை நான் செஞ்சி சென்றபோது என் மனைவி சுதாவுக்கும் அவர் உறவுக்கார பையன் பொன்னுசாமிக்கும் அவசர, அவசரமாக தீவனூர் கோயிலில் வைத்து திருமணம் நடந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். என் வாழ்க்கையில் எனக்கிருந்த நம்பிக்கையை இழந்துவிட்டேன். எனக்கு நேர்ந்த இந்த நீதியை என்னால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. ஐ.ஜி. திலகவதி போன்றவர்கள் எனக்கு அளித்த வாக்குறுதியை நான் பெரிதாக எண்ணி நம்பிக்கையோடு இருந்தேன். இவ்வளவு விரைவில் நான் இப்படி ஏமாற்றப்பட்டு பெரும் அவமானத்திற்குள்ளாவேன் என்று எதிர்பார்க்கவே இல்லை. நான் காவல்துறை மீதும், உறவினர்கள் மீதும் வைத்திருந்த நம்பிக்கை வீணானது. இவ்வளவு பெரிய இழப்பை எப்படி தொடர்ந்து தாங்கிக் கொள்வேன் என்று தெரியவில்லை. இருப்பினும் மாநில அளவில் மிகப்பெரும் பொறுப்பிலுள்ள தங்கள் மூலம் எனக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் இவ்வளவு விரிவான புகார் மனுவை எழுதியுள்ளேன்..

தங்கள் உண்மையுள்ள ,

**ஏகாம்பரம்.**



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு பொழுது தருவாயா எனதருமைத் தாய் நாடே...!

❒ சடகோபன் ❒

பச்சை வயற்பரப்பில்
பால்நிலவு இறங்கிவந்து
இச்சை தீர்த்துக்கொள்ளும்
இன்பப் பொழுதொன்றில்
தெம்மாங்கு பாடிவரும்
தென்றலோடு பேசி
முற்றத்து மல்லிகையை
மூக்குமுட்ட முகர்ந்தபடி
பக்கத்தேயமர்ந்து
பாடலொன்று எழுதுதற்கு
ஒரு பொழுது தருவாயா
எனதருமைத் தாய் நாடே...!

செம்மணி வெளியெங்கும்
சின்னவரைப் புதைத்து
அம்மணமாக்கி எம்
கண்மணிகள் கதை முடித்து
கைதாக்கிக் காணாமற் செய்து
காலம் பல கடத்த
நனைகின்ற விழிகளோடு
நம்பியே காத்திருக்கும்
அன்னையர்க்குத் தந்தையர்க்கு
அன்பான மனைவியர்க்கு
தந்தைமுகம் பார்க்கவென்று
தவித்திருக்கும் குழந்தைகட்கு
உடன்பிறந்தோர் உற்றத்தார்
ஊர்மனைக்கெல்லாம்
உண்மையைச் சொல்லுகின்ற
ஒரு பொழுது தருவாயா
எனதருமைத் தாய் நாடே...!

விசாரணையில்லை
விடுதலையில்லை
கம்பிகள் பின்னே
காலம் கடக்க
வயதினைத் தொலைத்து
வண்ணக்கனவுகள் தொலைத்து
கறுத்த நாட்களும்
மரத்த மனதுமாய்
சிறைகளில் சிந்த
கண்ணீரே இன்றி
ஒளியினைத் தேடும்
விழிகளிற்கெல்லாம்
விளக்கினை ஏத்த
ஒரு பொழுது தருவாயா
எனதருமைத் தாய் நாடே...!

இரணைமடுத் தாயும்
கருணைமடு மாதாவும்
மாந்தை ஈச்சரனும்
மகிழ்வோடு ஈர்ந்தளித்த
மகத்தான வாழ்விழந்து
சோமாலியாக் குழந்தை கூட
சோகமாய்ப் பார்த்து இரங்குதற்கு
ஓர் குழந்தையென்ன ஓராயிரம்
கிடைக்கின்ற வன்னியிலே
வாய்க்கால் நீர்குடித்து
வருகின்ற காற்றின் ஈரம்
வறண்டுபோன வாழ்வோடு
போராடும் இதயங்களை
இதமாக நனைக்கின்ற
ஒரு பொழுது தருவாயா
எனதருமைத் தாய் நாடே...!

ஆச்சியும் அப்புவும்
அள்ளிக்குளித்த கிணறு
அண்ணனும் அக்கையும்
ஆடிமகிழந்த முற்றம்
தம்பியும் தங்கையும்
தவழ்ந்துவளர்ந்த திண்ணை
அத்தனையும் அங்குவிட்டு
அவதியாய் ஓடிவந்து
''அகதிமுகாம் சிறை'' யென்று
அகராதிக்குச் சொல்கொடுத்து
அகதி நிலையங்களில்
அடைபட்டோர்க்கெல்லாம்
கதவு திறக்கப்பாடுதற்கு
ஒரு பொழுது தருவாயா
எனதருமைத் தாய் நாடே...!



அடையாள அட்டை
வதிவிடப் பதிவு
வார்த்தையிலேயே சேர்க்க
நாலு சிங்களச் சொல்லு
அத்தனையும்
பைதனில் பத்திரப்படுத்தி
பாதிவழிகளில் இறங்கி ஏறயிலும்
படுத்திருந்து சேர்க்காக
கனவு காண்கையிலும்
தட்டிக்கேட்பவர்க்கெல்லாம்
சளைக்காமல் எடுத்துக்காட்டி
உடம்பு தடவும் உரிமையையும்
அவர்களிடம் கொடுத்து
அடிமையாகிப் போனவாழ்வு
ஒழிந்ததென்று பாடுகின்ற
ஒரு பொழுது தருவாயா
எனதருமைத் தாய் நாடே...!

'ஷெல்' வருமோ
செவிடுபடுத்தி
நாளை செத்தவீடோ
பல் விழுவதாய்
பாட்டிகண்ட கனவு
பலித்திடுமோ
வானம் பிளந்துவந்து
விமானம் விழுந்திடுமோ
கண்ணிவெடியில் சிக்கி
கால்பாதி முக்கால் போயிடுமோ
என்றெல்லாம் பயந்தேங்கும்
இந்தப் பொழுதுகள் போய்...

பச்சை வயற்பரப்பில்
பால்நிலவு இறங்கிவந்து
இச்சை தீர்த்துக் கொள்ளும்
இன்பப் பொழுதொன்றில்
தெம்மாங்கு பாடிவரும்
தென்றலோடு பேசி
முற்றத்து மல்லிகையை
மூக்குமுட்ட முகர்ந்தபடி.
பக்கத்தேயமர்ந்து
பாடலொன்று எழுதுதற்கு
ஒரு பொழுது தருவாயா
எனதருமைத் தாய் நாடே...

நன்றி: மூன்றாவது மனிதன்
புகைப்படம்:செந்தமிழினியன்

படிப்பகம்

www.padippakam.com


Vallinam - Tamil Quarterly Vol-I, Issue-1 Price Rs.20/-



# With Best Compliments from :

Suryan



Jyothi Canteen Burners





## ALPHA AGENCIES

**DISTRIBUTORS FOR :**

SURYA SAKTHI
GAS STOVE

MAMATA ALERT
GAS TUBES

NOVA SURYA
GAS LIGHTERS

JYOTI
CANTEEN BURNERS

**Show Room**
**No. 135, Anna Salai**
**Ph : 0413 - 330837**

**Wholesale Point**
**No. 65, Big Bramin Street**
**Ph : 0413 - 222110**


Edited and Published by G. Pounida, No. 9, Y-Block, Govt. Quarters, Lawspet,Pondicherry-605 008. Ph : (0413) 257151
Printed by R. Srinivasan at Global Graphic, No. 12?, IInd Floor, Thiruvalluvar Salai Pillai Thottam, Pondicherry -605 013.

படிப்பகம்